ஸ்ரீயுத் G. K. கோகலே.

கோபால கிருஷ்ண கோகலே.

பூனா-பெர்குஸன் கலாசாலைத்தலைவர்

ஆர். பி. பராஞ்சபே, எம். ஏ., பீ. எஸ்ஸி.,

அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது.

உறையூர்-வே. கோவிந்தசாமிராஜு

அவர்களால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

MADRAS

உ-வே. அரங்கசாமிராஜு அவர்களால்,

சென்னை:

இண்டியா பிரிண்டிங் வொர்க்ஸில் பதிப்பிக்கப்பட்டது.

PRICE, 8 ANNAS.] 1915. [விலை, அணா 8.

58942

PRINTED AT THE INDIA PRINTING WORKS, MADRAS.

முகவுரை.

சிறந்த தேசாபிமானியாகவும், இராச்சிய தந்திரியாகவும், பண்டிதராகவும், நாவலராகவும் விளங்கிய ஸ்ரீமான். கோபால கிருஷ்ண கோகலேயின் சரித்திரத்தை இந்தியர்கள் ஒவ்வொருவரும் கற்றறிதல் கடனாகும். அவர் நமது தேசத்தின் க்ஷேமத்துக்காக உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் தத்தம் செய்தார். நம் எல்லோருக்கும் அவர் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கின்றார். அவருடைய சரித்திரமானது மற்றவர்களுக்கு நீதிபோதித்து அவர்களை நல்வழியில் நடத்துவதற்கு ஒரு தூண்டுகோலாகும். அதைத் தமிழ்நாட்டார் எல்லோரும் படித்துப் பயன்பெறவேண்டும் என்னுங் கருத்துடன் இச்சிறுநூல் ஆங்கிலத்தினின்றும் எளிய தமிழ் நடையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அவருடைய சரித்திரங்கள் ஒன்றிரண்டு முன்பே தமிழில் வெளிவந்திருப்பினும் உள்ளதை யுள்ளபடி சுருங்கக் கூறுதலில் இந்நூல் அவற்றினும் சிறந்ததாகும். அன்றியும் இது ஸ்ரீமான். கோகலேயின் மாணுக்கரும் பின்பு நண்பருமாயிருந்து, அவரோடு நெருங்கிப்பழகி, அவருடைய குணாதிசயங்களை உள்ளவாறறிந்த பூனா-பேர்கூஸன் கலாசாலைத்தலைவர் ஸ்ரீமான். ஆர். பி. பராஞ்சபே * அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற நூலின் மொழிபெயர்ப்பாகும்.

இந்நூலைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு எனக்கு அநுமதி தந்து, அச்சிடுவதற்கு வேறுசில உதவியும் புரிந்த ஸ்ரீமான். ஆர். பி. பராஞ்சபே, எம். ஏ., பீ. எஸ்சி., அவர்களிடத்தும், எனது கையெழுத்துப் பிரதியைத் திருத்திக்கொடுத்தவரும், எனது தமிழாசிரியரும், திருச்சி எஸ். பி. ஜி. கலாசாலைத் தமிழ்ப்பண்டிதருமான வித்துவான் ஸ்ரீமத். மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களிடத்தும், இச்சரிதத்தை அச்சிடுவதற்கு என்னைத்தூண்டி அச்சிடுந் தொழிலை மேற்கொண்டவருமான எனது தமையனார் உறையூர் வே. அரங்கசாமிராஜு அவர்களிடத்தும் நான் மிகவும் நன்றி பாராட்டுகின்றேன்.

20௳ டிசம்பர்௴ 1915. உ-வே. கோவிந்தசாமிராஜு.

---

* இச்சரித்திரத்தில் Ranade, Gokhale, Bhandarkar, Agarkar Apte, Paranjpye, Sathe என்று ஆங்கிலத்தில் எழுதப்படும் சொற்கள் மூலபாஷையில் அவைகள் உச்சரிக்கப்படுவது போலவே தமிழிலும், முறையே ரானடே, கோகலே, பாண்டாரகர, ஆகரகர, ஆபடே, பராஞ்சபே, ஸாடே என எழுதப்பட்டிருக்கின்றன.

CONTENTS.

பொருளடக்கம்.

பக்கம்.

1. Secret of Gokhale's Influence : கோகலேயினது செல்வாக்கின் இரகசியம் 2
2. Early Life : இளமைக்காலம் 4
3. Feeling his way : அவர் வழிதேடுதல் 6
4. Joins the Deccan Education Society : தக்கணத்து வித்தியா சங்கத்திற் சேர்தல் ... 9
5. Teacher of Mathematics : கணிதசாஸ்திர போதகர் 14
6. Teacher of English : ஆங்கில போதகர் ... 16
7. As an English Writer : ஆங்கில பண்டிதர் ... 19
8. As a Speaker : பிரசங்கி 22
9. As a Teacher of History : சரித்திர போதகர் ... 24
10. As an Economist : செல்வநூல் போதகர் ... 26
11. Work of College Organization : கலாசாலையை ஒழுங்குபெறச் செய்தல் 28
12. Intercourse with students : மாணாக்கர்களோடு பழகுதல் 29
13. Work in the Bombay University : பம்பாய் சர்வகலாசங்கத்திற் செய்தவேலை 31
14. Journalism ; Association with Agarkar : பத்திரிகை நடத்துதல் : ஆகரகரவோடு கூட்டுறவு ... 33
15. Social Reform : ஆசார திருத்தம் 36
16. Political work—Gokhale and Tilak : இராஜீய வேலை ; கோகலேயும் திலகரும். 38
17. Tilak leaves the Deccan Education Society : ஸ்ரீ திலகர் தக்காணத்துக் கல்விச் சங்கத்தைவிட்டு நீங்குதல் 39
18. Tilak's Methods : திலகரின் போக்கு 42

பக்கம்.

19. Gokhale's Methods : கோகலேயின் போக்கு ... 45
20. Sarvajanik Sabha : சர்வஜன சபை 47
21. Welby Commission : வெல்பி ஆராய்ச்சிச் சபை ... 50
22. The Poona Murders and Gokhale's Apology : பூனா கொலைகளும் கோகலே மன்னிப்புக் கேட்டதும் 52
23. Plague Commission : மகாமாரி ஆராய்ச்சிச் சபை 54
24. Bombay Legislative Council ; Municipal Works: பம்பாய்ச் சட்டநிரூபணசபை ; நகரவேலை ... 56
25. Land Alienation Bill : நிலப்பராதீன மசோதா ... 58
26. Imperial Legislative Council;Budget Speeches: இராஜப்பிரதிநிதி சட்டநிரூபணசபை ; வரவு செலவு கணக்குப் பிரசங்கம் 60
27. Universities Bill ; Validation Bill : சர்வகலா சங்கமசோதா ; நிர்ப்பந்தமசோதா ... 63
28. Retirement from the Deccan Education Society : தக்காணத்துக் கல்விச சங்கத்தினின்று நீங்குதல் 68
29. Educational methods and Ideals of the Deccan Education Society : தக்காணத்துக் கல்விச சங்கத்தின் கல்வி முறையும் நோக்கங்களும் 69
30. President of the Benares Congress : காசிக் காங்கிரஸின் சபாநாயகர் 72
31. Gokhale's visit to England ; Morley-Minto Reforms : கோகலே இங்கிலாந்துக்குப் போதல் ; மார்லி—மிண்டோ திருத்தங்கள் ... 74
32. Free and Compulsory Education : சம்பளமில்லாத கட்டாயப் படிப்பு 76
33. Visit to South Africa : தென்னாபிரிக்காவுக்குப் போதல் 78

பக்கம்.

34. Public Service Commission : பொது உத்தியோக ஆராய்ச்சிச்சபை 84
35. Servants of India Society : இந்திய ஊழியர் சங்கம் 86
36. Ranade Economic Institute : ரானடே பொருளாதார சங்கம் 91
37. Congress Compromise : காங்கிரஸ் சமாதானம்.... 93
38. Last Illness : கடைசி வியாதி 97
39 Private Life and Opinion : தனிவாழ்க்கையும் கருத்தும் 100
40. General Remarks : பொதுக்குறிப்புகள் . 103
41. Honours and Titles : கௌரவங்களும் பட்டங்களும் 104
42 Conclusion : முடிவு 108

படங்களின் அட்டவணை.

பக்கம்.

1. ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே. முன்படம்.
2. பூனா-பெர்குஸன் கலாசாலை 28
3. நியாயாதிபதி ஸ்ரீமான். எம். ஜி. ரானடே 47
4. 1902-வருஷத்தில், கோகலே 69
5. காலஞ்சென்ற ஸ்ரீமான். சிவராம் ஹரி ஸாடே 86
6 கனம் ஸ்ரீமான் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரி 88

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
10	19	ஸ்ரீமான், திலகரும, ஸ்ரீமான	ஸ்ரீமான். திலகரும், ஸ்ரீமான்.
16	6	லாமர் ஜூர் மணமகன்"	" லாமாஜூா மணமகள் "
24	25	மாணுக்கா	மாணுககர்
30	9	தக்கவாகளான.	தககவாகளான
31	21	சவகாசம்	அவகாசம்
32	15	பாடசக்குறிப்	பாடககுறிப்
33	22	யாய்	யராய்
42	19	திலகர் சர்வஜன சபை	திலகர், சர்வஜனசபை
44	14	திலக்கருசகும் கோக லேயுக்	திலகருககும கோகலேக்
45	25	பெரும்பொழுது	பெறும் பொழுது
48	27	சுருக்கென்று	சுறுக்கென்று
49	10	செயதுவிட்டார்	செய்துவிட்டார்.
52	6	தான்செய்த	தாம் செய்த
,,	11	முடிவடைந்திருக்கும்,	முடிவடைந்திருக்கும்.
54	23-4	ஸர் என் ஜூர்க்ரீக்	ஸர் என். ஜூர் கரீக
57	7	ப்ரசிடண்ட்	ப்ரசிடெண்ட்
59	19	இக்கட்டுப பாட்டுக்	இக் கட்டுப்பாட்டுக்
61	9	பாதைகாகச	பாதைக்காகச
63	26	அறிய	அரிய
,,	27	கோலாகாவாவது	கோலாகவாவது
64	26	இன்னம்	இன்னும்
65	12	உணர்வாராக.	உணர்வார்களாக.
,,	24	சபை	சபைகள்
,,	25	இருந்தது.	இருந்தன.
70	17	லாரட் ரீ	லார்ட் ரீ
71	13	கேள்விப்டுவது	கேள்விப்படுவது
,,	17	ஸ்ரீமான் திலகர்.	ஸ்ரீமான். திலகர்
80	24	சமூகத்தார்	சமூகத்தார்
82	23	பொருத்துக்கொண்டு	பொறுத்துக்கொண்டு
83	12	வியாதயஸ்தன்	வியாதியஸ்தன்
90	17	சீர்ப்படுத்துதற்குறிய	சீர்ப்படுததுதற்குரிய
92	17	நிறப்புவதற்குத்	நிரப்புவதற்குத்
102	19	Theoshophi	Theosophi
104	13	தடைப்பட்	தடைபட்

"வாசாலம்," சுதந்தரம்" என்பவற்றை முறையே "வாக கலங்காரம்," "சுதந்திரம" என்று திருததிக்கொள்க

Gopal Krishna Gokhale.

கோபால கிருஷ்ண கோகலே.

பெப்ருவரிமீ 20-ம் தேதி முதல், இந்தியாவில் ஒவ்வொரு இடத்திலும் " இந்திய பொதுஜன வாழ்க்கையின் சூரியன் அஸ்தமித்துவிட்டது " என்கிற கூக்குரலே கேட்கிறது. இத்தேசத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும துக்கங்கொண்டாடிய சமாசாரங்கள் ஸ்ரீமான். கோகலேயின் குடும்பத்திலும் இந்திய ஊழியர் சங்கத்திலும் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. இங்கிலந்திலிருந்தும் தென்னாபிரிகாவிலிருந்தும் இச்சமாசாரங்களே வருகின்றன. மேன்மைபொருந்திய சக்கரவர்த்தியவர்களும், இந்தியா மந்திரி யவர்களும், இராஜப்பிரதிநிதி யவர்களும், தேசத்திலுள்ள பெரியவர்கள் எல்லோரும் தங்களது மனப்பூர்வமான் அநுதாபத்தைத் தெரிவிக்கிறார்கள். அரசராயினார்க்கன்றி இவ்வாறு எங்கும் துக்கம் பாராட்டுவதை எப்பொழுதும் காண்பது அரிது. இந்தியாவிற் சில இடங்களில் இவரை நேரிலே அரிதாகக் கண்டவர்களே இவர் இறந்துபோனமைக்காக இவ்வளவு வருத்தப்படுவார்களாயின், இவர் தங்களுக்கு இடையில் வசிக்கப்பெற்றவர்களும், இவருடைய பல முயற்சிகளிலும் இவரோடு நெருங்கிச் சகவாசித்தவர்களுமான தக்காணவித்தியாசங்கம், இந்திய ஊழியர் சங்கம் என்பவற்றின்

ஆயுட்கால அங்கத்தினர் (life-member) களைப்போன்ற வர்கள் எவ்வளவு வருத்தப்படவேண்டுமென்பதை யூகித்து அறிந்துகொள்ளலாம். அவர்கள் இவருடைய தாழ்மை யான ஏவலாளர்களாயினும், மூதுரைக்கு மாறுபாடாக, அவ ரையே ஆட்சேபணையில்லாமல் தலைவராகக் கருதியிருந் தார்கள். அவர்களுக்கு இவருடைய வார்த்தையே சட்டம்; இவருடைய சிறிய விருப்பமும் முடிவான கட்டளை; இவ ருடைய புத்திமதியே சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளப் படுவது. நாம மனத்தில் உணர்வதை எழுதுவது முடியாத காரியம்; நாம உபயோகிக்கலாகும் வார்த்தைகள் முன்பே உபயோகிக்கபபட்டிருப்பினும, அவைகள் வெளியில் உள்ள வர்களைக் காட்டிலும் எங்களுக்கு ஆழ்ந்த கருத்தைக் கொண்டுள்ளன.

SECRET OF GOKHALE'S INFLUENCE.

கோகலேயினது செல்வாக்கின் இரகசியம்.

அவர் இறந்தபொழுது விசேஷமாய்க் காட்டப்பட்ட துக்கம் அவருடைய செல்வாக்குக்கு ஒரு அறிகுறி யாக மாத்திரம் இருக்கிறது. கோகலேயினது செல்வாக் கின் இரகசியம் என்ன? நாம் "ஸ்ரீமான்." (மிஸ்டர்) என் னும் அடைமொழியைச் சரித்திரத்தில் பேர்போன ஒரு பெயரோடுசேர்ப்பது தகுதியற்றதென்று தள்ளிவிட்டோம். அவருடைய வாழ்க்கையில் இந்தியாவிலேயே, பொதுஜன வாதத்தில் இணைசொல்லப்படாத பகையால் அவர் பல முறை எதிர்க்கப்பட்டார். இராஜீய விவகாரங்களில் இந்த எதிர்ப்பு ஒரு பட்சத்திலிருந்து வரவில்லை. இன்னும் அதிக கொடுஞ்சொற்கள் அவருடைய இந்திய விரோதிகளிட

பிருந்து கிளம்பின. ஆயினும், அவர் மரணத்துக்குப்பின் இவ்வெதிர்ப்புகளெல்லாம் தாமாகவே ஒழிந்துபோயின. இதில் " இறந்தாரைப்பற்றி நன்மையொழிய வேறொன்றும் பேசாதே" என்று ஏவுகிற சாமானிய மரியாதையைவிட ஆழ்ந்திருக்கும் வேறொன்றினால் விரைவான இம்மாறுபாடு உண்டாயிற்று. இக்காலத்தில் கோகலேக்கு விரோதமாகச் சொல்லும் ஒரு வார்த்தை பதின்மடங்கு பலத்துடன் தம மீதே திரும்பிவரக்கூடும் என்று அவருடைய விரோதிகள் அறிந்தபொழுதே, அவர்கள் பொதுஜன உணர்ச்சியைச் சரியாய் அறிந்து கொண்டார்கள். இந்தியர்கள் உண்மையாகவே நெஞ்சில் வைராக்கியம உள்ளவர்கள். உண்மையான பரித்தியாகத்தையும், ஓர் இலட்சியத்தில் விடாதபற்று வைத்திருப்பதையும், அந்த இலட்சியத்தை அடைவதற்கு இடைவிடாது முயல்வதையும் இந்தியர் அறிந்து புகழ்கிறார்கள். இதைப்போன்ற பரித்தியாகத்தை இந்தியர்கள் அறிந்து புகழ்வதினாலேயே ஒரு மூடனுக்கு அடிக்கடி ஜனங்களுடைய நன்மதிப்பு உண்டாவதன்றி அவனும ஒரு மகாத்துமாவினுடைய நிலைமைக்கு உயர்த்தப்படுகிறான். ஆகையினால் தம்முடைய நாட்டின் முன்னேற்றமும், எல்லாவழிகளிலும தமது நாட்டின் நலங்களைத் தாங்கிப் பேசுவதும் ஒருமுழு வாழ்நாளின் நோக்கமாவது தெளிவாய் இருக்கும் பொழுது, இன்னும் அதிக முன்னேற்றமடைந்த தேசங்களிலும் இராஜீய விவகாரங்களை நடத்துவோருக்குக் கிடைத்தற்கரிய பூஜியதையை கோகலேயினிடத்தில் இந்தியர்கள் காட்டினார்கள் என்பது என்ன ஆச்சரியம்!

EARLY LIFE.
இளமைக் காலம்.

*இரத்தினகிரி ஜில்லாவிலே, சிப்ளன் தாலூகாவிலே, 1866-ம் வருஷத்தில் கோகலே பிறந்தார். பொதுவாக, இந்தியாவில் பிரிடிஷ் ஆளுகையில் புகழடைந்த தட்சிணத்தார்களிற் பெரும்பாலாருடைய தாய் தந்தையர்களைப்போலவே அவருடைய பெற்றோர்களும் மதிக்கத் தக்கவர்களாயினும் ஏழைகள். கோலாபூருக்குக் கீழ்ப் பட்ட காகல் என்னும் இராச்சியத்தில் அவருடைய தகப்பனர் சிறிய உத்தியோகஸ்தராயிருந்து, சிறுவரான கோபாலருக்குச் சுமார் பன்னிரண்டு வயதில் காலஞ் சென்றார். கோகலேயுடைய இளமைப்பருவம் பெரும்பாலும் காகல், கோலாபூர் என்னும் இடங்களிற் கழிந்தது. பணக்கஷ்டத்தில் அவர் படிப்பு நடைபெற்றது. அவரைப் படிப்பிப்பதினிமித்தம் அவர் தமையனரான கோவிந்தராவ் என்பவர் அதிக கஷ்ட நஷ்டங்களை யடைந்தார். 1881-ம வருஷத்தில் கோபால்ராவ் ராஜாராம் ஹைஸ்கூலிலிருந்து பிரவேச பரீட்சை (மெட்ரிகுலேஷன்) யில் தேறினர். 1882-ம் வருஷத்தில் ராஜாராம் கலாசாலையிலிருந்து 'ப்ரீவியஸ்' என்னும் முதலாவது பரீட்சையிலும், 1883-ம் வருஷத்தில்

---

* இங்கே கோகலேயின் வாழ்க்கையைப்பற்றி ஒரு விரிவான சொந்தவரலாறு எழுதுவதாய் எண்ணமில்லை. வசந்தகாலத்தில் வெளிவந்த "மனோரஞ்சன்" பத்திரிகையில் பண்டிதர்-டபிள்யு-பி. பட்வர்த்தன் அவர்களால் கொஞ்சம் விரிவான ஜீவியசரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது. பிரமாணமான ஜீவியசரிதம எழுதுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அவருக்குப்பின் இந்திய ஊழியர் சங்கத்துக்குத் தலைவராயிருக்கும் கனம். வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி அவர்களிடம ஒருக்கால் அவ்வேலை ஒப்புவிக்கப்படும்.

ராஜாராம் கலாசாலையிலிருந்தும், டெக்கான் கலாசாலையிலிருந்தும் முதல் பீ. ஏ. யிலும் தேறினார். முதலாவது இரண்டாவது பீ. ஏ. பரீட்சைகளில் தாழ்ச்சியில்லாதபடி இரண்டாவது வகுப்பில் தேறினாரேனும், அவரது சர்வகலாசாலைப்படிப்பு அதிக சிறப்புற்றதன்று. அவர் ஓர் அடக்கமுள்ள மாணாக்கராய் இருந்தார் என்று சொல்லப்படுகிறது. ஆயினும் ஒவ்வொரு விஷயத்திலும் தேர்ந்தவராய்ப் புகழடையவேண்டும் என்ற கருத்துடையவராய் இருந்தார். தம்முடைய ஞாபக சக்தியின் வன்மையினால் ஒவ்வொருவரையும் பிரமிக்கச் செய்தார் என்று தெரிகிறது. ஆதியிலேயே வலிமை பெற்றிருநததாகத் தெரிகிற இந்த சக்தி பிற்காலத்தில் விடாமுயற்சியுடன் வளாக்கப்பட்டது. வித்தியாபட்டம பெற்றபின் புதிய ஆங்கில பாடசாலையில் அவர் ஒரு உபாத்தியாயராக இருந்த காலததில், காலையில் தற்செயலாகப் படித்த சமாசாரப் பத்திரிகையிலுள்ள விஷயங்களில் சொல்வதெழுதுதற்கான பாகங்களைத் தம்முடையவகுப்பிற்குத் தமது ஞாபகததிலிருநதே அடிக்கடி கொடுப்பார். நல்ல ஆங்கில நடையில் அவருக்குத் தேர்ச்சியும் விருப்பமும் உண்டானதற்குக் காரணம் ஒருக்கால் அவருடைய ஆச்சரியமான இந்த ஞாபக சக்தியாய் இருக்கலாம். முன்பு ஒருதடவை சொல்லக்கேட்ட எநத விஷயத்தையும் அவர் பெரும்பாலும் ஞாபகத்துக்குக் கொண்டுவரக்கூடும். அவருடைய பொதுஜனவாழ்க்கையில் இது அவருக்கு ஒரு பெரிய பலமாய் இருந்தது; ஏனெனில், அவர் எடுத்துச் சொல்லும் உண்மைகளிலும், எண்களிலும், தொகைகளிலும் அவருடைய எதிரிகள் குற்றங் கண்டுபிடிப்பது அரிது. அவருடைய வாழ்வின் கடைசி மூன்று நான்கு வருஷங்களில் அவருடைய ஞாபக சக்தி படிப்படியாய் வலி யிழந்து வருவ

தாகவும், அதனால் தமது மனோ சக்திகளுக்குக் கெடுதியுண்டானதைத் தாமே உணர்ந்ததாகவும், எங்களில் அனேகர் அவர் சொல்லக் கேட்டிருக்கிறோம். அவரது வேலையின் தன்மையில் இப்பலவீனத்தைக் காட்டும் அறிகுறிகளை நாங்கள் உண்மையாகவே பார்க்காமற்போனாலும், இம்மாதிரியான பலவீனம் தம்மிடத்திலுண்டு என்று அவர் அறிந்தமை அவருடைய ரோஷமுள்ள சுபாவத்திற்கு அதிக வருத்தத்தைக் கொடுத்தது.

FEELING HIS WAY
வழி தேடுதல்.

படிப்பு முடிந்தவுடனே, இருபது வயதுக் குட்பட்ட பிராயத்திலேயே கோகலே தமது வாழ்நாளின் வேலையைத் தெரிந்துகொண்டார். இவ்வயதில் பட்டம் பெறாத ஆங்கிலேய மாணுக்கர்கள் தங்களது விளையாட்டிலும் கலாசாலையைச்சேர்ந்த தருக்கசங்கங்களிலுமே கருத்தாய் இருப்பார்கள். ஆனால் சாமர்த்தியமுள்ள வாலிப இந்திய மாணுக்கர்கள் தங்கள் சர்வகலாசாலைப் படிப்பைச் சீக்கிரம முடித்துவிட்டு, இளம்பிராயத்திலேயே சமுசார கஷ்டங்களும் மற்றத் துன்பங்களும சுமததபபட்டவர்களாய், தாம் கற்றவற்றையும் கற்பவற்றையும சிந்தித்து ஒழுங்கு படுததவேண்டிய காலத்தில், பொது விவகாரங்களையும், பொதுக் காரியங்களையும் சிந்திக்கத் தொடங்குகிறார்கள். இந்தியர்களுடைய மூளை ஒருக்கால் விரைவிலேயே பக்குவமடைந்துவிடுவதாகும. ஆயினும் இவ்விளம் பக்குவத்தினால் சீக்கிரத்தில் சோர்வும், அநேகருக்கு இளம்பிராயத்திலேயே தேகத்தளர்ச்சியும், அடிக்கடி விரைவான மரண

மும் பல தடவைகளில் உண்டாகின்றன. நம்முடைய வித்தியா பட்டதாரிகளின் அகாலமரணம் சில வருஷங்களுக்கு முன் மிகுதியும் விசாரஞ்செய்த ஓர் விஷயமாயிருந்தது. ஸர். ஆர். ஜீ. பாண்டாரகர அவர்களுக்கும் காலஞ்சென்ற நியாயாதிபதி ஸ்ரீமான். ராணடே அவர்களுக்கு மிடையில் ஒரு விசேஷமான வாதத்தையும் உண்டாக்கிற்று இப்பொழுது அவ்விவாதம் அவ்வளவு கடுமையாய் இருக்கவில்லை. இருபது வருஷத்திற்கு முன் இருநததைவிட வித்தியாபட்டதாரிகளின் வாழ்நாட்கள் இப்பொழுது நீடித்தவைகளாயிருககின்றமையால் அவ்விவாதம் இப்பொழுது அவ்வளவு கொடியதாய் இருக்கவில்லைபோலும. ஆயினும் இப்பொழுது கூட் வேலையைவிட்டு நீங்குகின்ற காலத்தில் ஆரோக்கியம உள்ளவர்களாயிருக்கும் வித்தியா பட்டதாரிகள் சிலரே யாவர். இவருடன் ஏககாலத்தில் வசித்த பலரைப்போல சிறு வயதிலேயே கோகலே இறநதுபோனதாகச் சொல்ல முடியாமற்போனாலும, அவர் நடுபிராயத்திலே இறந்தவரானார். ஐரோப்பியர்களுடைய கணக்கின்படி பார்த்தால் அவா இன்னும இருபது வருஷம் நடகாத்திரத்துடன் இருநதிருக்கவேண்டும். நம்முடைய சமூகத்தலைவர்கள இவ்விஷயததைக் கருததாய் ஆலோசிததுந, நமது வாலிபாகளுக்கு இருபததைநது வயது ஆகிற வரையில் குடும்பக் கவலைகளும் பொதுக் கவலைகளும இல்லாவண்ணம் நமது ஆசாரங்களை மாற்றுவதற்கு முயலுதல் வேண்டும் என்று நாம விருமபுகிறோம். பின்வரும கஷ்டத்துக்குத்தக்க சுயேச்சையோடு, இளம்பிராயததில் கவலையின்றி இன்னும் சில வருஷங்கள் கழிந்தால் இநதியர்களுடைய மொத்தவாழ்க்கை இன்னும அனேக வருஷங்கள் சேர்ந்து அதிகமாகும. அவர்களால் செய்யப்படும் மொத்த வேலை

யும் இப்பொழுது இருப்பதைவிட இன்னும் எவ்வளவோ அதிகமாயிருக்கும்.

நிற்க; கோகலே பதினெட்டாவது வயதில் தமது வாழ்வின் வேலையைத் தெரிந்துகொள்ள வேண்டியவரானார். அந்நாட்களில் ஒரு வாலிப வித்தியாபட்டதாரியின் எதிர்கால நம்பிக்கைகள் இப்பொழுது இருப்பதை விடச் சிறந்தவைகளாய் இருந்தன. ஒரு பட்டதாரி சர்க்கார் அரசிறைச் சேவை (ரெவின்யு சர்விஸ்) யில் உத்தியோகத்தில் அமர்ந்தால் கொஞ்சகாலத்தில் மம்லத்தார் வேலைக்கு வரக்கூடும்; அவர் எல். எல். பீ. என்னும பட்டதாரியானல் அதிகாரிகளின் தயவில்லாமலே குறைந்தபட்சம ஒரு கீழ் நியாயாதிபதி (சபார்டினேட் ஜட்ஜ்) வேலை அவசியம கிடைக்கும் என்று சற்று நிச்சயமாய் எதிர்பார்க்கலாம். கோகலே தமது எதிர்காலத்தைக் குறித்து யோசித்துக்கொண்டிருந்து, எஞ்சினியர் (சிற்பி) ஆகவேண்டும என்னுங் கருத்துடன் கொஞ்சநாள் எஞ்சினியரிங் காலேஜில் (சிற்பக் கலாசாலையில்) சேர்ந்து படித்தார். அக்காலத்தில் சட்டம் படிக்கும் மாணாக்கன் ஒவ்வொருவனும் எல். எல். பீ. பரீட்சைக்குப் போவதற்குமுன் சட்டநூல் ஆரம்பபுத்தகங்களில் ஒரு பரீட்சையில் தேற வேண்டுவதாய் இருந்ததனால், பின்பு கொஞ்சகாலம கோகலே அச்சட்ட புத்தகங்களைப் படிக்கலானார். பணம் கடன் வாங்கிக்கொண்டாவது இங்கிலந்துக்குப்போய் ஐ. சி. எஸ். பரீட்சைக்குப் படிக்கும்படி சிலர் அவருக்கு யோசனை சொன்னார்கள். அவ்வாறு செய்வது அக்காலத்துக்கு ஒரு துணிகரமான வேலையாய் இருந்தது. கோகலே எஞ்சினியராகவாயினும், வக்கீலாகவாயினும், இந்திய இராச்சிய விவகார ஊழியனாகவாயினும் (இண்டியன் சிவில் சர்வண்ட்) இருப்பதாக எண்ணிப் பாரு

ங்கள்! இப்படிப்பட்ட விதி கோகலேக்கு நேரிடாமற் போனது நமது தேசத்தின் பாக்கியமே; நேரிட்டிருப்பின் அது துர்விதியேயன்றி வேறொன்றுகாது. தமது அன்பும் கவலையும் நிறைந்த பார்வையின்கீழ் இந்தியாவின் இராஜீய விருத்தி என்னும் கட்டடம் உயரும்படிச்செய்த சமர்த்துள்ள எஞ்சினியராகவும்; இந்தியாவிலும், இங்கிலந்திலும், தென்னாபிரிகாவிலும், பொதுஜனங்கள் முன்னிலையிலும், இராஜப் பிரதிநிதியின் சட்டசபையிலும், மார்லி, போதா, போன்ற மந்திராலோசனைச்சபை (Cabinet) மந்திரிகள் முன்னிலையிலும் இந்தியாவின் பாத்தியங்களை எடுத்துச் சொல்லி வாதிக்கும் வக்கீலாகவும்; இந்திய ராச்சிய விவகார ஊழியன் (இண்டியன் சிவில் சர்வண்ட்) ஆவதிலும் இந்திய ஊழியராகவும் அவருக்கு அதிர்ஷ்டமிருந்ததும் நமது தேசத்தின் பாக்கியமே.

JOINS THE DECCAN EDUCATION SOCIETY. TEACHING WORK IN THE FERGUSSON COLLEGE.

தக்காணத்து வித்தியாசங்கத்திற் சேர்தல். பெர்குஸன் கலாசாலையில் உபாத்திமைத்தொழில்.

இவ்விஷயத்தில் அதிர்ஷ்டம் நல்லதாயிருந்து கோகலேயின் எண்ணங்களைச் சரியான வழியில் திருப்பி விட்டது. மாணுக்கராய் இருந்தபோதுகூட பொதுக்காரியங்களில் அவர் அதுவரையில் அதிக அக்கரை காட்டவில்லை. ஆயினும், ஒரு நாடகம்நடத்தி அதில் வந்த பணத்தை 1881-ம் வருஷத்தில் நடந்த அவதூறு வியாச்சியத்தில் திலகருக்கும் ஆகரகரவுக்கும் செலவுக்குக்கொடுப்பதாய்

இருந்தபோது இவரும் அந்நாடகத்திற்சேர்ந்து நடித்தார் என்று சொல்லப்படுகிறது. நாம் உணர்ந்தவரையிலும் அது பயனடையாத ஒரு சிறிய முயற்சியாக இருந்தது. ஆயினும அவர் படித்துப் பட்டம் பெறுவதற்குச் சிலவருஷங்களுக்கு முன்பு பூனாவிலே ஒரு வேலை ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் அவ்வேலை ஜனங்களுடைய மனத்திற்குச் சரியென்று பட்டதன்றி, முப்பதைந்து வருஷங்கள் கழிந்த பிறகு இன்னும், பலமாறுதல்களை அடைந்தாயினும், பூனா ஜனங்களாலும,மஹாராஷ்டிர ஜனங்களாலும் நிறைவேற்றப் பட்ட மிகவும் பிரமாதமான ஒரு காரியமாகவே இருக்கின்றது. 1882-ம வருஷத்தில், பூனாவில், புதிய ஆங்கில பாடசாலை (ந்யூ இங்கிலீஷ் ஸ்கூல்) க்கு அஸ்தி வாரமிட்டதுதான் இவ்வேலை. அப்பொழுது ஆங்கிலப்படிப்பு இப்பொழுது பரவியிருப்பதில் பாதிகூடப் பரவவில்லை. பூனாவில இருந்த சிரத்தையுள்ள சில வாலிபர்கள் மேல்நாட்டுப்படிப்பையும்—மேலநாட்டு லௌகிகப் படிப்பையும் பரவச்செய்வதால் நனமையுண்டாகும என்று நம்பினார்கள். ஸ்ரீமான், திலகரும, ஸ்ரீமான் ஆகரகரவும் கலாசாலையில் படிக்கிற நாட்களில் இவ்வெண்ணத்தைக் கொண்டார்கள். அவர்கள் காலஞ்சென்ற ஸ்ரீமான். விஷ்ணுசாஸ்திரி சிப்ளங்கர் என்பவரை இவ்விஷயததில உதவிபுரியும்படி அடைநதார்கள். ஏனென்றால்; சிப்ளங்கர் மராததிபாஷையில் திடமாக எழுதும் நூலாசிரியராய்க் கீர்த்தியடைநது, தக்காணத்து ஜனங்களிடத்தில் அதிக செல்வாக்குளளவராயு மிருந்தார். பாடசாலை தொடங்கிக் கொஞ்சகாலததிறகுப் பிறபாடு சிப்ளங்கர் இறநதுபோனார். இவர் இறநதும, இதற்குச் சிறிது காலத்திற்குப் பின் ஸ்ரீமான். திலகரும், ஸ்ரீமான். ஆகரகரவும் அப்பொல்லாத அவதூறு வியாச்சியத்தில் சம்பந்தப்பட்டு,

நூறுநாள் சிறையில் இருக்கத் தண்டனை அடைந்தும், எதிர் பாராத வண்ணமாய் அப்பாடசாலை தழைத்தோங்கியது. ஸ்ரீமான். நாம்ஜோஷி, ஸ்ரீமான். ஆபடே, ஸ்ரீமான். கேல்கார், ஸ்ரீமான். கோல் முதலான மிகுந்த திறமையுள்ள வேறு வாலிபர்களும இவர்களோடு வந்து சேர்ந்தார்கள். அப்பா டசாலை ஆரம்பித்து ஐந்து வருஷங்களாயின. அதற்குள் அது அவ்வளவு சித்தியடைந்தமையால் அதை ஆரம்பித்த வர்கள் ஒரு கலாசாலை திறக்கும் பெரியவேலையைத் தொடங் கவும், தங்கள தொழிலை நிலைபெறும்வண்ணம் செய்யவும, தக்கான வித்தியாசங்கத்தை ஆரம்பிக்கவும் தீர்மானித்தார் கள். இவ்வேலையில தங்களோடுசேர்ந்து உழைப்பதற்குஅவா கள் ஊக்கமுள்ள வாலிபர்களைத் தேடிக்கொண்டிருந்தார்கள். கோகலேக்கு அவர்களிடத்தில முதன்முதலில் எப்படிப பழக்கம உண்டாயிற்று எனபது தெரியவில்லை. ஆயினும அவா பீ. ஏ. பரீட்சை தேறிய கொஞ்சகாலத்தில், 1885-ம வருஷ ஆரம்பத்தில் அப்பாடசாலையில் ஒரு உபாத்தியாயா வேலையை ஏற்றுக்கொண்டிருக்கக் காண்கிறோம. சொற்ப காலத்தில் அவர் மேற்சொன்ன கனவான்களோடு சேர்ந்து உழைத்துத் தம் வாழ்நாளைக் கழிக்கத் தீர்மானித்துவிட் டார். இவ்வண்ணமாக அவர் செல்வத்தைப்பற்றிய எண் ணங்களையும், செல்வத்தோடுகூட வரும அந்தஸ்தைப் பற்றிய எண்ணங்களையும முடிவாக முற்றிலும் ஒழித்து விட்டார். அனேக கஷ்டநஷ்டங்களுக்கு உட்பட்டுப் படிக்க நேர்ந்த ஒரு வாலிபனுக்கு, அவனுடைய எளிய பந்துக்கள் அவன் படிப்பதற்குப்பட்ட கஷ்டங்களை அடிக்கடி அவனு க்கு ஞாபகமூட்டி, அனேக வருஷங்கள் பட்ட பிரயாசைக் குப்பின் சுகமான வாழ்வை எதிா நோக்கியிருக்க, இவ்வா றான எண்ணங்கள் உண்டாவது இயற்கையே. இச்சங்கத்

தில் வந்துசேர்ந்தவர்கள் பெருந்திரவியம் சம்பாதிக்கும் திறமையுடையவர்களே. ஆயினும் நல்ல காலத்தில் மாதம் ஒன்றுக்குச் சொற்பத் தொகையான எழுபத்தைந்து ரூபா வும் கெட்ட காலமானால் இன்னும் குறைந்த தொகையும் பெறுவதோடு தங்கள் ஆயுளளவும் அவர்கள் திருப்தி யடைதல் வேண்டும். ஒவ்வொரு ஆயுட்கால அங்கத்தின ரும் அச்சங்கத்திற்கு இருபது வருஷம் உழைக்கப் பிணைப் படவேண்டும். 1885-ம் வருஷம் ஜனுவரி மாதத்திலிருந்து 1904-ம் வருஷம் டிசம்பர் மாதக் கடைசிவரை கோகலே ஆயுட்கால அங்கத்தினராக இருந்தாராயினும், இக்காலம் முடிவதற்குமுன் இரண்டு வருஷத்துக்கு ரஜா வாங்கிக் கொண்டார். மேற்சொன்னபடி முதலில் பாடசாலையில் வேலைபார்த்துப் பின் கொஞ்சகாலத்தில் அவர் கலாசாலை யில் வேலை பெற்றார். முதல் மூன்று வருஷங்களில் அக் கலாசாலையில ப்ரீவியஸ் என்னும முதல்வகுப்பும் அடுத்த ஐந்து வருஷங்களில் முதல் பீ. ஏ. வகுப்பும இருந்தன. 1892-ம் ஆண்டில் பீ. ஏ. வகுப்புத் தொடங்குவதற்குக் கலாசாலைக்கு அனுமதி கிடைத்தது. அதுமுதல் இது ஒரு முழுக் கலாசாலையாய்க் கலைகளிலும், விஞ்ஞான சாஸ் திரங் (Science) களிலும், பட்டம் பெறுவதற்கு மாணக்கர் களைச் சித்தப்படுத்தி அனுப்புகிறது. பீ. ஏ. யில் கோகலே யின் இஷ்டபாடம கணித சாஸ்திரமாயினும், அக்கலாசாலை யில் முதல் ஐந்து வருஷம ஆங்கிலபாஷையின் ஒரு பாக த்தை அவர் கற்பித்து வந்தார். எஞ்சிய பாகத்தை ஸ்ரீமான். கேல்கார் என்பவர் போதித்து வந்தார். தொடக்கத்தில் கணிதசாஸ்திரம் போதிக்கும் வேலை ஸ்ரீமான். திலகருக்குக் கொடுக்கப்பட்டது. ஆயினும் 1890-ம் ஆண்டளவில், ஆயுட் கால அங்கத்தினருக்குள் கொடிய வாதங்கள் உண்டாய்,

அவர்களிற் சிலர் சங்கத்தினின்றும் பிரிந்து போனார்கள். இவ் வருஷத்தில் ஸ்ரீமான். திலகர் தம் வேலையை ராஜிநாமா செய்துவிட்டார். 'காலி'யான அவருடைய ஸ்தானத்தைக் கோகலே ஏற்றுக்கொள்ளும்படி நேர்ந்து, 1891-ம வருஷத்தில் முதலிரண்டு வருஷங்களுக்கான கணித சாஸ்திரங் கற்பித்து வந்தார். இவ்வருஷக் கடைசியில் பீ. ஏ. வகுப்புத் தொடங்குவதற்கு அனுமதிபெற்று, கோகலேக்குக் கலாசாலைத் தோழரான ஸ்ரீமான். கார்வ் என்பவர் கணிதசாஸ்திர போதகராய் நியமிக்கப்பட்டார். கோகலே பழையபடி ஆங்கிலமும், அதன்சார்பான மற்றைப் பாடங்களும் போதிப்பவரானார். இவ்வாறாக அவா உபாத்தியாயராய் இருந்த கால முழுவதிலும் அவ்வப்போது கற்பித்தவை : கணிதம், ஆங்கிலம், தேசசரித்திரம், செல்வநூல் (பொலிடிகல் எகானமி) என்பன. இவ்வாறு பல பாடங்களையும் சொல்லிவைப்பதற்கு அவருக்கு வாய்த்த திறமையைக் குறித்துச் சிற்சில சமயத்தில் அவர் ஏளனம் பண்ணப்பட்டார். "கட்டளைப்படி மாறும் பண்டிதா" என்று யாரோ ஒருவர் தம்மைச் சொன்னதாய்க் கோகலே இந்நூலாசிரியரிடத்தில் ஒரு சமயத்தில் சொன்னார். இவ்விகழ்ச்சிக்காக கோகலே வருந்தவில்லை. ஏனெனில்; சரியான பண்டிதர் என்று சொல்லப்படுவதற்குத் தாம் தகுந்தவரல்லர் என்பதை மற்றவர்களினும் கோகலே நன்குணர்ந்திருந்தார். அப்பெயரை அவர் ஒருக்காலும் உபயோகிக்கவில்லை. ஒன்றில் உண்மையான பண்டிதராக வேண்டுமானல், ஆயுள்நாளளவும் அதைக்கற்கவேண்டும். அப்படிக்கற்றல் நமது தேசத்தின் தற்கால நிலைமையில் ஒரு இந்தியனுக்கு முடியாத காரியம் என்று அவர் எண்ணினார்.

TEACHER OF MATHEMATICS

கணிதசாஸ்திர போதகர்.

கோகலே கணிதசாஸ்திரம் கற்பித்ததை இந்நூலாசிரியர் ஒருபொழுதும் பார்த்திராமையினால் அவருடைய போதனுசக்தியைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. ஆயினும் 1891-ம் ஆண்டளவில் அச்சாஸ்திரத்தில் அவருக்குள்ள பற்று மிகவும் குறைந்து விட்டதாய்த் தெரிகிறது. விசேஷித்த திறமையுடன் அவர் எழுதிய கணக்குப் புத்தகத்தைப்பற்றி எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறார்கள்., அப்புத்தகம் கடந்த இருபது வருஷங்களாக மற்றைப் புத்தகங்களைவிட ஆட்சேபணையின்றி சிரேஷ்டமானதாய் இருப்பதுமன்றி, அது வெளிவந்த நாள் முதல் மிதமான வருமபடியையும் அவருக்குக் கொடுத்துக் கொண்டு வந்தது. அப்புத்தகத்தில் உள்ள விதிகளின் விளக்கமும, அப்பியாசத்திரட்டும், மாணுக்கர்களுக்கும உபாத்தியாயர்களுக்கும ஒருங்கே உபயோகமுள்ளனவாய் இருப்பதன்றி, அவர் கணித சாஸ்திரத்தைத தெளிவாய் உணர்ந்திருந்த மாதிரியையும், உபாத்தியாயருக்கு வேண்டிய உயர்ந்த குணங்கள் அவரிடத்திருந்தமையையும் காட்டுகின்றன. கணிதசாஸ்திரப் படிப்பால் எதையும் திட்டமாக யோசிக்கும் வழக்கம கோகலேக்கு இருந்தது போல, பொதுநலத்துக் குழைக்கும் மனிதர்களிடத்திற் சில சமயங்களிற் காணப்படுவதில்லை. கணித சாஸ்திர ஞானத்தால் அவருக்கு இன்னொரு வழியிலும் பிரயோசனம் உண்டாயிற்று. கடந்த முப்பது வருஷத்தில் பொருளாதார நட்பங்களை ஆராய்ந்தெழுதுவதில் கணிதசாஸ்திரக் கருத்துக்களை உபயோகிக்கும ஒரு வகுப்பாரான

செல்வநூல் ஆசிரியர்கள் தோன்றியிருக்கிறார்கள். செல்வநூல் வல்லோரிற் சிலர் இந்நிலைமையினின்று முற்றிலும் மாறுபட்டு, செல்வநூலின் மூலசித்தாந்தங்கள் (data) சரியான கணித ஆராய்ச்சிக்குட்பட்டன அல்ல என்று எண்ணினாலும், கணிதசாஸ்திரக் கருத்துக்களை உபயோகிப்பாரின் தொகை படிப்படியாய் ஸ்திரம் பெற்று வருகிறது. இப்பொழுது பிரபலமாயிருக்கிற செல்வநூல் வல்லோரில் அனேகர் பூரணமான கணிதப் பயிற்சி அடைந்தவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் எழுதலான நூற்களில் கணிதசாஸ்திரக்கலப்பு கொஞ்சமாவது இருந்தே தீரும். "பங்க்ஷன்" (function=வலு) என்பது போன்ற சில கணிதசாஸ்திரக் கருத்துக்கள் முற்றிலும் வேறெந்தச் சாஸ்திரத்துக்கும் பொருந்தும். செல்வநூலின் ஒரு பெருங்கிளையாகிய "ஸ்டாடிஸ்டிக்ஸ்" (பிரஜைகளின் ஜனசங்கியை, கைத்தொழில், வியாபாரம், முதலியவைகளின் தொகுதி) அடிமரத்திலும் பெரிதாய் விரைவாக வளர்ந்துகொண்டு வருகிறது. அதில் விஸ்தரிக்கப்படும் விஷயங்களிற் பெரும்பாலும் கணித சம்பந்தமானவை; சிலர் நினைக்கிறபடி முற்றிலும் கணக்குச் சம்பந்த (அரித்மெடிகல்) மானவை அல்ல. கோகலே அடைந்த கணிதப் பயிற்சியால் இக்கருத்துக்களை முற்றிலும் உணர்ந்து பாராட்டவும், தாம் எடுத்துச் சொல்லும் விஷயம் ஒழுங்காகவும், தெளிவாகவும் இருக்கும்படி, கணித உவமானங்களைச் சிற்சில சமயங்களில் தம்முடைய பிரசங்கங்களில் உபயோகிக்கவும் அவருக்குச் சாத்தியமாயிற்று.

AS A TEACHER OF ENGLISH.
ஆங்கில போதகர்.

கணித சாஸ்திரம் கற்பிப்பதினும், ஆங்கிலங் கற்பிப்பதில் கோகலே சிறந்தவர். ஸ்காட் என்பவருடைய லாமர்மூர்மணமகன்" (Bride of Lammermoor) என்னும் நூலையும், டிக்வின்சி என்பவருடைய "அபினி உண்பவன்" (Opium-Eater) என்னும் நூலையும, பேகன் என்பவருடைய "கல்வியின் விருத்தி" (Advancement of Learning) என்னும் நூலிற் கொஞ்சமும் நானே அவரிடம் படித்திருக்கிறேன். இவருடன் போதகராயிருந்த பண்டிதர். கேல்கார் என்பவா ஆங்கிலம கற்பித்ததைப்போல் இவர் கற்பிக்க முடியாது. பண்டிதர். கேல்கார் பாட்டிலும், கதைகள் முதலான எளிய நூற்களிலும் மிகுந்த ஆராய்ச்சி யுள்ளவர். முக்கியமாய் அன்னியர்களது விரிவான உரையின் உதவியில்லாமல் மாணுக்கர்கள் தாமே அறிந்துகொள்ள முடியாத புத்தகங்களையும், அரிதில் உணரத்தக்க சில புத்தகங்களையும், மற்றவர்களால் கற்பிக்க முடியாதவண்ணமாய் அவர் கற்பித்ததாய்ச் சொல்லப்படுகிறது. ஆயினும் அவர் எளிதில் உணரத்தக்க புத்தகங்களைப் பல முறைகளில் வேகமாய் நடத்திக்கொண்டு போய் விடுவார். எனது முதல் வருஷத்தில், ஒரு மணி நேரத்தில் "ஏரியின் பெருமாட்டி" (Lady of the Lake) என்னும் புத்தகத்தில் நானூறு ஐந்நூறு வரிகள் அவர் வாசித்துக்கொண்டு போனது எனக்கு ஞாபகமிருக்கிறது. முன்பாகவே போதுமான அளவு படித்துக்கொண்டு வகுப்பிற்கு வாராத ஒரு சாதாரண மாணுக்கனுக்கு இது அளவுக்கு விஞ்சினதாகும். கோகலே இதற்கு எதிரிடையாக அளவுகடந்த ஒழுங்கை அனுசரித்து வந்தார். பாடத்தில் மிகவும்

எளிதான பாகங்களைக்கூட அவர் அலட்சியம் செய்து ஒரு போதும் தள்ளமாட்டார். பாடத்தில் சுட்டிக்காட்டப்பட்ட கதைகளையும், வரலாறுகளையும், அதிலும் சரித்திர சம்பந்தமான விஷயங்களையும் அவர் அதிக கஷ்டப்பட்டு விளக்கிக் காட்டுவார். ஒருவருக்கு முன்பே இலக்கியத்தில் விருப்பம் இருந்தாலன்றி, அவருடைய போதனை ஒருவருக்கு அவ் விருப்பத்தை உண்டாக்கும் தரத்தது அன்று. பரீட்சைக்குப் படிக்கும் ஒரு சாதாரண மாணுக்கனுக்கு பண்டிதர். கெல்காருடைய போதனையைவிட கோகலேயின் போதனை அதிக பிரயோசனம் உடையதென்று சொல்லலாம். எனது முதல் வருஷத்திலிருந்தே அவருடன் நான் நெருங்கிப் பழகலானேன். வகுப்பில் நான் முதல் மாணுக்கனுய் இருந்தமையால் அவர் என்பொருட்டுத் தனியாக சிரமமெடுத்துக்கொண்டு, என்னையும் வைத்துக்கொண்டே என்னுடைய பல வியாச அப்பியாசங்களை ஜோஷி ஹாலில் திருத்துவார். அங்கே அவர் ஒவ்வொரு நாட்காலையிலும் சாவஜன சபை (சர்வ ஜனிக்சபா) யின் வேலையைப்பார்த்துக்கொண்டு இருப்பதுண்டு. பேஜ்ஹாட் என்பவர் தமது "இலக்கியப்படிப்"பில் வேவேர்லி என்னும் கற்பனைக் கதைகளைப்பற்றி எழுதிய வியாசத்தைச் சுருக்கி எழுதி ஒரு சமயம் நான் அவரிடம்கொண்டு போனது எனக்குக் குறிப்பாய் ஞாபகம் இருக்கிறது. முதல் பரீட்சை தீர்ந்தபின் பி. எஸ். சி. (B. Sc.) என்னும் பட்டப்பரீட்சைக்குப் படிக்கும்படி நான்கொண்ட விருப்பத்தை அவருக்குச் சொன்னபொழுது, நான் நல்ல வியாசங்கள் எழுதினமையால் சாஸ்திரப்படிப்பில் என்னைப் பாழாக்கிக் கொள்ளக்கூடாது என்று அவர் அன்புடன் சொல்லி, அதினின்றும் என்னைத்தடுக்க முயற்சித்தார். அக்காலத்தில் நடந்த வேறொரு சம்பவம் இது: 1892-ம்

வருஷத்தில் கலாசாலையிற் சேர்ந்து கொஞ்சகாலத்திற்குப் பின், பண்டிதர். கார்வ் என்பவர் சொன்ன யோசனையைக் கேட்டு, ஒரு தடவை அவரைப் பார்க்கப் போனேன். எனது இரண்டாம் பாஷையாகிய லத்தீனில் அவர் அதிக பிரியம் காட்டினார். அப்பாஷையைக் கற்றுக்கொள்வதற்குத் தமக்கு உதவி செய்வதற்கான லத்தீன் புஸ்தகங்களுக்கு என்னை ஒரு ஜாபிதா கொடுக்கும்படிச்செய்து, உடனே அப்புத்தகங்களை யெல்லாம் அனுப்பும்படித் தமது புத்தக வியாபாரிக்கு உத்தரவிட்டதாய்த் தோன்றுகிறது. ஆயினும் இவ்வெண்ணம் வெகு சீக்கிரத்திலேயே ஒழிந்து போனதாகத் தெரிகிறது. ஏனெனில்; அனேக வருஷங்களுக்குப் பிறகு, அவைகளைப் போன்ற புத்தகங்களே கொஞ்சமும உபயோகிக்கப்படாமல் அவர் வீட்டில் கிடக்கக் கண்டேன். இது அவருக்கு இயற்கையான குணங்களில் ஒன்று. அவர் ஏதாகிலும் ஒன்றில் பிரியப்பட்டபோது, சில நாள் முழு மனத்தோடு அதில் உழைப்பார். அவர் பிரியம் பெரும பாலும் கொஞ்சகாலத்தில் ஒழிந்துபோகும். இவ்வாறு ஒரு தடவை பிலியட்ஸ் என்னும் விளையாட்டிலேயே ஆழ்ந தவராய் ஒவ்வொரு நாளும் அதிக காலத்தை அதிற் கழித்ததும் அல்லாமல் அவ்விளையாட்டாடும் மேஜை ஒன்றைச் சில மாதங்களுக்கு வாடகைக்கு வாங்கவும் துணிந்தார். அவர் வெளியில் உட்கார்ந்திருக்கிற பொழுது எந்த எந்த நட்சத்திரங்கள் பீரங்கியடிபடும்படி மும்மூன்றாய்ச் சரியாய் அமைக்கப்பட்டிருந்தன என்பதையும், வேறு நிலைகளில் எந்தவிதமான பீரங்கிப் பிரயோகம் அவசியம் என்பதையும், கவனித்துப் பார்த்துக் கொண்டிருப்பது அவருக்கு ஒரு பொழுது போக்கென்று என்னோடு சொன்னார். ஆயினும் இவ்விளையாட்டில் மாத்திரம் அவருக்கு எப்பொழு

தும் அதிக பிரியம். ஒருக்கால் அவர் இடது கைப்பெரு விரலுக்குக் கெடுதியுண்டானால் அவ்விளையாட்டை முற்றி லும் விட்டுவிட நேரிடுங் காலத்திலும், முன்னே அவருக்கு எதிரிகளாய் இருந்தவர்கள் பிலியட்ஸ் விளையாட்டில் அடைந்தவிருத்தியைப் பற்றியும், இங்கிலந்தில் இவ்விளையாட்டில் கைதேர்ந்து கீர்த்தி பெற்றவர்களின் செய்கையைப்பற்றி யும் பேசுவதற்கு எப்பொழுதும் பிரியப்படுவார். மற்ற விளையாட்டுகளிலும் அவர் இப்படியே பிரியமும் சாமர்த்திய மும் பெற்றிருந்தார். சதுரங்கம், சீட்டு, கஞ்சிபா, சாங்கத்ய என்னும் விளையாட்டுகளும் வெகு நன்றாய் விளையாடுவார்; அவைகளில் பெரும்பாலும் தவறாமல் ஜயமடைவார். ஒரு நாளில் பதினன்கு மணிநேரம் ஒரு தடவை நான் அவரு டன் சீட்டு விளையாடினது எனக்கு ஞாபகமிருக்கிறது. அவர் தம்முடைய விளையாட்டுகளில் மாறாத கவனத்தை யும் முழுமனத்தையும் செலுத்திக் கூடுமானால், வெற்றி அடைவதில் கண்ணுங் கருத்துமாய் இருப்பார்.

AS AN ENGLISH WRITER.

ஆங்கில பண்டிதர்.

ஆங்கிலம் எழுதுவதில் கோகலே நல்ல நடையைக் கவனிப்பவர். ஆங்கிலத்தில் அவர் எழுதின விஷ யங்கள் அவரால் எவ்வளவு பூர்த்தி செய்யக்கூடுமோ அவ் வளவு பூர்த்திசெய்யப்பட்டவை. ஒரு கேவலமான குறிப்பு எழுதவேண்டிய காலத்திலும் அவர் அவசரப்பட்டு எழுதி னதே இல்லை; தம்முடைய சொற்களை அதிக ஜாக்கிரதை யாய்ச் சீர்தூக்கிப்பார்த்தே எழுதுவது வழக்கம். பொது

வாய், அவருடைய கருத்தை வெளியிடுவதற்குரிய சரியான ஒரே வார்த்தை கஷ்டமில்லாமலே அவருக்கு வந்துவிடும். ஆயினும் சிற்சில சமயங்களில் சரியானவார்த்தை கண்டுபிடிப்பதற்காக அவ்வார்த்தை வரும் வரையிலும் அவர் தமது வீட்டுத்திண்ணையில் மேலுங்கீழும் நடந்துகொண்டு பல க்ஷணங்களையும் நாழிகைகளையும் கழிப்பார். அவர் "கூட்டிற் புலிபோல" நடக்கிறார் என்று நாங்கள் சொல்வதுண்டு. நான், ஒருதடவை அவர் இப்படிச் செய்துகொண்டிருக்கக் கண்டு, அவர் எடுத்துக்கொண்ட சிரமத்தைக் கவனிக்கும்போது தாம் அகஸ்மாத்தாய் எழுதலான ஒவ்வொரு வரியும் தமது காலஞ்சென்ற பின் பிரசுரிக்கப்படும் என்று அவர் எண்ணினதுபோல் தோன்றிற்று என்று சொன்னேன். இது வேடிக்கையாகச் சொல்லப்பட்டதாயினும், அவரிடமிருந்து வந்த ஒவ்வொரு சிறு கடிதத்தையும் காலஞ்சென்ற அத்தலைவரது விலையற்ற ஞாபகக் குறிப்பாக எத்தனை பேர்கள் இப்பொழுது பத்திரப்படுத்திக் கொண்டிருத்தல் வேண்டும். அவர் ஆங்கிலேயர்களோடு சம்பாஷிக்கும்போது, புத்தகங்களிலிருந்து ஒரு இந்தியன் கற்றுக்கொள்கிற வார்த்தைகளில் ஏதேனும் விசேஷத்தைக் கவனிப்பதிலும், ஆங்கில உச்சரிப்பில் தமது குறைவுகளை நிறைவு செய்து கொள்வதிலும் எப்பொழுதும் ஜாக்கிரதையாக இருப்பார். யாதொன்று செவ்வையாய் எழுதியிருக்கக் கண்டாலும் இயற்கையாகவே அவர் அதை வியந்துகொண்டாடுவார். அவருக்குப் பழக்கமில்லாத ஒருவர் நல்ல வாசகத்தில் ஒரு கடிதம் எழுதினல் அவரைப்பற்றி கோகலே எப்பொழுதும் முதலில் நல்ல அபிப்பிராயங் கொள்வார்; பல முறைகளில் அவ்வபிப்பிராயத்தை அடியோடே மாற்றவேண்டியவரானார்; அப்படிச் செய்வதற்கு எப்பொழுதும் சந்தோ

ஷத்துடன் சித்தமாயிருப்பார். சில சமயங்களில் மகாலே அல்லது பர்க் என்கிற ஆங்கில பண்டிதர்களைப் பின்பற்றி வாக்கலங்காரமாய் எழுதின ஒரு கடிதத்தை முன்னிட்டு, அவரைப் பார்ப்பதற்கு விரும்பத்தகாத சிலர் முதலில் வரும்பொழுது, அவர்களைப் பார்த்துப் பேசுவதில் தமக்காயினும் தமது நண்பர்களுக்காயினும் கொஞ்சநேரம் சிரமத்தை உண்டாக்கிக் கொள்வார். வேடிக்கையாகச் சொல்லுமிடத்து, கோகலே எழுதினவைகள் எல்லாம் பெரும்பாலும் அவர் செய்த பிரசங்கங்களே ஆகும். அரைத்தாள் காகிதத்தை மாத்திரம் தமக்குதவியாக வைத்துக்கொண்டு எழுதிப்படிக்காமலே அவர் பிரசங்கம் செய்வார். அவர் பிரசங்கங்கள் இன்னும் வியாசம் எழுதுவதற்கு முன்மாதிரியாய் இருக்கின்றன. கேட்போர் மனத்தைக்கவரும் இனிதான அவருடைய குரலால் அவர் பிரசங்கங்களின் பலன்கள் அதிகரித்தன. அவர் ஒரு புத்தகமும் எழுதிவைக்காமற் போய்விட்டது விசனிக்கத்தக்கது. ஸ்ரீமான் ரானடே அவர்கள் இறந்து போனபின், மார்லி என்பவர் எழுதின பர்க் என்பவருடைய சரித்திரத்தைப் பின்பற்றி, அவருடைய சரித்திரத்தை எழுதவேண்டுமென்று இவருக்கு எண்ணமிருந்தது. பிற்பாடு அவ்வெண்ணத்தை முற்றிலும் விட்டுவிடவில்லை யாயினும் அது நாளுக்கு நாள் முடியாத காரியமாய்ப் போய்விட்டது. தக்கபடி எழுதப்பட்ட ரானடேயின் சரிதம் இன்னும் யாவராலும் வேண்டப்படுவ தொன்றாகும். அச்சரித்திரத்தை வேறொருவர் எழுதி முடித்தாலும் கோகலேயே எழுதுவதற்கு இணையாகாது.

AS A SPEAKER.

பிரசங்கி.

ஆங்கில போதகராக கோகலே முதன்மை பெற்றவ ரல்லர் ஆயினும் ஆங்கில பாஷாஞானம் அவருக்கு அதிகமாயுண்டு. தமது வகுப்பிற்குச் சொல்லிக் கொடுக்கும் பொருட்டு, ஆங்கிலபாஷையின் பல காலப்பாகுபாடுகளையும் அவர் விரிவாகப் படிக்க வேண்டுபவரானார். அதனால் இக்காலத்தில் வெகுவாய்ப் புகழ்ந்து பேசப்படுவனவும், எழுதப்படுவனவும், படிக்கப்படாதனவுமான பல புத்தகங்களை அவர் படித்தார். அவர் தமது பிரசங்கத்தில் கொண்ட பொருளைக் குறிக்கும் மேற்கோள் எடுத்துக்காட்டவல்லவர். அவர் சாதாரணமாய்ச் சம்பாஷிக்கும்போது அரிய நூற்களிலும், எண்ணங்களிலும் வெகுவாய்ப் பயின்ற மனமுடையவர் என்பது வெளியாகும். ஆதியில் தமது வகுப்பு மாணாக்கர் மனத்திலும், பிற்காலத்தில் பொதுஜனங்கள் மனத்திலும் அவருடைய வாக்குவன்மை ஒரேமாதிரியாகப் பதிந்துவிட்டது. அவர் சிறு வயதில் பிரசங்கம் செய்யும் போது பீதியடைந்து இடையிடையே நிறுத்தி நிறுத்திப் பேசுவாராம். அவர் உபாத்தியாயர் ஆனவுடனே இக் குறையை நிவர்த்திசெய்துகொள்ளத் தீர்மானித்துக்கொண்டார். அதற்காகப் பெயர்பெற்ற அனேக பிரசங்கங்களை ஒரு அப்பியாசமாக நெட்டுருப்பண்ணினார். செவ்வையாய்ச் செய்த ஒரு நல்ல பிரசங்கத்தில் அவருக்கு எப்போதும் விசேஷமான பிரியம் உண்டு. திறமைவாய்ந்த பிரசங்கியாக இந்தியாவில் விரைவில் அவரே முதன்மை பெற்றார். அவர் பிரசங்கம் செய்யும்பொழுது, வங்காள தேசத்து நாவலர்கள் (orators) பெரும்பாலும் நடித்துப் படாடோபமான

நடையிற் பேசுவதுபோலப் பேசமாட்டார்; வாதிகளுக்கு வேண்டுவதான சமயோசித விடை கொடுக்கவுமாட்டார். அவருடைய பிரசங்கங்கள் அவற்றிற்குரிய அமிசங்களி னால் பின் பற்றத்தக்கவையாகும். அவர் பிரசங்கத்தில் இடைவிடாது முறையாக விஷயங்களை எடுத்துக்காட்டி வாதிக்கும் விதமும், அவருடைய இனிய குரலோசையும் சேர்ந்து, பேருக்குப் பெரும்பிரசங்கங்கள் என்று சொல்லப் படுபவைகளால் ஒருக்காலும் சாதிக்கமுடியாத வேலையைச் செய்தன. கோகலேயின் பிரசங்கங்கள் அவர் உபாத்தியாய ராய் இருந்தவர் என்பதை ஒருவருக்கு ஞாபகமூட்டும் என்று சொல்லலாம். நமது நாட்டிலிருக்கும் மற்றப் பிர சங்கிகளில் அனேகர் தாங்கள் வக்கீல்களாய் இருந்தவர்கள் என்பதை நாம் ஒருபொழுதும் மறக்க விடுவதில்லை. அவர் பிரசங்கிக்கும்போது கேட்போர் ஒருபொழுதும் தங்களுக் குச் சிரமம் உண்டாவதாக உணரமாட்டார்கள்; அவருடைய பிரசங்கத்துக்குத் தாங்கள் வசப்படுவதை உணர்ந்து, அவர் தங்களால் செய்யமுடியாத ஒன்றையும் செய்து விடவில்லை யென்றும், தாங்களும் செவ்வையாக அவருக்குச் சமமாய் பிரசங்கிக்கக்கூடும் என்றும் எண்ணிக்கொண்டு எழுந்து போய் விடுவார்கள். அச்சிற் பதிப்பிக்கப்பட்ட பிரசங்கங் களை அப்படியே படித்தால் வெறுப்புண்டாகும். அச்சிட லான கோகலேயின் பிரசங்கங்கள் படிப்பதற்கு வெறுப்பை தருவதில்லை யென்பதே அவற்றின் மேன்மைக்கு நல்ல சாட்சியமாகும்.

AS A TEACHER OF HISTORY.

சரித்திர போதகர்.

சரித்திரங் கற்பிப்பதில் அவர் இன்னும் அதிக திறமையும் பிரியமும் உடையவர். அவருக்குச் சரித்திரத்தில் விருப்பம் உண்டாவதற்குக் காரணம்: தேசசரித்திரம் இக்காலத்து நடவடிக்கைகளுக்கு ஒரு பிரதிபிம்பமாய் இருக்கிறதென்பதே அல்லாமல் சரித்திரம அதன் பொருட்டே படிக்கதற்குரிய விஷயம் என்பதனால் அன்று. முற்காலத்துச் செய்கைகளால் இக்காலத்துச் செய்கைகள் எப்படி பாதிக்கப்படுகின்றன என்பதை அவர் எப்பொழுதும் கவனித்துக் கொண்டிருப்பது வழக்கம்; அதனால் பலமுறைகளில் எடுத்துக்கொண்ட விஷயத்தை விட்டுவிட்டு தற்கால இராஜீய விஷயங்களைப்பற்றிப் பேசப் புகுந்துவிடுவார். இங்ஙனமாக, இங்கிலீஷ் தேசசரித்திரத்தில் அவர் முறையாகச் செய்யவேண்டிய சில பிரசங்கங்களில் விஷயத்தை நிறுத்திவிட்டு, அயர்லந்து இங்கிலந்தோடு சேர்ந்த பிற்பாடு நடந்த அயர்லந்து தேசசரித்திரத்தை மீளவும் ஒருவாரம் தொகுத்துச்சொல்லுவார். அயர்லந்து தேசசரித்திரத்தின் போக்கு ஒருவாற்றால் இந்தியாதேசத்தின் சரித்திரத்தை ஒத்ததென்று அவர் எப்பொழுதும் எண்ணினர். ஒரு நூற்றாண்டு முழுவதும் அயர்லந்து தேசத்துத் தலைவர்கள் நீண்டகாலம் இடைவிடாது செய்துகாட்டிய உழைப்பையும், சுயநலங்கருதாத தன்மறுப்பையும் சமயம் வாய்த்தபோதெல்லாம் மாணாக்கர் மனத்திற் பதியும்படிச் சொல்லுவார்; வேறெவ்விதத்திலும் ஜாதியமேன்மை அடைய முடியாதென்று அவர் எண்ணினர். டப்ளின்பட்டணத்துப் "ப்ரீமன்" (Freeman) என்னும் பத்திரிகையையும், லண்டன் பட்ட

ணத்து "டைம்ஸ்" (Times) என்னும் பத்திரிகையின் வாரமும்முறைப் பதிப்பையும், ஆங்கிலேயரது இராஜீய விஷயங்களை நன்றாய்த் தெரிந்துகொள்வதற்காக, சிறுவயதிலும், ஒழுங்காய் வரப்பெற்றுப் படிப்பார். அவர் கற்பிப்பது எப்படியென்றால்: வகுப்புக்குள் நுழைவதற்குமுன் ஒரு விஷயத்தைப்பற்றி எழுதியிருக்கிற புத்தகங்களிற் பெரும்பாலும் எல்லாவற்றையும் கிடைத்தமட்டும் படித்துவிடுவார்; கற்பிக்கும் நேரமெல்லாம் அவர் வாய்வார்த்தைகள் தங்கு தடையின்றி வந்துகொண்டே இருக்கும். இக்காலத்திற் சரித்திரங்கற்பிக்கும் உபாத்தியார்களைப்போல, அவர் மாணாக்கர்களைச் சரித்திரத்தில் குறிப்புகள் (நோட்ஸ்) சொல்லி எழுதச்செய்கிற வழக்கம் வைத்துக்கொள்ளவில்லை. சரித்திர பாடபுத்தகத்தைப் படிப்பது மாணாக்கர்களுடைய கடமை யென்றும், அதைவிரிதது்ச் சொல்லுவதும், சிலசமயங்களில் தமது பிரசங்க மூலமாய் விபக்தமாய்த் தெரியும்படிக்காட்டுவதும் தமமுடைய கடமையென்றும் சொல்லுவார். ஒரு சரித்திரபோதகருக்கு வேண்டிய சில நல்ல இலக்கணங்கள் அவரிடத்தில் அமைந்திருந்தாலும் அவர் ஒரு விதத்திலும பழைய பூசணம்பிடித்த சாசனங்களிற் பிரியப்படுகிற மூலசரித்திரக்காரர் (Original Historian) ஆகக்கூடும் என்று நான் எண்ணவில்லை. அவர் மனது சீலி என்ற சரித்திரக்காரருடைய மனததை ஒத்திருந்தது போல பரீமன் (Freeman) என்னும சரித்திரக்காரருடைய மனததை ஒத்திருக்கவில்லை. இந்தியாதேச சரித்திரததை அவர் அவ்வளவு கவனிக்கவில்லை. இந்தியாவில் அரசாண்ட அநேக இராஜ வமிசததாரைப்பற்றி விரிவான எந்த வரலாற்றையும் படிப்பதைவிட, குடிபரசைப்பற்றிய எண்ணங்கள் காலக்கிரமத்தில் தெளிவாக விருத்தியடைந்தமையைச்

சொல்லுகிற ஐரோப்பாவின் முற்கால தற்கால சரித்திரத்தைப் படிப்பதால் நாம் அதிக புத்திமதிகளை அறிந்து கொள்ளலாம் என்று அவர் எண்ணினார். இந்திய தேச சரித்திரமாவது: இந்தியாவில் அரசாண்ட அனேக இராஜ வம்சத்தாரைப்பற்றிய வரலாறு என்றே பொதுப்படச் சொல்லலாம் என்றும் அவர் நினைத்தார்.

GOKHALE AS AN ECONOMIST.

செல்வநூல் போதகர்.

கலாசாலையில் கோகலே கற்பித்த பாடங்கள் எல்லாவற்றிலும் அவரால் மிகுதியும் விரும்பப்பட்டதும், வெகு திறமையுடன்போதிக்கப்பட்டதும் செல்வநூலாகும். இவ்விஷயத்தைப்பற்றி வெகுவாய் ஆங்கிலத்தில் எழுதியிருக்கிற நூற்கள் எல்லாவற்றையும் அவர் அறிவார்; ஆகையினால் பிரஞ்சுப்பாஷையும், ஜெர்மன்பாஷையும் அவருக்குத் தெரியாமற்போனாலும் அதனால் அவருக்கு அதிக கஷ்டமுண்டாகவில்லை. உபாத்தியாயர் என்னும் பெயருக்குத் தகுதியுடையவர் ஒவ்வொருவரும் தாம் வல்லவராய் இருக்கிற கல்வித்துறையிலே பேர்வாங்கவேண்டும் என்றும், நிலையாகவும் புதிதாகவும் இருக்கும்படி தமக்குப்பின்னால் ஏதேனும் ஒருவேலை செய்துவைத்துப் போகவேண்டும் என்றும் சிற்சில சமயங்களில் ஆசைகொண்டிருப்பது நிசசயம். தாம் முற்றிலுஞ் செல்வநூலையே படிப்பதில் கவனஞ்செலுத்தியிருந்தால், அதில் தாம் மற்றவர்கள் அறியாத யாதேனும் புதிய விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கக்கூடும் என்று கோகலேக்குச் சில சமயங்களில் தோன்றிற்று. நாணகஞ்செய்

வதில் இரண்டு உலோகங்களைக் கலக்கும் விஷயத்தை (பை மெடலிஸம்) ப்பற்றித் தமக்குச் சில புதிய கருத்துக்கள் தோன்றியிருப்பதாவும், அக்கருத்துக்களைச் சரியாய் விரித்தால், விவாதத்துக்கிடமான அவ்விஷயத்தைச்சூழ்ந்த கஷ்டங்கள் பலவற்றை நிவர்த்திசெய்யக்கூடும் என்றும் அவர் சொன்னார். ஆயினும் எப்பொழுதும் முதலில் இதைவிட அவசரமும் அவசியமுமான கடமைகளைச் செய்வதில் அவர் தமது ஊக்கத்தையும் காலத்தையும் கழிக்கவேண்டுபவரானார். ஆகவே பூர்த்தியடையாத இவ்வெண்ணங்களும் "இருந்திருக்கலாம்" என்ற கூட்டத்தைச் சேரவேண்டியவையே. ஆராய்ச்சிசெய்யுந் தொழில் சரியானதென்று அவர் நன்குணர்ந்திருந்தும் அத்தொழிலை அசட்டைசெய்தார் என்று நாம் எண்ணக்கூடாது. நமது தேசத்தின் தற்கால நிலைமையில் தேசத்துக்கு உழைப்பவர்கள் வெகு சிலரேயாக இருக்கும் பொழுது, திறமையுள்ள ஒருவன் ஒரே துறையில் பாண்டித்தியம் பெறுவது தகாது என்று அவர் சாவதானமாகவே தீர்மானித்தார். ஒரே ஒரு வேலையை விருத்திசெய்வதைக்காட்டிலும் பலவேலைகளைச் செய்வது நமது தலைவர்களுக்கு அவசியமாக இருக்கிறது. உழைப்பவர்களுடைய தொகை அதிகமாகும்பொழுது பிரத்தியேகமாய் ஒரு வேலையை அப்பியசிப்பதற்குக் காலம்வரும். இவ்வபிப்பிராயம் சரியானாலும் தப்பானாலும் தமது தேசத்தின் க்ஷேமத்துக்காக அவர் காட்டிய தன்மறுப்பிற்கு இது மற்றொரு திருஷ்டாந்தமென்றே நாம் கொள்ளவேண்டும். அவர்செய்த பரித்தியாகங்களில் மகாமேன்மை தங்கியவற்றில் இது ஒன்று என்றும் அனேகர் நினைப்பார்கள்.

WORK OF COLLEGE ORGANIZATION.

கலாசாலையை ஒழுங்கு பெறச்செய்தல்.

கலாசாலையில் அவர் செய்யவேண்டுவதாயிருந்த உபாத்திமைத்தொழிலைத் தவிர, புறம்பாகவும் அதற்காக மிகவும் உழைத்தார். ஸ்ரீமான். திலகரும், ஸ்ரீமான். நாம் ஜோஷியும் தங்கள் வேலையை விட்டுவிட்ட பிறகு, அக்கலாசாலைத்தலைவரான ஸ்ரீமான். ஆபடே காலஞ்சென்றபொழுது வெளியிலிருக்கும் ஜனங்கள் அவரையே தக்காணத்துக் கல்விச்சங்கத்தின் பிரதிநிதியென்று நினைக்கும் ஸ்தானத்தைப் பெற்றார். கலாசாலைக்குத் தகுந்த கட்டடங்கள் கட்டுவதாக அச்சங்கத்தார் ஆரம்பித்தார்கள். சிலர் பணஉதவி செய்வதாக முன்பே வாக்களித்திருந்தார்கள். 1892-ம் வருஷத்தில் புதுக்கலாசாலைக் கட்டடங்களுக்கு அஸ்திவாரக்கல் இடப்பட்டது. வேண்டியபணம் தயாரிக்கும் வேலையைக் கோகலே செய்யவேண்டியவரானார். ஒரு வாரத்தில் 4, 5, நாள் மாத்திரம் அவர் கலாசாலையில் வேலைபார்ப்பார் பம்பாயிலும், தூரமான வேறிடங்களிலும் பணவசூல் செய்வதில் வாரக் கடைசிநாட்களைக் கழிப்பார். அவர் உழைப்பின் பயனாக 1895-ம வருஷத்தில் கலாசாலைக்கட்டடமும், மாணவர் விடுதியும் (ஹாஸ்டல்) திறக்கப்பட்டபொழுது அவைகள் யாதொரு குறைவுமில்லாதிருந்தன. இவ்வண்ணமாக அவர் கஷ்டப்பட்டு பணம வசூல் செய்கிற பொழுது இவ்விராஜதானியில் உள்ள பல முக்கிய இடங்களுக்குப்போய் அநேகருடைய சிநேகத்தை அடைந்தார். அவர் நமது பிற்காலத்தில் உள் நாட்டில் பிரயாணம் செய்வது அருமையாய் இருந்தாலும, இச்சிநேகிதர்கள் பல இடங்களிலும் ஜனங்கள் கொண்டிருந்த அபிப்பிராயத்தை

இவருக்கு நன்றாகத் தெரிவித்துக் கொண்டிருந்தபடியால், நாடு முழுவதிலும் ஜனங்கள் என்ன நினைத்தார்கள் என்பதை இவர் அறிந்துகொள்ளக்கூடும். இப்பணவசூல் செய்யும் வேலையைப்போல் மகாகஷ்டமான வேலை வேறொன்றும் இல்லை. அக்காலத்தில் இவரடைந்த அநுபவமே, தென்னாபிரிகா கஷ்டத்திற்காகப் பணம் வேண்டுமென்று அவர் முறையிட்டபொழுது அவருக்கு மிகுந்த சித்தியுண்டாகும்படிச் செய்தது. தக்காணத்துக் கல்விச்சங்கத்திற்கு அவர் பலவருஷங்கள் காரியதரிசியாகவும் இருந்தார். அதனால் அரசாங்கத்தாரோடு அச்சங்கம் செய்த கடிதமாற்று (கரஸ்பாண்டென்ஸ்) க்கும், அச்சங்கத்தின் ஆலோசனை சபை, ஆயுட்கால அங்கத்தினர் சபை என்னும் இரண்டு வகுப்பாருக்குட்பட்ட அச்சங்கத்தின் இரட்டை நிர்வாக முறை தடையில்லாமல் நடைபெற்றதற்கும் அவரே காரணமாவார். பலகாரணங்களால் அச்சங்கத்தின் அமைப்பைக் கொஞ்சம் மாற்றும்படி நேரிட்டபொழுது, அக்கஷ்டமான விவகாரங்களைக் கலந்து பேசி முடிப்பதற்குத் தமது சகாக்களுடைய நம்பிக்கை பெற்ற பிரதிநிதியாக இருந்தவர் கோகலேயே. விசேஷ காலங்களிலும், சாதாரணகாலங்களிலும், அவர் இச்சங்கத்தை விட்டுப்போனபின் தேசமுழுவதிற்கும் பொதுப் பிரசங்கியானதுபோல, இச்சங்கத்திற்கும் இவரே பொதுப்பிரசங்கியாயிருந்தார்.

INTERCOURSE WITH STUDENTS.
மாணாக்கர்களோடு பழகுதல்.

தம்மை மாணாக்கர்கள் எளிதிற்கண்டு பேசுவதற்கு இடம் கொடுப்பவராயினும், மாணாக்கர்களுக்கு எப்பொழுதும் கோகலேயினிடத்தில் கொஞ்சம் பயமுண்டு. அவர்

மாணுக்கர்களோடு தாராளமாய்ப் பேசி, அவர்களுக்குள்ள கஷ்டங்களைத் தமக்குச் சொல்லும்படி தூண்டுவார். அமித வாதக் கொள்கைகள் (எக்ஸ்ட்ரிமிஸம்) மிதமிஞ்சியிருந்த கெட்ட நாட்களிலும், கோகலேயின் செல்வாக்கினுல் மித வாதக் கொள்கைகளையே அநுசரித்து, கம்பீரமான சொற்ருெடர்களின் பகட்டான மயக்கத்தில் மதிமோசம் போகாத சில மாணுக்கர்கள் இருந்தார்கள். இன்னும் விருத்தியடையத் தக்கவர்களான அனேக மாணுக்கர்களுடன் அவர் அதிகமாய் நெருங்கிப்பழகி, நேரிலேயே அவர்கள் படிப்புக்குத் தனியாகவும் உதவிசெய்வார். முன்னுல் வேறொரு சந்தாப்பத்தில் எனக்கு அவர் செய்ததைச் சொல்லி இருக்கிறேன். ஆயுட்கால அங்கத்தினராகத் தக்காணுததுக் கல்விசங்கத்திற் சேர்வதற்கு, முன்னுக்குவரத் தக்கவர்களாய்த் தோன்றுகிற வாலிபர்களை எப்பொழுதும் அவர் தேடிக்கொண்டே இருப்பார். எங்களில் அனேகர் அச்சங்கத்தில் ஆயுட்கால அங்கத்தினர் ஆவதற்கு முதலில் தூண்டுதல் செய்தவரும் அவரே. தேசசம்பந்தமாய் ஆலோசிக்கவேண்டிய விஷயங்களை யதார்த்தமாய் ஆராய்ந்து எடுத்துச்சொல்வதன்றி, அவர் கிரமந்தப்பி ஒருவரையும் தூண்டவில்லை யென்று நாம் சொல்லவேண்டுவது அவசியம். ஊக்கமுள்ள வாலிபர்கள் சுயநலம் கருதாது ஏதாயினும் ஒரு ஜனோபகாரமான வேலை செய்யவேண்டும் என்பதை அவர் மனதிற்படும்படி சொல்லுவார்; அச்சங்கத்திற் சேரும்படி அவர்களை எந்தவிதத்திலும் நிர்ப்பந்திக்கவில்லை.அவர்களைப் பலவந்தபபடுத்துவது “ அவசரமாய் மணந்து சாவகாசமாய் வருந்து ” என்னும பழமொழியைக் கொஞ்சம் வித்தியாசமான அர்த்தத்தோடு, கடைசி கடைசியாய் உறுதிப்படுத்தும்படியாய்ச் செய்வதாகும்.

WORK IN THE BOMBAY UNIVERSITY.

பம்பாய் சர்வகலாசங்கத்திற் செய்த வேலை.

பூனாவில் உள்ள அனேக கல்விச்சங்கங்களில் ஏதேனும் ஒரு விதத்தில் கோகலே சம்பந்தப்பட்டிருந்தார். பம்பாய் சர்வகலாசங்கத்தில் அவர்க்கிருந்த வேலையைச் சுருக்கிச் சொல்லுவோம். கர்ஸனுக்கு முற்பட்ட இராஜப்பிரதிநிதியின் ஆளுகைக்காலத்தில் வித்தியாபட்டதாரிகளால் சர்வகலாசங்கத்தின் ஓர் சகாவாகத் தெரிந்தெடுக்கப்பட்டு அவர் இறக்குமளவும் ஓர் சகாவாகவே இருந்தார். கர்ஸனுடைய சர்வகலாசங்கமசோதா (யூனிவர்ஸிடி பில்) சட்டமான பின்பு அவர் ஒரு சகாவாக நியமிக்கப்பட்டார். ஒரு வருஷம சர்வகலாசங்க அதிகாரிகள சபையில் அவர் ஒரு அங்கத்தினராக இருந்தார். இவரைக் கோரினவர்கள் மறுபடியும் இவரைத் தெரிந்தெடுப்பதற்காக மற்றவர்களுடைய சம்மதத்தைப் பெறுவதற்கிணங்காறு, சர்வகலாசபை (செனட்) யின் அங்கத்தினர்களாறு பருந்தறியுஞ் சந்திக்கு வேண்டுமென்றே தாழ்ச்சிசெய்துகொண்டமையால், அடுத்தமுறை இவர் அங்கத்தினராக முடியவில்லை. தமது பிற்காலத்தில் சர்வகலாசபைக் கூட்டத்திற்கு ஒழுங்காகப் போவதற்கு அவருக்கு அவகாசம் கிடைக்கவில்லை; ஆயினும் அக்கூட்டத்திற்கு இவர் போனபோது, அங்கே நடந்த வாதத்தில் இவரும் சேர்ந்துகொள்வார். அதனால் வெகு பிரயோசனம உண்டாயிற்று. பி. ஏ. படிப்பிற்குச் சரித்திரத்தைக் கட்டாயபாடமாகச் செய்கிறதா என்கிற வழக்கு நடந்துகொண்டிருந்தபோது அவர் சர்வகலாசபையில் கடைசி கடைசியாகப் பேசினார். அப்போது முக்கியமாய் இந்தியர்களுக்குச் சரித்திரம் பொதுப்பாடமாய்

இருக்கவேண்டும் என்பதை வெகு சமத்காரமாய் எடுத்துக் காட்டினார். மேலும், பெரும்பான்மையோர் அபிப்பிராயம் (மெஜாரிடி) பெறும்பொருட்டுச் சில அங்கத்தினருக்கு முன்பே முறையாக சமாசாரம் அறிவித்து அவர்களைச் சித்தப் படுத்த முயன்றதைக் கண்டித்தும் பேசினார். அவர் அப்பொழுது சொன்னவார்த்தைகள் கேட்போர் மனதில் நன்றாக ஊன்றிவிட்டன. அவர் பேச்சு முடிந்தவுடனே அபிப் பிராயம் கேட்டிருந்தால் நிச்சயமாக அவர்பட்சம் ஜயம் அடைந்திருக்கும் என்று கடைசியில் அவருக்கு விரோத மாக அபிப்பிராயம் கொடுதத அசசபையின் அங்கத்தாரில் அனேகர் கருதினார்கள். அவர் அனேக வருஷங்களாய் சர்வகலாசங்கத்தில் ஆங்கிலபாஷைக்கும், சரித்திரத்துக்கும் பரீட்சகராய் இருந்தார். படிக்கும் விஷயத்தில் செய்த புது ஏற்பாட்டின்படி எழுதப்பட்ட சரித்திர பாடக்குறிப்புகள் (சிலபஸ்) பெரும்பான்மையும் அவருடைய ஆலோசனையின்படி செய்தவையாகும். பீ. ஏ. படிப்பில் இராஜாங்க சாஸ்திரத்தையும் (பொலிடிகல் சைன்ஸ்), பீ. ஏ. படிப்பிலும் எம். ஏ. படிப்பிலும் இந்திய பொருளாதாரசாஸ்திரத்தையும் சேர்த்துக்கொண்டது விசேஷமாய் அவருடைய கருத்தின்படியே யாகும். 1903-ம் வருஷத்தில் சர்வ கலாசங்கமசோதாவைப் பற்றியும், ஒன்றிரண்டு வருஷங்களுக்குப்பின் அதைச் செல்லச் செய்யும் மசோதாவைப் பற்றியும் நடந்தயோசனையில் அவர் என்ன செய்தார் என்பதை இராஜப் பிரதிநிதியின் சபையில் அவர் செய்தவேலையைப்பற்றிப் பேசும்போது சொல்லுவோம்.

JOURNALISM : ASSOCIATION WITH AGARKAR.

பத்திரிகை நடத்துதல் : ஆகரகரவோடு கூட்டுறவு.

அவர் இராஜாங்க காரியங்களில் சரியாய்த் தலையிடுவதற்கு முன் பத்திரிகை நடத்துவதிலும் ஆசார திருத்தம் செய்வதிலும் அவர் செய்த வேலையைக் குறித்து நாம் சில வார்த்தைகள் சொல்லலாம். புதிய இங்கிலீஷ்பாடசாலை முதலில் ஸ்தாபிக்கப்பட்டபொழுது, அதை ஸ்தாபித்தவர்கள் கேசரி, மராட்டா என்னும் இரண்டு பத்திரிகைகளையும், ஆரியபூஷண அச்சுக்கூடத்தையும் ஆரம்பித்து நடத்தலானார்கள். இவ்விரண்டு பத்திரிகைகளை நடத்துதல் அவர்கள் தொழிலின் ஒரு அம்சமாய் இருந்தது. பிற்காலத்தில், ஏறக்குறைய 1885-ம் வருஷத்தில், கல்வி சம்பந்தமான காரியங்களிலிருந்து சமாசாரப்பத்திரிகை நடத்துந் தொழிலைப் பிரித்துவிடுவது சரியென்று தோன்றிற்று. கேசரியும், மராட்டாவும் ஸ்ரீமான். ஆகரகரவுக்கும், ஸ்ரீமான் திலகருக்கும் நேராகவே கொடுக்கப்பட்டன. ஆரிய பூஷண அச்சுக்கூடத்திற்குத் தனியாக வேறுவிதமான ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வச்சுக் கூடத்திற்கு முக்கியமான சொந்தக்காரர் ஸ்ரீமான். கேலகார் என்பவர். சிலவருஷங்கள் ஸ்ரீமான். ஆகரகரவே கேசரிக்கு முக்கிய பத்திராசிரியாய் இருந்தார். ஆயினும் பிற்காலத்தில் ஸ்ரீமான். திலகா அதைநடத்தும் பிரதானமனுஷர் ஆனார். கௌமாரிம்ஸ நிவடக நிஹம்த இல் கேசரியிலிருந்து எடுத்து அச்சிட்ட சில விஷயங்கள் உண்மையாகவே ஸ்ரீமான். ஆகரகரவால் எழுதப்பட்டவை. 1888-ம் வருஷ அளவில் இவ்விருவரும் சேர்ந்திருக்க முடியவில்லை. முதலில் ஆசார திருத்தத்தைப் பற்றி மட்டுமே அவர்களுக்கிடையில் அபிப்பிராய பேதம்

உண்டாயிற்று. ஆயினும் அது இடைவிடாமல் பெருகி, ஸ்ரீமான். ஆகரகர கேசரி பத்திரிகைக்கும் தமக்கும் உள்ள சம்பந்தத்தை அறவே நீக்கிக்கொண்டார். ஆசாரதிருத்தம் செய்யவேண்டும் என்று தாம கொண்ட மிகுந்த அக்கரையை வெளியே காட்டுவதற்கு ஒரு சாதனம் அவசியம் என்று கண்டு ஸ்ரீமான். ஆகரகர ஏறக்குறைய 1889-ம் வருஷத்தில் சுதரக் என்ற பெயருடன் ஒரு ஆங்கில-மராத்திப் பத்திரிகையை நடத்த ஆரம்பித்தார். இத்தொழிலில் ஸ்ரீமான். ஆகரகரவை முக்கிய காரியநிர்வாகியாகவும், கோகலேயை ஒரு கூட்டுக்காரராகவும் சொல்லலாம். பொதுவாய் இராஜீய காரியங்களைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதும் விஷயங்களுக்குக் கோகலே உத்தரவாதி. அப்பத்திரிகையிற் பெரும்பாகம் ஆசார திருத்தத்தைப்பற்றி மராத்தி பாஷையில் எழுதும் வேலையை ஸ்ரீமான். ஆகரகரவே மேற்கொண்டார். கருத்துத்தோன்ற அப்பாஷையில் வற்புறுத்தி எழுதுவதில் அவருக்கு சமானம் ஒருவரும் இல்லையென்றே சொல்லலாம். சில சமயங்களில் அவர்கள் இம்முறையை மாற்றிக்கொண்டார்கள். கோகலே மனதுவைத்தால் மராத்திபாஷையை நன்றாய் எழுதவும் பேசவும் கூடும். அவுரங்கசீப்பின் பிடியிலிருந்து ஒரு உபாயத்தால் தப்பித்துக்கொண்டபிற்பாடு, ஜகந்நாத முதலிய புண்ணிய ஸ்தலங்களில் சிவாஜி சஞ்சாரஞ்செய்ததைப்பற்றித் தாம் அப்பாஷையில் ஒரு கற்பனைக்கதை செய்ததாய் கோகலே ஒரு சமயத்தில் என்னிடம் சொன்னார். பொதுவாய் அவர் இராஜாங்க விவகாரங்களைப்பற்றி மாத்திரம எழுதுவார்; ஆங்கிலத்தில் மாத்திரமே தமது கருத்துக்களை வெளியிட்டு வந்தார். ஜனங்களிடத்திலிருக்கிற குறைவுகளை வேண்டுமென்றே எடுத்துக்காட்டுவது அப்பத்திரிகையின் பிரசித்த

மான நோக்கம். ஜனங்களுடைய தப்பபிப்பிராயங்களையும் குற்றங்களையும் அது புகழ்ந்துபேசவில்லை. ஜனங்களுக்குவரும துரதிர்ஷ்டத்துக்கு நமது துரைத்தனத்தார்மீது குற்றஞ்சுமத்துவதால் நிச்சயமாய் ஜனங்களுடைய அபிமானமும், பணலாபமும் கிடைப்பனவாயிருந்தும் அது அப்படிச் செய்யவில்லை. இப்படியிருந்தும் அப்பத்திரிகை நன்றாக விருத்தியடைந்து முதல் வருஷத்தில் அப்பத்திரிகையின் வரவும் செலவும் சமமாயிருந்தன. மாற்றாகவந்த பழைய சமாசாரப்பத்திரிகைகளை உதவாதகாகிதங்களாக விற்றதில் வந்த பணத்தில் பாதிதான் கோகலேக்குக் கிடைத்தபாகம். அடுத்த வருஷத்தில் பத்திராசிரியர்கள் இருவருக்கும் தலைக்குச் சுமார் நூறு ரூபா கிடைத்தது. பிற்காலத்தில் இன்னும் நல்லலாபம் கிடைத்ததாயினும் கோகலே செய்யவேண்டிய வேறு வேலைகள் அதிகமா யிருந்தபடியால் அவர் இரண்டு மூன்று வருஷத்தில் பத்திரிகை நடத்துவதினின்றும் நீங்கிக் கொண்டார். சர்வஜன சபைக்குச் சொந்தமாய் மூன்று மாதத்திற் கொருமுறை வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகைக்கும் கோகலேயே பத்திராசிரியராயிருந்து, அதன் ஆரம்ப காலமுதல் ஸ்ரீமான். ரானடே அவர்களுடைய தூண்டுதலினால் அக்காலத்து இராஜாங்க விஷயங்களைக் குறித்து எழுதிவந்தார். தமது பிற்காலத்தில் பத்திரிகை நடத்துவதில் அவருக்கு அதிக சம்பந்த மில்லாவிட்டாலும் அவர் சமாசாரப் பத்திரிகைளைப் பேராசையுடன் படித்ததோடு, அத்தொழிலில மேலான அபிமானமுங் கொண்டிருந்தார். சில சமயங்களில் இங்கிலீஷ் பத்திரிகைகளில் எதற்காவது எந்தனும் விஷயம் எழுதி அனுப்புவார். ஆயினும் அவர் எப்போதும் அதிக வேலையுடையவராய் இருந்தமையினால் இவ்வாறு எழுதுவதும் கொஞ்சமே.

SOCIAL REFORM.

ஆசாரதிருத்தம்.

ஆசாரதிருத்தஞ் செய்வதில் அவர் முக்கியமாய் ஒன்றும் செய்யவில்லையாயினும், திருத்தக்காரரிடத்தில் அதிக அனுதாபங்காட்டினார். ஆரம்பத்தில் சுதாரக் என்னும் பத்திரிகை அதிக சித்திபெறும்படி கோகலே உதவி செய்தார். ஆயினும் அப்பெருமை அதிகமாக ஸ்ரீமான். ஆகரகர செய்தவேலைக்கும் எழுதின விஷயங்களுக்கும் உரியது. ஆசாரதிருத்த சம்பந்தமாய் அவர் பொதுக்கூட்டங்களிற் பேசின தெல்லாம் தாழ்ந்தவகுப்பாரை உயர்த்துவதைப்பற்றியே. அவர்களை உயர்த்துவது வெகு அவசியம் என்று உணர்ந்து, அவர் மிகவும் பரிந்து பேசினார். நமது தேசத்திலேயே மேற்சாதியைச் சேர்ந்த நாம் நமக்குச் சுதந்தரம் வேண்டுமென்று கேட்பதுபோலவே, தீண்டத்தகாத தாழ்ந்த வகுப்பாரான நமது உடன் தேசவாசிகளுக்கும் சமமான சுதந்தரம் கொடுப்பதற்கு மறுத்தால், தென்னாபிரிகாவில் இந்தியர்கள் ஜாதிவித்தியாசத்தால் சுதந்தரம இல்லாமல் கஷ்டப்படுவது கூடாதென்று நாம் முறையிடுவதும், சமசுதந்தரம் வேண்டுமென்று நமது அரசாங்கத்தாரோடு நாம் போராடுவதும் சுயநலத்தைக் கருதிச் செய்யும் பிரயோசனமில்லாத காரியமேயாகும். ஆசாரதிருத்தக் காரியங்களில் அவர் அதிகமாய் உழைக்காவிட்டாலும், அவர் எப்பொழுதும் தமது புத்திக்குச் சரியென்றுபட்ட வழியிலேயே நடப்பவர். இருபது வருஷங்களுக்கு முன பூனாவில் பாஞ்ச்ஹௌட் மடத்தில், சில பிராமணர்கள் தேயிலைப்பானம் சாப்பிட்டதனால், பூனாபட்டணத்தில் வைதிக பிராமணருக்குள் ஒரு குழப்பம் உண்டானபோது,

அவர்கள்செய்த ஜாதிவிலக்கைக் கொஞ்சமும் அவர் இலட்சியம் செய்யவில்லை. முறைதவறி நடக்கும் தமது சிநேகிதர்களிற் சிலர் இவரைப் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அப்போது பிராயச்சித்தம் செய்துகொள்வதனால் ஆசாரதிருத்தத்துக்கு உண்டாகும் கெடுதிகளை ஸ்ரீமான். ரானடே அவர்களிடத்திற் சொல்லுவதற்குப் போனசிலரில் கோகலேயும் ஒருவர். ஊக்கமும் தைரியமும் உள்ள ஒருவர் ஜனாசாரத்துக்கு மாறுபாடாகத்துணிந்து ஏதாவது செய்யவிரும்பினால் அவர் கோகலேயின் அநுதாபத்தை எப்பொழுதும் பெறலாம். சில ஜனாசார திருத்தக்காரர்கள் ஆசாரதிருத்தம் செய்வதில் கோகலே முன்னுக்கு வாராததினால் அவரிடத்து வருத்தங் கொள்கிறார்கள். ஆயினும் அவர் செய்து கொண்டிருந்த இராஜாங்க காரியங்களை தமது சக்தியெல்லாம் சேர்ந்து செய்யப்போதுமானவை என்றும்,செய்தாலும் முடியா என்றும் எண்ணினார். அவருடைய தனிவாழ்க்கையில் நேரிட்ட துர்ப்பாக்கியமான ஒருசங்கதியை அவருக்கு விரோதமாக எடுத்துக்காட்டுவதானால் அதற்கு அவர் சரியான சமாதானம் சொல்லமுடியாதென்று ஒருக்கால் நினைத்திருக்கலாம். தாம ஆசாரதிருத்தஞ் செய்யும் தலைவரில் ஒருவராக வந்தால், அதனால் மற்றவர்கள் அதற்கு விரோதமாக ஏதாவது எண்ணுவதினால், ஆசார திருத்தத்துக்கு இடையூறு வாராதபடி அவர் காப்பாற்ற விரும்பினது ஒருகாரணமாய் இருக்கலாம்.

POLITICAL WORK. GOKHALE AND TILAK.
இராஜீயவேலை கோகலேயும் திலகரும்.

இதைப்போன்ற இடத்தில் கோகலேயின் இராஜீய வேலையை அதிக விரிவாய் ஆராய்ச்சி செய்வதாய் எண்ணமில்லை. கோகலே யோசித்துச் செய்யவேண்டியிருந்த கடினவிஷயங்களை வரிசையாய்ச் சொல்லவும், அக் கடின விஷயங்களில் அவர் மிகவும் சம்பந்தப்பட்டிருந்த முக்கியமான சமயங்களைச் சொல்லவுமே நாம் முயற்சிசெய்வோம். அவர்செய்த இராஜீயவேலையை விரித்துச் சொல்வதானால், அது கடந்த இருபது வருஷத்து இந்திய உள் நாட்டு இராஜாங்க சரித்திரமாக விரிந்துவிடும். ஆயினும் இவ்விஷயத்தைக் குறித்துப் பேசுவதற்குமுன் ஸ்ரீமான். திலகருக்கும் அவருக்கும் இருந்த சம்பந்தத்தைச் சுருக்கிச் சொல்வது அவசியமாகும். கோகலேயைப் பற்றின எந்த சரித்திரத்திலும்—எவ்வளவு சுருக்கமாயிருந்தாலும், இவ் விருவருக்குமுள்ள சம்பந்தத்தை முற்றிலும் சொல்லாமல் விட்டுவிடுவது முடியாத காரியம். இதைச் சொல்லுவதில் நமக்கொரு தடை இருக்கிறது. முக்கிய மனிதர்களான இவ் விருவரில் ஒருவர் இன்னும் உயிரோடிருக்கின்றமையினால் நாம் சொல்லும் விஷயத்தைத தப்பாய் அர்த்தம் செய்து கொள்ளக்கூடும். இறந்துபோனவருக்கு மரியாதை செய்கையில், உயிரோடிருப்பவரை நிந்திப்பது இங்கே நமது கருத்தன்று. க்ளாட்ஸ்டன் என்பவரைப் பற்றிசொல்லும் எந்தவரலாற்றிலும் டிஸ்ரேலி என்பவர் கொஞ்சம் முக்கியஸ்தராய்த் தோன்றுவது நிச்சயம்; அப்படியே கோகலேயைப்பற்றி எழுதும் எந்தச்சிறிய சரித்திரத்திலும் ஸ்ரீமான். திலகரைப்பற்றி அதிகமாய்ச் சொல்லுதல் அவசியமாகும்.

TILAK LEAVES THE DECCAN EDUCATION SOCIETY.

திலகர் தக்காணத்துக் கல்விச்சங்கத்தை விட்டு நீங்குதல்.

தாம் பிற்காலத்தில் அதிகமாய் நெருங்கிப்பழகின ஸ்ரீமான். ஆகரகரவைப்பார்க்கிலும் ஸ்ரீமான். திலகரை வெகுவாய் மெச்சியே தாம தக்காணத்துக் கல்விச்சங்கத்திற் சேர்ந்ததாகவும, 1881, 1882-ம் ஆண்டளவில் சிறைச்சாலையிலிருந்து விடுதலையடைந்த பொழுது, அவ்விருவரையும் வரவேற்பதன் பொருட்டுக் கூடின வாலிப மாணாக்கர்களில் தாமும் ஒருவராயிருந்ததாகவும கோகலே சொல்வதுண்டு. அச்சங்கத்தில் ஸ்ரீமான. திலகரும கோகலேயும் சேர்ந்து உழைக்கிற காலத்தில், ஸ்ரீமான். திலகரோடு நெருங்கிப் பழகினதால் தங்களுடைய குணங்கள் முற்றிலும் வித்தியாசமானவை என்று கோகலே விரைவில் அறிந்துகொண்டார். எப்பொழுதும் ஸ்ரீமான். திலகருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில் திருப்தி அடைபவர்களை வசிகரிக்கும் ஒருவித சக்தியிருந்தபோதிலும் அவர் தமக்குச் சமமானவரோடு சேர்ந்து உழைக்க முடியாது என்பதை அவருடைய சிறந்த நண்பர்களும் ஒப்புக்கொள்வார்கள். ஆசார திருத்தம் செய்வதற்குரிய சிறந்த வழியைப்பற்றி உண்டான கபடற்ற அபிப்பிராய பேதத்தால் கலாசாலைத் தோழர்களான ஸ்ரீமான். திலகரும் ஸ்ரீமான். ஆகரகரவும் பிரிந்துபோயிருக்கக்கூடும். இதற்குள் கோகலே ஸ்ரீமான். ஆகரகரவுடைய உண்மையான முயற்சியையும், நேர்மையையும் அறிந்து சிலாகித்து, எந்த வழக்கிலும் அவருடைய பட்சத்திலேயே பெரும்பாலும் இருப்பார். ஒரு காரியத்தை நேர்மை தப்பித் தந்திரமாய்ச் சாதித்தல் வேண்டும் என்னும்

58940

இழிவான எண்ணங்களை ஸ்ரீமான். ஆகரகர பொறுக்கமாட்டார். அவர் ஒரு குறைவுகண்டபோது உடனே அதை நிவர்த்திசெய்யப் போராடவேண்டும் என்ற கருத்தை உடையவர். ஆகையினால் அவர் கேசரி பத்திரிகையை விட்டு நீங்கி, கோகலேயைத் துணையாகக்கொண்டு, முன்சொன்னபடி சுதாக் என்னும் பத்திரிகையை நடத்தத் தொடங்கினார். பொது வழக்கில் மரியாதை என்பது அக்காலத்தில் இல்லை; இந்நாட்களிலும் அதைக் கற்றுக்கொள்ளவில்லை என்று அஞ்சுகிறேன். ஸ்ரீமான். ஆகரகரவையும் அவர் நண்பர்களையும் மிதமிஞ்சின வார்த்தைகளால் கேசரி பத்திரிகை கண்டித்து எழுதியது. இம்மரியாதையை சுதாக் வட்டியுடன் திருப்பிச் செய்தது. அப்பத்திரிகையின் போக்கும் பாஷையும உக்கிரமாக இருந்தாலும் அவை ஸ்ரீமான். ஆகரகரவுக்கு இயற்கையான அழகும் பெருமையும் பெற்று விளங்கின. ஒரு விஷயத்தைக் குறித்து இருவர் மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டாலும் வேறு அனேக விஷயங்களில் அவ்விருவரும் ஒத்து உழைக்கக்கூடும் என்னும் சாமானிய உண்மையை ஸ்ரீமான். திலகர் தமது வாழ்நாள் முழுவதிலும் அறிந்தவரே அல்லர். நமது ஆசாரங்களைத் திருத்துவதற்குரிய சரியான வழி இன்னதென்பதைக் குறித்து உண்டான அபிப்பிராய பேதத்தாலும், ஒருக்கால், ஆசார திருத்தம், இராஜீயவேலை என்பவற்றில் எது முக்கியமானது என்பதைப்பற்றிய அபிப்பிராய பேதத்தாலும ஒருவர்க்கொருவர் கருத்துவேறுபாடு மட்டுமே அடைந்தார்கள். அச்சங்கத்தில் சேர்ந்துழைப்பது கொஞ்சகாலத்தில் முடியாமற் போய்விட்டது. 1890-ம் வருஷத்தில் ஸ்ரீமான். திலகர் தமது ஆயுட்கால அங்கத்தினர் வேலையை ராஜிநாமாச் செய்து விட்டார். அப்பொழுது நடந்த ஒரு சம்பவத்தால்

இவ்வழக்கில் உள்ள நியாய அநியாயங்களை ஜனங்கள் கொஞ்சம அறிந்து கொள்ளக்கூடும். அதாவது: ஸ்ரீமான். திலகர் போகும் பொழுது அவருடைய துணைவர்களில் ஸ்ரீமான். நாம்ஜோஷி, ஸ்ரீமான். பதங்கர் என்ற இருவர் மாத்திரமே அவரோடு போனார்கள். ஏனையோரான ஆகரகர, ஆபடே, கோகலே, கோல், கேல்கார், தரப், பாநு இவர்கள் எல்லோரும் தங்கிவிட்டார்கள். செல்பி, ஆக்ஸன் ஹாம், பாண்டாரகர, ரானடே முதலானவர்கள் அடங்கிய அச்சங்கத்தின் ஆலோசனைசபையார் முன்போலவே ஆலோசனை சொல்லிச் சங்கத்தின் வேலைக்கு உதவிசெய்து வந்தார்கள். இந்நாடகம் நடத்திக் காட்டினவர்களில் திலகர், பதங்கர், பாநு என்பவர்கள் ஒழிய மற்றவர்கள் எல்லோரும் இப்பொழுது இறந்து போனார்கள். உண்மையறியாத ஜனங்கள் இவ்விஷயத்தில் திலகர் யோக்கியராகவும், ஆகரகர கோகலே இருவரும அயோக்கியர்களாக நடந்து கொண்டதாகவும் எண்ணினதால் இப்பிரிவினை காரணமாகக் கொஞ்ச காலம் அச்சங்கத்தின் காரியங்கள் சரியாக நடக்க முடியாமற்போயின. அச்சங்கத்தை விட்டுப் பிரிந்து போனவர்களுடைய போக்கும், விசுவாசத்தால் அச்சங்கத்திலேயே இருந்து விட்டவர்களுடைய போக்கும் மிகவும் வேறுபட்டுக் கொண்டே போயின. ஸ்ரீமான். ஆகரகர இராஜியதந்திரியல்லர்; தாம் பின்பு உயிரோடிருந்த ஐந்து வருஷங்களிலும் ஆசாரதிருத்தத்தில் மாத்திரம் அவர் கவனம செலுத்தினார். ஸ்ரீமான். ஆபடே ஒரு பண்டிதர்; அவர் கல்வி சம்பந்தமான விஷயங்களை மாத்திரம அறிந்தவர். அவரும் கொஞ்ச காலத்தில் இறந்து போனார். இவ்வண்ணமாய், இயல்பாகவே, கோகலே, விசுவாசமுள்ளவர்களாயிருந்த ஆயுட்கால அங்கத்தினருக்குத் தலைவரானார். மனிதர்களுடைய உட்

கருத்துக்களை யார் அறியக்கூடும்? தாம பிரிந்து போவதினால் தாழ்ந்து போகும் என்று ஒருக்கால் நினைத்து ஸ்ரீமான். திலகர் விட்டுப் பிரிந்த சங்கங்கள் கோகலே காட்டிய வழியில் நடந்து மிகவும் விருத்தியடைந் திருப்பது கோகலேக்கும் ஸ்ரீமான். திலகருக்கும் இடையில் வளர்ந்து வந்த மனஸ்தாபத்துக்கு ஒருவேளை சரியான முகாந்தரமாகும். இவ்வெண்ணம் முற்றிலும் அவர்க்குத் தெரியாமல் உண்டாயிருக்கலாம். அவருடைய ஸ்தானததில் அவரைப்போன்ற வேறொருவர் வேலை செய்யலாமென்றும் அவர் நமக்கு அவசியமில்லாதவர் என்றும் ஒருவரும நினைக்க விரும்புவதில்லை

TILAK'S METHODS.

திலகரின் போக்கு.

முன்னே சொன்னவண்ணம் சங்கத்தில் கோகலேசேர்நது கொஞ்சகாலததில, ஸ்ரீமான். திலகர், தமக்கு பலமுள்ள எதிரியாய் வரக்கூடிய ஒருவர் இருப்பதாகக்கண்டு கொண்டார். இவர்கள் முதல் தடவை ஒருவர்க்கொருவர் பகிரங்கமாய் எதிர்த்து நின்றது 1888-ம்வருஷத்தில் என்றும், அப்பொழுது ஸ்ரீமான். திலகா சர்வஜனசபை (சாவஜனிக்சபா) க்குக் காரியதரிசியாக கோகலே நியமனம் பெறுவதை ஆட்சேபித்துப் பேசினார் என்றும், கோகலே என்னிடம சொல்லியிருக்கிறார். மனவெறுப்பு வளர்நது வநதது. ஸ்ரீமான். திலகர் சங்கததைவிட்டு நீங்கினபிறகு வெகு ஜன சம்மதமான வைதிகர்கட்சியைச் சார்ந்து, அதை மேன் மேலும் ஆதரிததுவநதார். கோகலேயோ ஸ்ரீமான். ரானடேயின் போதனையால் உற்சாகமடைந்து ஜனங்கள் செய்

யும் புகழ்ச்சியையும இகழ்ச்சியையும் மிகுதியாய்க் கவனிக்காமல் மெய்ம்மையான விருத்திக்குரிய வழியைத் தொடர்ந்து போனார். அவர் சொல்லும நியாயம் முக்கியமாய் நம்முடைய விவேகத்துக்கும் முதிர்ந்த பகுத்தறிவுக்கும் பொருந்தினது; ஸ்ரீமான். திலகர் சொல்லுவதோவெனின் முக்கியமாய் நம்முடைய மனவெழுச்சி (sentiment) க்கு உரியதாகும். 1895-ம வருஷத்தில் பூனாவில் நடந்த காங்கிரஸ் என்னும் மகாஜனசபையில் வரவேற்புச்சபைக்கு கோகலே காரியதரிசியாய் இருந்தபொழுது, காங்கிரஸ் மண்டபத்தை ஜனசார திருத்த சபையின் உபயோகத்துக்கு விடுவதைப் பற்றி ஸ்ரீமான். திலகர் ஆரம்பித்த நகைப்புக்கிடமான வாதம் பிரமாதமாய் விளைந்து விட்டது. ஸ்ரீமான். திலகர் க்ஷண வெற்றி அடைந்தார். அவர் திறமையுள்ள ஒரு வக்கீலாக இருந்ததலால், தாம அப்பொழுது நடந்துகொண்ட மாதிரியை இன்னும் அவசியமாயின் நியாயமாய்த் தோன்றுமபடி காட்ட வல்லவராயினும, தமது நடத்தையைப்பற்றி இப்பொழுது அவர் சிந்தையில் என்ன நினைக்கிறாரோ நான் அறியேன். இதற்கு முன்பாவது பின்பாவது இந்தியாவில் எந்த முக்கிய ஸ்தலத்திலும் ஒருவரும் இம்மாதிரி போராடுவது நடந்தியானென்று எண்ணவில்லை. சர்வஜனசபையைப் பிடித்தல்; தக்காணசபையை ஸ்தாபித்தல்; வெல்பி கமிஷன் என்றும் ஆராய்ச்சிச சபைக்கு முன் கோகலேயின் சாட்சியம்; (அச்சாட்சியத்தில் அவர் சர்வஜனசபையைத் தக்காணத்துசசபை போன்ற ஒரு சங்கம்" என்று அறியாமற் சொன்னார்; அவ்வார்த்தைகள் தம்மைச் சுட்டியதாக ஸ்ரீமான். திலகர் நினைக்க, முடிவில் அவை அவருக்கு வெறுப்பாக முடிந்தன.) பூனாக் கொலைகளும் கோகலே மன்னிப்புக்கேட்டதும்; ப்ளேக் என்றும் மகாமாரி நோய்

க்கு அம்மை குத்துதல்; கல்கத்தா காங்கிரஸ் என்னும் மகாஜன சபைக்கு ஸ்ரீமான். திலகர் அக்கிராசனம் வகிக்க முயன்றமை; சூரத்தில் நடந்த சம்பவமும், அதுமறுபடியும் நேரிடாமல் இருக்கும் பொருட்டுப் பிற்பாடு செய்த காங்கிரஸ் அமைப்பும்; நாகப்பூரில் நடத்துவதாய்ச் சொன்ன காங்கிரஸில் பிரிவினை; சுவராஜ்யம், சுவதேசி, புறநாட்டுச் சாமான் விலக்கு; சுதேசீய கல்வி என்பவைகளைப் பற்றிய நான்கு தீர்மானங்களைக் குறித்த ஆர்ப்பரிப்பு; வங்காளப் பிரிவினைக்குழப்பமும், ராஜ துரோக காரியங்களும்; இறுதியில் ஸ்ரீமான். திலகர் சிறைச்சாலையினின்று வந்தபின் நடந்த காங்கிரஸ்கட்சியாரை ஒன்று சேர்த்தலைப் பற்றிய வழக்கும், அதனால் கோகலேக்கு வந்த மரணமும்: இவை போன்ற விஷயங்கள், ஸ்ரீமான் திலக்கருக்கும் கோகலேயுக்கும் நடந்த போட்டியைப் பற்றி எப்பொழுதாவது ஒரு புத்தகம் எழுதுவதாயின், வெகு விநோதமான அப்புத்தகத்தில்வரும சில அதிகாரஙகளுக்குத் தலைப்புகளாயிருக்கும். இநதச் சந்தர்ப்பத்தில் இவ்விஷயங்களை வழக்குக்கு இடந்தரும் நோக்கத்தில் ஆராய்ச்சி செய்வது நமது கருத்தன்று. இவ்விஷயங்களை ஒரு குறித்த நோக்கத்துடன் விளக்கமாய் எழுதுவதைக் காட்டிலும், அவற்றின் பெயர்களை மாத்திரம் சொல்லுவதாலும், இக்காரியங்கள் ஒவ்வொன்றிலும் அவ்விருவருடைய போக்கை நினைப்பூட்டுவதாலும், அவர்கள் இராஜாங்க காரியங்களில் கொண்டிருந்த விருப்பங்களிலும் அவர்கள் வேலைசெய்த முறையிலும் உள்ள வித்தியாசங்களை நன்றாய் அறிந்துகொள்ளலாம.

GOKHALE'S METHOD.

கோகலேயின் போக்கு.

மகாராஷ்டிர தேசத்தில் கோகலே எப்பொழுதாயினும் எல்லா ஜனங்களாலும் கொண்டாடப் படாததற்கு ஸ்ரீமான் திலகர் தமது கொள்கைகளைப் பரவச்செய்வதற்கு அநுசரித்த முறைகளே முக்கியகாரணம். கோகலேயும் அவரைப் பின்பற்றியவர்களும் ஸ்ரீமான் திலகருடைய முறைகளை எப்பொழுதாயினும் பின்பற்றக் கருதினவர்களல்லர். அவரைப் பின்பற்றிய சிலர் எக்கஷ்ட காலத்திலும் அவரைவிட்டு நீங்காமல் பற்றுடையவர்களாய் இருந்தார்கள். அவர்களுடைய விசுவாசத்தால் அவருக்கு மிகுந்த ஆதரவு உண்டாயிற்று. கூசுகின்ற மனமுடையவராதலால் கோகலே ஜனங்களால் பூசிக்கப்படுவதற்கு உரியவரல்லர். எவ்வித சூதும் அவருக்கு வெறுப்பைக் கொடுத்தது. ஆகையினாற்றான் அவர் கர்ஸன் பிரபுவின ஆளுகையிலிருந்த முறைகளைப்பற்றியும், தென்னாபிரிகாவில் இந்தியர்கள் குரூரமாய் நடத்தப்பட்டதைப் பற்றியும், இந்தியர்கள் தமது தேசத்தில் தாழ்ந்த வகுப்பாரை நடத்தும் விதத்தைப்பற்றியும் ஒரே மாதிரியாகக் கடிந்துபேசினார். பிரிடிஷ் இராச்சியத்திலும் உலகத்திலும் இந்தியர்கள் தமது சரியான ஸ்தானத்தை வகிப்பதற்குமுன் செய்யவேண்டிய வேலையில் பத்தில் ஒன்பது பாகமும் இந்தியாவிலேயே, இந்தியர்களாலேயே செய்யப்படவேண்டும் என்றும், இவ்வேலையிற் பெரும்பாகம் முடிவு பெறும்பொழுது, வெவ்வேறு அங்கங்களையுடைய (bureaucratic) அன்னிய அரசாட்சியில் இயல்பாகவே உள்ள சில கஷ்டங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு வெகுகாலம் ஆகாதென்றும் அவர்

நன்குணர்ந்திருந்தார். தமது சொந்தக்குறைகளை இவ்வாறு நன்றாய் அறிந்திருப்பதற்கும், வெகு பெரிய ஜனக்கூட்டத்தோடு சேர்ந்து ஆர்ப்பரிக்கச்சித்தமாய் இருப்பதற்கும் பொருத்தமில்லை. ஓர் இந்தியன் அடையக்கூடிய மேலானஸ்தானமானது ஓர் ஐரோப்பியன் அடையும் ஸ்தானத்துக்குச் சமமாயிருந்தாலும்,இந்தியர்கள் சராசரியாய்அடையும் ஸ்தானம் ஐரோப்பியர்கள் அடையும் ஸ்தானத்துக்குக் கீழ்ப்பட்டிருப்பது விசனகரமானதென்றும், இச்சராசரி ஸ்தானத்தை முயன்றுஉயர்த்துவது நாம் செய்யவேண்டிய பெரியவேலைஎன்றும் அவர் அடிக்கடிசொல்வார்.இந்நிலைமை உயர்த்தப்படும்பொழுது இப்பொழுது சிலராகக் காண்கிற பெரிய மனிதர்களுடைய தொகை மிகவும் அதிகரிக்கும். ஆகையினாற்றான் முக்கியமாய் கோகலேயைப் புகழ்ந்து கொண்டாடுபவர்கள் இந்நாட்டில் உள்ள உத்தமர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அவருடைய வேலையைப் பகுத்து நியாயம் என்று கண்டுணர்ந்தவர்கள். நமது இராஜதானியில் அவருக்கு அதிகமதிப்பு இல்லை. இவ் விராஜதானிக்கு வெளியில் அவருடைய மதிப்பு வெகுதூரம் பரவியிருந்தது. இதற்குக்காரணம்: பக்கத்தில் நெருங்கிப் பார்க்கும் பொழுது, அவரிருந்த இடத்திலேயே நடந்த இடையூறான சம்பவங்களால் தூரப்பார்வை மழுக்கம் அடைவதாகும். நாம் எல்லோரும அவரை நம்முடையவர் என்று பெருமை பாராட்டிக் கொள்கிறோமாயினும், அவர் முக்கியமாய்ப் பூனாவுக்கேனும் பம்பாய்க்கேனும் உரியவர் என்பதினும் விசேஷமாய் இந்தியாவுக்கே உரியவா என்பது பொருந்தும். இப்பொழுது ஜனங்களுக்குப் பெரியமனிதர்களாய்த் தோன்றுகிற சிறிய ஜனத்தலைவர்களுடைய பெயர்கள் மறந்துபோய், கோகலேயைப் போன்ற பெரிய ஜனத்தலை

Justice M G Ranade.

கனம் ஜஸ்டிஸ் M. G ரானடே.

வர்கள் அவர்களுடைய ஸ்தானத்துக்கு வரும்பொழுது, நாளாக நாளாக, கோகலே செய்தவேலையின் மதிப்பு நன்ருய் விளங்கும்.

SARVAJANIK SABHA.

சர்வ ஜன சபை.

தக்காணத்துக் கல்விச் சங்கத்திற் சேர்ந்து கொஞ்ச காலத்தில் சர்வஜன சபைக்குக் கோகலே உதவிக் காரியதரிசியானுர். அவருடன் வேலைபார்த்தவர் காலஞ்சென்ற ஸ்ரீமான் சிவராம் ஹரிஸாடே என்பவர். அவரைக் கோகலே தகப்பனைப்போற் பாவித்து அவரிடம் நிறைந்த அன்பு பாராட்டினுர். கோகலே காரியதரிசியாக வரத்தகுந்தவர் என்று காலஞ்சென்ற ஸ்ரீமான் ரானடேயிடம் அவர் பெயரைச் சுட்டிச் சொல்லப்பட்டபோது, தாம் அப்போது படித்துக்கொண்டிருந்த ஒரு உத்தியோக அறிக்கையைப் பரீட்சார்த்தமாய்ச் சுருக்கி ஒரு வியாசம் எழுதும்படி அவர் கோகலேக்குச் சொன்னுர். அவர் அந்த வியாசத்தை எழுதி மறுமுறை ஸ்ரீமான் ரானடேயிடம கொண்டுபோய்க் காட்ட அவர், "இது போதும்" என்று கோகலேயிடம் சொன்னபொழுது கோகலே எவ்வளவு பெருமை பாராட்டிக்கொண்டார் என்பதைக் கோகலே அடிக்கடி சொல்வதுண்டு. 1896-ம் வருஷம வரையிலும் அவர் அச்சபைக்குக் காரியதரிசியாய் இருந்தார். அந்நாட்களில் அச்சபை அந்நாட்டில், முதன்மைபெற்ற இராஜீய சங்கமாய் இருந்தது. அச்சங்கம் செழித்தோங்கிய காலத்தில் அது பெற்றிருந்த செல்வாக்கை அடைந்திருக்கும் இராஜீய சங்கம் இப்பொழுதுகூட இல்லை. பொது ஜன விவகாரம் ஏவதாது

உண்டானால் அச்சபையார் அதைத்திர ஆலோசித்துத், துரைத்தனத்தாருக்கு முக்கியமான விண்ணப்பங்கள் அனுப்பி, ஜனங்களுடைய நோக்கத்தைத் தெரிவிப்பார்கள். சபைக்குப் பின்னால் மறைந்திருந்து வேலை செய்தவர் ஸ்ரீமான். ரானடேயே ஆவார். அதுசெய்த வேலையிற் பெரும்பாகம் அவருடைய தூண்டுதலால் நடந்தது. ஆயினும், நிஜமாய்ப் பாடுபட்டவர் கோகலேயே. இக்காலம அவருடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. இது அவர் பயிற்சிஅடைந்த காலம். இந்நாட்களில் பொது விவகாரங்களை அவற்றின் பல அமிசங்களிலும உணர்ந்து கொள்ளும வழக்கத்தை அவர் கைப்பற்றினார். பல விஷயங்களைத் தெளிவாய் உணர்ந்தவரும் லோகோபகார சிந்தையுள்ளவருமான ஸ்ரீமான். ரானடேயைப்போன்ற ஒருவருக்குச் சிஷ்யராயிருக்கும் மதிக்கப்படாத அனுகூலமும் அவருக்குக் கிடைத்தது. பொதுநல வாழ்க்கையில் வெறும் அலங்காரப் பிரசங்கத்தால் அதிக பிரயோசனம் உண்டாவதில்லையென்றும், பிரயோசனம் வேண்டுமாயின் அப்பிரசங்கத்துக்கு உண்மையும் இலக்கங்களும் (facts and figures) ஆதாரமாய் இருக்கவேண்டும் என்றும் அவர் அறிந்து கொண்டார். கோகலே காரியதரிசியாய் இருந்தபொழுது அச்சபையின் பத்திரிகைகளைப் பதிப்பித்து வந்தார். ஒழுங்காகச் சேர்த்துவைக்கப்பட்ட அப்பத்திரிகைகளின் தொகுதிகளைப் பார்த்தால் அந்நாட்களில் அவர் செய்த வேலை இன்னதென்று தெரியும். அப்பத்திரிகைக் கட்டுகள் இப்பொழுது கிடைப்பது அரிது. அச்சபையின் விண்ணப்பங்களை யெல்லாம் அவரே எழுதினார். சுருக்கென்று படுகிற அமைதியான வாசகம் எழுதுவதில் அவர் நிபுணர். அவருடைய வாசகம் படிப்பவர் மனத்தில் நன்றாய்ப் பதிந்துவிடும.

அவருடைய விண்ணப்பங்களை அரசாங்கத்தார் நன்றாய் ஆலோசித்து நீண்ட பதில் அனுப்புவார்கள். சுமார் 1896-ம் வருஷத்தில் ஸ்ரீமான். திலகர் அச்சபையைக் கைப்பற்றி, அதற்குத் தாமே தலைவராக எண்ணினார். அச்சபையில் அங்கத்தினர் ஆவதற்குரிய விதிகள் கண்டிப்பானவை அல்ல. ஸ்ரீமான். திலகர் இதுவே சமயமென்று அனேக புது அங்கத்தினர்களைக் கொண்டுவந்து சேர்த்து அவர்களிற் பெரும்பான்மையோர் தம்மைத் தெரிந்து எடுக்கும்படிச் செய்துவிட்டார். பெரும்பான்மையோர் (மெஜாரிடி) நிய மித்த ஸ்ரீமான். திலகருடன் சேர்ந்து உழைப்பது முடி யாதகாரியம். ஆகையினால் கோகலே தமது காரியதரிசி வே லையை ராஜிநாமாச் செய்துவிட்டார். அச்சபையின் எஞ்சிய சரித்திரத்தை விரைவிற் சொல்லிவிடலாம். பஞ்சம் உண் டான 1887-ம் வருஷத்தில் அச்சபையோர் சம்பளங்கொடு த்து ஒரு பிரசங்கியை நியமித்தார்கள். அப்பிரசங்கி நேர் ந்தபடி சில வார்த்தைகள் சொன்னார். அவற்றை விளங்கச் சொல்லவேண்டும் என்றும் அல்லது பிசகென்று சொல்ல ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும் அரசாங்கத்தார் அச் சபையாரைக் கேட்டார்கள். அவர்கள் ஒன்றுஞ் செய்யாதிரு ந்துவிட, அரசாங்கத்தார் இனிமேல் அச்சபை சொல்லும் விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா என்று சொல்லி ஒரு உத்தரவு செய்தார்கள். அதுமுதல் அச்சங்கம் இறக்கும் நிலைமையிலிருக்கிறது. அச்சபையை ஆதியில் ஸ்தாபித்த வர்கள் சேகரித்த சிறிதுபணம் அதனிடம் அகப்பட்டபடி யால் அது இன்னும் பெயரளவிலாயினும் நீடித்திருக்கிறது. ஸ்ரீமான் ராணடேயின் ஆலோசனைப்படி அத்தகைய நோக் கங்களுடனேயே, கோகலேயும் அவர்களுடைய சிநேகிதர்க ளும் தக்காணத்துச்சபை என்ற வேறொருசபையை ஸ்தா

4

பித்தார்கள். ஆயினும் இச்சபை இதற்குமுந்திய சபையைப்போல் அவ்வளவு செல்வாக்கை இன்னும் அடையவில்லை.

WELBY COMMISSION.
வெல்பி ஆராய்ச்சிச் சபை.

கோகலே முதலிற்செய்த முக்கியமான வேலையாவது வெல்பி கமிஷனுக்குமுன் அவர் கொடுத்த சாட்சியமாகும். இதனால் ஜனங்கள் அவரை நன்றாயத் தெரிந்து கொள்ளலானார்கள். கிரமமாய் பிரிடன் தேசத்து அரசாங்கத்தார் தாங்கவேண்டிய பாரத்தை இந்தியா சுமந்து கஷ்டப்படுகிறதா என்பதை யோசிக்கவும்; இந்தியாவில் நடைபெறும் அரசிறை முறைமையையும், மாகாண உடன்படிக்கை (ப்ரொவின்ஷல் காண்ட்ராக்ட்) முதலானவற்றையும் யோசிக்கவும்; இங்கிலந்தில், நிதானக் கக்ஷியாரான (கன்ஸர்வடிவ்) அரசாங்கத்தாரால் 1896-ம் வருஷத்தில் இச்சபை நியமிக்கப்பட்டது. கோகலே தக்காணசபையின் பிரதிநிதியாக ஏப்ரல் மாதத்தில் இங்கிலந்திற்குப் போய் சாட்சியம் கொடுத்தார். அது அவ்வழக்கைப்பற்றி இந்தியர் பக்ஷத்தில் கொடுத்த வெகு முக்கியமான சாட்சியமாய்க் கருதப்பட்டது. உண்மைகளையும் இலக்கங்களையும் நன்றாய் உணர்ந்து வல்லவராயிருந்ததற்காக அவர் வெகுவாய் மதிக்கப்பட்டார். கேட்கப்பட்ட குறுக்குக் கேள்விகளுக்கு அவர் கொஞ்சமும் அசையாமல் சாமர்த்தியமாகவே விடைசொன்னார். இவ்விஷயத்தில் அவரைக் காட்டிலும் மேலான அந்தஸ்துள்ள வேறு அனேக சாட்சிகள்

ஏமாந்து போனார்கள். இம் முக்கியமான விசாரணைக்காக அவர் குருவான ஸ்ரீமான் ரானடேயும், காலஞ்சென்ற ஸ்ரீமான் கணேச வெங்கடேச ஜோஷி என்பவரும் அவருக்கு அனேக முக்கியவிஷயங்களைச் சொல்லிக் கொடுத்திருப்பார்கள் என்று சொல்வது அனாவசியம் ஜோஷி என்பவர் அக்காலத்தில் சோலாப்பூர் ஹைஸ்கூலுக்குத் தலைமை உபாத்தியாயராய் இருந்தவர்; இந்திய அரசிறை முறையைச் சவிஸ்தாரமாய் அறிந்தவர் என்று கீர்த்தி பெற்றவர். "ஜே" என்ற போலிநாமம் வைத்துக்கொண்டு "டைம்ஸ் ஆவ் இண்டிய" (Times of India) என்னும் ஆங்கில பத்திரிகையில் நிலவருடான முறையைப்பற்றி அவர் எழுதிய கடிதங்கள் வெகுவியப்பை விளைத்தன. இம்முழுச் சாட்சியமும் கோகலேக்கு ஒரு பெரிய வெற்றியாயிற்று. ஆயினும இதனால் உண்டான பிரயோசனம் ஒன்றுமில்லை யென்றே, சொல்லலாம். ஏனெனில்; இக்கமிஷனுடைய அறிக்கை அது நடந்த இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, அதில் ஜனங்கள் கொண்ட பிரியம் எல்லாம் நீங்கிப்போன காலத்தில் பிரசுரிக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தாருக்கும் பிரிடிஷ் அரசாங்கத்தாருக்கும இடையில் செலவில் கொஞ்சம் திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆயினும கோகலே இக்கமிஷனில் செய்த வேலைக்காகவன்றி இக்காலத்தில் ஒருவர் இச்சபையைப்பற்றிக் கேள்விப்படுவது அரிது.

THE POONA MURDERS AND GOKHALE'S APOLOGY.

பூனக்கொலைகளும், கோகலே மன்னிப்புக் கேட்டதும்.

கோகலேக்கு இவ்வெற்றிகிடைத்த சமயத்திலேயே அவர் இந்தியாவிற்குத் திரும்பிவரும் பொழுது தான்செய்த வேலையை ஜனங்கள் தகுந்தபடி அங்கீகரிப்பார்கள் என்று எதிர்பார்க்கக்கூடிய சமயத்தில் அவருடைய வாழ்வில் மிகவும் பெரிய ஒருதடை உண்டாயிற்று. இப்படிப்பட்ட தடையினுல் பொது நலத்துக்குழைக்கும் அநேகருடைய பொதுவாழ்க்கையே முடிவடைந்திருக்கும், கோகலே இங்கிலந்தில் இருந்த பொழுது பூனுவில் முதல் முதலாக மகாமாரி (ப்ளேக்) உண்டாயிற்று. அரசாங்கத்தாரும் ஜனங்களும் ஆகிய இவ்விருதிறத்தாருக்கும் இவ்வியாதி முற்றிலும் புதிது. அரசாங்கத்தார் செய்த சில திட்டங்கள் ஜனங்களுக்கு அதிக வெறுப்பைக் கொடுத்தன. ஜூன் மாதத்தில் இராஜமாளிகை (கவர்ன்மெண்ட் ஹௌஸ்) யில் நடந்த ஜன்மதின (Brith day) விருந்துக்குப் போய்த் திரும்பி வருகையில் இரண்டு ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இச்சமாசாரம் இங்கிலந்தில் அளவுகடந்த மனக்குழப்பத்தை உண்டாக்கிற்று. குரூரமான எத்தனங்கள் செய்யப்படவேண்டும் என்று ஆங்கில பத்திரிகைகள் எழுதின. பூனு நகரத்தில் ஜனங்களுடைய மனநிலைமையைப் பற்றியும், அந்நோயைத் தடுக்கச் செய்த எத்தனங்களைக் குறித்துக் கடைவீதியில் உலாவின பல வதந்திகளைப்பற்றியும், முக்கியமாய் அந்நோயைத் தடுப்பதற்கான பிரயத்தினங்களில் வேலைசெய்த ஐரோப்பிய வீரர்களின் நடத்தையைப் பற்றியும, ஒவ்வொரு வாரமும

கோகலேக்குப் பூனவில் அவருடைய நண்பர்களிடமிருந்து கடிதங்கள் போய்க்கொண்டிருந்தன. இந்திய பொது வாழ்க்கையில் இன்னும் கொஞ்சம் அனுபவம அவர் பெற்றிருந்தால் இச்சமாசாரங்களைச் சாட்சியமாகக் கொள்ளக்கூடாதென்று அறிந்திருப்பார். ஆயினும் அச்சமயத்தில் உண்டான மனக்குழப்பத்தில் தாம் ஏதாவது செய்யவேண்டும் என்று கோகலே நினைத்தார் தமக்குவந்த கடிதங்களை அவர் இங்கிலந்தில் தமது சிநேகிதர்களிடத்தில் காட்டினார். அவர்கள் இவ்விஷயத்தைக் குறித்து இங்கிலந்து ஜனங்களிடம் பிரசங்கம் செய்யும்படி ஆலோசனை சொன்னார்கள். இங்கிலந்தில் உண்டான குழப்பம தணிந்தது; ஆயினும் அவர் இந்தியாவிற்குத் திரும்பிவந்தபின் தாம் சொன்னவற்றை ருசுப்படுத்தும்படிக் கேட்கப்பட்டார். இவர் நமபியிருந்த சமாசாரங்களை அனுப்பின அவருடைய நண்பர்கள் ருசுப்படுத்துவதற்கு முன்வரவில்லை. அவருக்கு இன்னது செய்வது என்பது தோன்றவில்லை. ஐரோப்பிய யுத்த வீரர்களுக்குக் கெடுதியுண்டாகும்படி கோகலே சொன்ன இவ்வார்த்தைகளுக்காக அவரிடமிருந்து சட்டப்படி பரிகாரம் தேடிக்கொள்வதற்கு அவர்களுக்கு வழியில்லை என்று சட்டமுணர்ந்த நண்பர்கள் அவருக்குச் சொன்னார்கள். அவர்கள் பட்ட நஷ்டத்துக்குத் தகுதியான ஈடுசெய்வதற்கு அவருக்கு ஒரே ஒரு வழியுண்டு. அதாவது: அவர்களிடம சரியான மன்னிப்புக் கேட்டுக்கொள்வதே. இதை அவர் தாமதிக்காமலும் கூசாமலும் செய்தார். மன்னிப்புக் கேட்டுக்கொண்டதற்காகவும, மன்னிப்பினுடைய வாசகத்திற்காகவும் நிதமிஞ்சி அவரைக் குறைகூறினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் அவ்வாறு செய்தது முற்றிலும் நியாயம என்பதையும்; அவர் செய்த காரியம் அவருடைய வாழ்விலேயே மகாமேன்

மையான வேலை யென்பதையும் புத்திசாலிகள் ஒப்புக்கொள்வார்கள். அநேக வருஷங்களுக்குப் பிறகு இக்காலத்து இராஜீய விவகாரங்கள் மறக்கப்படும் போதாவது, முடிவடையும் போதாவது, தமது தேசத்தார் அறியும்படி தம்முடைய அந்தஸ்தையும் கீர்த்தியையும் பரித்தியாகம் செய்ததும்; பொதுநலத்துக் குழைப்பதில் தாமாகவே தமது கீர்த்தியை மங்கச்செய்து கொண்டதும்; பிற்காலத்தாருடைய மரியாதையை அவர் பெறுவதற்கு உரிய மேலான உரிமைகள் என்று கருதப்படும்

PLAGUE COMMISSION.

மகாமாரி ஆராய்ச்சி சபை.

இவ்வாறு. கோகலேயின் பொதுநல வாழ்க்கை முடிந்து போனதாகத் தோன்றிய பொழுது சனங்களுக்கு நன்மைசெய்வதில் அவர் மறுபடியும் இருமடங்கு முயன்றார். 1898-ம் வருஷத்தில் முதலில் அவர்செய்த வேலைகளில் ஒன்றுவது: மகாமாரி பரவியிருந்த காலத்தில் அவ்வியாதி வந்தவர்களுக்கு உதவிசெய்யும் பொருட்டு, சம்பளமில்லாமல் வேலைசெய்யும் சிலரை ஏற்படுத்தினதாகும். அவர்களோடு காலைமுதல் மாலைவரையிலும் அவர் வேலை செய்து அக்கஷ்டத்தில் பெரும்பாகத்தைக் குறைப்பதற்கு உதவிசெய்தார். அவ்வருஷத்தில் மகாமாரியை நிவர்த்தி செய்யும் தொழிலை நிருவகித்தவரும், பிற்காலத்தில் ஸர்என் ஓமூர்க்ரீக் என்ற பெயருடன் இந்திய சேனைக்குச் சேனாதிபதியாய் இருந்தவருமான கப்டன் க்ரீக் என்பவர் கோகலே செய்த ஊழியங்களை மனப்பூர்வமாய் அங்கீகாரம் பண்ணி

ஞர். அம்மைகுத்தி மகாமாரி சிகிச்சை செய்யும் ஹாப்கின் என்பவருடைய சிகிச்சைமுறை அப்பொழுது தான் புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்டது. அச்சிகிச்சை கூடாதென்று சனங்கள் அதிகமாக முறையிட்டார்கள். அம்மை குத்துவதால் அதைச்சார்ந்து பாரிசவாதம் போன்ற அனேக வியாதிகள் உண்டாவதாய்ச் சொல்லப்பட்டது. இவ்வாறு முறையிடுவதைத் துரைத்தனத்தார் கவனிக்காமல் இருக்கக் கூடவில்லை. அம்மருந்தின் குணங்களைப் பொதுவாய் ஆராய்ச்சி செய்யும்படி அரசாங்கத்தார் ஒரு மகாமாரி ஆராய்ச்சி சபை (ப்ளேக் கமிஷன்) யை நியமித்தார்கள். அச்சபையின் அங்கத்தினரில் ஒருவராகக் கோகலே நியமிக்கப்பட்டார். அச்சபையார் இந்த இராஜதானியைச் சேர்ந்த பல ஜில்லாக்களிலும்,—முக்கியமாய் தார்வாரிலும், பெல்காமிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். பெரும்பாலார் அம்மருந்திற்கு முற்றிலும் அநுகூலமாகவே முடிவு செய்தார்கள். ஆயினும் அம்மை குத்துவதில் இன்னும் அதிக ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்றும்; கைதேர்ந்த நிபுணர்களாலேயே அவ்வேலை செய்யப்படவேண்டும் என்றும்; கோகலே ஒரு குறிப்பு எழுதிச் சேர்த்தார். அச்சபையார் செய்த முடிவுகளை, பேசிற் போபோன ஜனத்தலைவர்கள் மனப்பூர்வமாய் அங்கீகரித்து, அம்மை குத்துவதால் உண்டாகும் நன்மைகளை அடையும்படி ஜனங்களைத் தூண்டுவதற்கு முயன்றிருந்தால், தேசத்திற்கு நீடித்த நன்மையுண்டாயிருக்கும். ஆயினும் அவர்கள் வேறுவகையாக நினைத்துப் போலிச் சாஸ்திரோக்தமான கண்டனங்கள் எழுதலானார்கள். அதன் பயனாக மகாமாரியைத் தடுப்பதற்கு முன்ஜாக்கிரதையாக அம்மை குத்திக் கொள்வதற்கு இன்னும் சனங்கள் வெறுப்புக் கொண்டிருக்கிறார்கள். பெருந்

தீமை விளைப்பது எவ்வளவு மலிதென்பதும், மேலான பயனைத்தரும் பொதுநன்மைகளை விட்டுவிட்டு, ஒருவரைப் பார்த்து ஒருவர் கொள்ளும் துராசையைக் கொஞ்சநேரம் திருப்திசெய்வது எவ்வளவு கொடியதென்பதும மாத்திரம இதனால் விளங்கும்.

BOMBAY LEGISLATIVE COUNCIL: MUNICIPAL WORK.
பம்பாய்ச் சட்டநிரூபணசபை : நகரவேலை.

பம்பாய் சட்டநிரூபண சபையில் மத்தியபாகத்து மெம்பர் ஆவதற்குக் கோகலே ஓர் அபேட்சகராய்நின்று, 1899-ம் வருஷ ஆரம்பத்தில் தெரிந்தெடுக்கப் பட்டார். அதுமுதல் மரணபரியந்தம் பம்பாய் சபையிலாயினும் இராஜப்பிரதிநிதியின் சட்ட நிரூபண சபை (இமபீரியல் லெஜிஸ்லேடிவ் கௌன்சில்) யிலாயினும் அவர் மெம்பராய் இருநது வந்தார். பம்பாய் சபையில் அவர் இருந்தது இரண்டு வருஷமே. அக்காலத்தில் அவர் அதிக பெயர்வாங்கினபடியால் 1901-ம் வருஷத்தில் பமபாய் இராஜதானியின் பிரதிநிதியாக இராஜப் பிரதிநிதியின் சட்ட நிரூபண சபைக்கு அவரை எல்லோரும் ஏகோபித்து அனுப்பினார்கள். அதற்குப் பின் இவருக்குப் பதிலாக வேறொருவரும் நியமிக்கப்படவில்லை. அவர் பம்பாய் சபையில் இருந்த இரண்டு வருஷங்களில் ஆலோசனைக்கு வந்த முக்கியமான சட்டங்கள் இரண்டேயாகும். ஒன்று ஜில்லா நகர சட்டத்தைத் (டிஸ்ட்ரிக்ட் முனிசிபல் ஆக்ட்) திருத்துவதற்கான ஒருபில் (மசோதா), மற்றொன்று நிலவருமான சட்டத்தை (Land Revenue Code) த்திருத்துவதற்கான ஒருபில். கோகலே பூனை நகரசபை (முனிசிபாலிடி) யில் அநேக வருஷங்கள் வேலை

செய்தவர். அவ்வேலையில் அவருக்கு அனுபவம இருந்த மையால் முதல்பில் (மசோதா) லக்குறித்த விவாதத்தில் அவர் அதிகமாகத் தலையிட்டார். பிற்காலத்தில் 1905-ம் வருஷத்தில் காலஞ்சென்ற சர்தார் தோராப்ஜீ படேம்ஜீ என்பவருடைய ஸ்தானத்தில் எல்லோராலும் பூனா நகர நிருவாகத்தலைவ(ப்ரஸிடண்ட்)ராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் வேலைபார்த்து வந்த இரண்டு மூன்று வருஷங்களும் ஊக்கமான நிருவாகத்துக்குப் பேர்போனவை. சபைகூடும் வேலை ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கு இணங்கவும், எவ்விதக் குறைவும் இல்லாமலும் வெகு சீக்கிரமாய் நடத்தப்பட்டது. இதனால் அதுவரையிலும் சிற்சில சமயங்களில் சாவகாசமாக நேர்ந்தபடி பேசுவதற்கு வழக்கப்பட்ட சில மெம்பர்களுடைய எண்ணங்கள் பலிக்கவில்லை நகர நிருவாகஞ் செய்பவர்களை அச்சபைகளில் கேள்வி கேட்கும்படி மெம்பர்களுக்கு அனுமதி கொடுக்கும் முறையையும, சபையின் நடவடிக்கைகளை அச்சிற்பதிப்பித்து மெம்பர்கள் எல்லோருக்கும் கொடுப்பதையும் அவர் புதிதாய் வழக்கத்துக்குக் கொண்டுவந்தார். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு வேறுவழிகளில் அவருக்கு வேலை அதிகரித்து விட்டதால் அவர் தலைவர்வேலையை விட்டுவிட்டார். பொது நலத்துக் குழைக்கும ஒவ்வொருவரும் பெரிய இராச்சிய ஆளுகையில் தலையிடுவதற்குத் தமமைச் சித்தப்படுத்திக் கொள்ளும்பொருட்டு ஸ்தல சுய ஆட்சி (Local self-government) யின் காரியங்களை நேரே உணர்ந்திருக்கவேண்டுவது கடமையாகும் என்பதைத் தாமே முன்மாதிரியாக நடந்து காட்டினார்.

LAND ALIENATION BILL

நிலப்பராதீன பில்.

பம்பாய் சட்டசபையில் கோகலே மெம்பராய் இருந்த பொழுது ஆலோசனைக்கு வந்த மற்றொரு பில் (மசோதா) வின் நோக்கமாவது நிலவருமான சட்டத்தைத் திருத்துவதாம். ஒரு குடியானவன் தனது பூமிகளை ஒரு சாவகாரியினிடத்தில் அடமானம் வைக்கச் சுதந்தரம் பெற்றிருந்ததனால் முன்யோசனையில்லாத அவனுக்குச் சாவகாரியினால் அபாயம் விளையுமென்றும், பிற்பாடு அப்பூமி குடியானவன் கையிலிருந்து நழுவி, அவன் வருஷக் குத்தகைக்காரனாகும் தாழ்ந்த நிலைமைக்கு வநது விடுவான் என்றும் அரசாங்கத்தார் எண்ணினார்கள். நிலத்தை அடமானம் வைப்பதற்கு நிலக்காரனுடைய சுதந்தரத்தை மட்டுப்படுத்தவும், வருஷத்தில் வரும் வேளாண்மையை மாத்திரம் ஈடுகாட்டி நிலக்காரனைக் கடன் வாங்கும்படி செய்யவும் அரசாங்கத்தார் விரும்பினார்கள். கிஸ்தி கொடாததற்காக அரசாங்கத்தார் பறிமுதல்செய்து விற்றுவிட்ட நிலங்களைக்கொடுத்து, நிலத்தைப் பராதீனப்படுத்தாமல் நிலக்காரனே அனுபவிக்கும் இப்புதிய முறையை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்பது துரைத்தனத்தாருடைய முக்கியவிருப்பம். இதற்குமாறாக, அப்படிப்பட்ட நிலச் சுவாதீனமானது அரசாங்கத்தார் கொள்ளை செய்வதற்குச் சமானமாகும் என்றும், விவசாயிகள் கடன்படா திருப்பதற்கு வழிதேடுவது இப்படியன்று என்றும், அதற்காகத் தேடும்வழி தெளிவாகவும் நேராகவும் இருக்கவேண்டும் என்றும் உத்தியோகஸ்தர்களல்லாத மெம்பர்கள் வாதாடினார்கள். இம்மசோதாவைக் குறித்துக் கொடிய தருக்கம நடந்தது. பல மனுஷர்

களையும், சங்கங்களையும் ஆலோசனை கேட்டுத் தெரிகிற வரையில், அந்த பில் தள்ளிவைக்கப்பட வேண்டும் என்று அது இரண்டாமுறை வாசிக்கப்பட்டபொழுது ஸ்ரீமான் (இப்பொழுது ஸர்) பேரோஜிஷா மேடா பிரேரேபித்தார். அம்மசோதாவைத் திருத்தவேண்டும் என்று வெகு வாசாலமாக கோகலே ஒரு பிரசங்கம் செய்தார். அவருடைய வார்த்தைகளைப் பின்பு ஒருவரும் தட்டிச் சொல்லாமல் இருந்திருந்தால் அவர் பிரசங்கத்தின் கருத்து நிறைவேறியிருக்கும். ஆனால் அவ்வாதம் பின்பு வெகுநேரம் நடந்தது. அரசாங்கத்தார் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள்; ஆகையினால் அது தள்ளப்பட்டது. பிறகு தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் எல்லோரும் தங்களை இவ்வாறு அலட்சியம் செய்ததற்காக சபாமண்டபத்தை விட்டு நாடகரீதியாய் வெளியேறி, அம்மசோதாவைக் குறித்துப் பின்பு தாங்கள் ஒன்றும் கவனிப்பதில்லையென்று சொல்லிவிட்டார்கள். அந்தபில் பின்பு சட்டமாய்விட்டது. ஆயினும் அனுஷ்டானத்தில் அதை வெகுவாய் வழங்குவதில்லை. இக்கட்டுப் பாட்டுக்குட்பட்டு நிலச்சுவாதீனம் செய்துகொள்வதற்கு சனங்கள் விரும்புதில்லையென்று தோன்றுகிறது. மேலும் அநத மசோதாவை ஆதியில் பிரேரேபித்தவர்களைப்போல இவ்விஷயத்தைக் குறித்துச் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும அவ்வளவு சுறு சுறுப்பாய் இருக்கவில்லைபோலும.

IMPERIAL LEGISLATIVE COUNCIL; BUDGET SPEECHES.

இராஜப் பிரதிநிதி சட்ட நிரூபணசபை: வரவுசெலவு கணக்குப் பிரசங்கம்.

பம்பாய் சபையில் கோகலே வெகுநாள் வேலைசெய்யவில்லை. ஸ்ரீமான். பெரோஜிஷா இராஜப் பிரதிநிதி சட்ட நிரூபண சபையில் தமது ஸ்தானததை விட்டுவிட விரும்பினார். 1901-ம வருஷத்தில் அவருடைய ஸ்தானத்துக்கு எல்லோராலும கோகலே தெரிந்தெடுக்கப்பட்டார். அதுமுதல் கடைசிவரையிலும் அவரே அச்சபையில் மிகவும் புகழுடன் விளங்கிய மெமபராய் இருநதார். கோகலேயை இந்திய எதிர்கட்சித் தலைவர் என்று எல்லோரும் சொல்வது வழக்கம. ஆயினும் ஒவ்வொரு விஷயத்திலும் இந்தியர்களுடைய அபிப்பிராயததை அரசாங்கத்தார்க்கு முன் தெரிவிப்பது தமதுகடமை என்றும, அரசாங்கத்தாரை எதிர்த்துப் பேசுவது மாத்திரமே தமது கடமை அன்றென்றும், அவர் நினைத்தார். வருஷந்தோறும் மறுவருஷத்து வரவுசெலவு திட்டத்தைப்பற்றி அவர்செய்த பிரசங்கமானது ஒவ்வொருவருக்கும ஒரு விருநதாக இருந்தது. அவ்விருந்தை, சிநேகிதர்களும எதிரிகளும முறையே சந்தோஷததுடனும் பயததுடனும் எதிர்பார்த்திருப்பார்கள். அவர் நியாயம் காட்டிக் கேட்கும கேள்விகளுக்குப் பதில்சொல்வது அவசியமா யிருநதது; பதில்சொல்லக் கூடுமாயினும் ஒரு நிமிஷநேரததில் சித்தப்படுத்தி விடைகொடுப்பது ஒவ்வொருவருக்கும் இயன்றதன்று. ஒரு சமயத்தில் இராணுவச்செலவு சம்பந்தப்பட்ட வரையில் அவர் பேச விரும்பின முக்கிய அமிசங்களைச் சொல்லும்படி லார்ட் கிச்சனர் அவரைத் தனித்துக் கேட்டார். தருக்கிக்க அறி

யாத அப்பெரிய போர்வீரருக்கு மரியாதையாக அவர் சில விஷயங்களைத் தாம் விரும்பியவண்ணம் வற்புறுத்திச் சொல்லவில்லை. அவருடைய வரவுசெலவுக் கணக்குப் பிரசங்கத்தால் உண்டான பிரயோசனம் மறுவருஷத்துக் கணக்கில் நிச்சயமாய் விளங்கும். அவர் எப்பொழுதும் செலவைச் சுருக்க விரும்பினவர். வரி செலுத்துவோரிடமிருநது அரசாங்கத்தார் அளவுக்கு மீறி வரிவாங்குவது அவருக்குப் பிரியமில்லை. உதாரணமாக : இருப்புப் பாதைகாகச் செய்யும் அளவுகடந்த செலவை அவர் எப்பொழுதும் ஆட்சேபித்துப் பேசினார். செலவு குறைவதற்காகவும் இத்தேசத்துச் சனங்கள் தங்களது அரசாங்கத்தில் பங்குபெறவேண்டும் என்று நியாயமாய் விரும்புவதற் கேற்பவும் சுதேசகாரியஸ்தர்களையே அதிகமாக உபயோகிக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். மிசசமான பணம் ஏதாவது இருந்தால் அதைக் கல்வி பரவச் செய்வதிலும், சுகாதார திருத்தங்கள் செய்வதிலும் உபயோகிக்க வேண்டும என்று சொன்னார். வரி விதிப்பதால் புறநாட்டுச சாமான்கள் இறக்குமதி யாகாமல் தடுத்து இந்திய உள்நாட்டுக் கைத்தொழில்களை இரட்சிக்க வேண்டும் என்பது பொதுவாய் அவருடைய கோட்பாடு. வரிவிலக்கிய வியாபாரததை (Free trade) வெகுவாய்த் தாங்கிப் பேசுபவரான மில் என்பவரும் ஆரம்பதசையிலுள்ள கைத்தொழில்களைக் காப்பாற்றும் பொருட்டுப் புறநாட்டுச் சாமான்களை விலக்கவேண்டும் என்றுசொன்னார். ஆயினும் புறநாட்டுச் சாமான்களை விலக்குவதனல் இச்சமயத்தில் ஐரோப்பியர் வசமிருக்கும் கைத்தொழில்களை மாத்திரம் இரட்சிக்கக்கூடும் என்பதைத் தெரிந்துகொள்ளப்போதுமான நுண்ணறிவுடையவராய் கோகலே இருந்தார். அரசாங்கதார் இன்னும ஜனங்களுடைய அபிப்பிராயத்துக்கு முற்றி

லும் இணங்கிநடவாமையினால் அவசியமானபடி அரசாங்கத்தாரைத் தூண்டுதலும் நிர்ப்பந்தப் படுத்துதலும் ஐரோப்பியர்களால்தான் முடியும். உப்புவரியைக் குறைக்கவேண்டும் என்றும், வருமானவரிக்கு விதிக்கக்கூடிய வரியின் அளவை உயர்த்தவேண்டும் என்றும் அவர் வாதித்தார். அவருடைய பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. வரவு செலவு கணக்கில் பணமிகுந்திருக்கத் தேசம் வறுமையால் கஷ்டப்படும் புதுமையைக் கண்டித்துப்பேசி அதற்குச் சரியான காரணமும் எடுத்துக்காட்டினார். அதாவது: நாணகத்திற் கலக்கும் தங்கத்தினளவால் நாணக ஏற்பாடு (Currency policy) தானாகவே வரியை உயர்த்திவிட்டது. முன்பு நாணகத்திற் கலக்கப்படும் சுத்த வெள்ளியின் அளவுக்கேற்றபடி வரி விதிக்கப்பட்டது. அவ்வரி இப்பொழுது ரூபா எண்ணிக்கையில் பெயருக்கு மாத்திரம் முன்போலவே இருந்தாலும் உண்மையாகவே தொகையில் அதிகரித்துவிட்டது. ஏனெனில் இப்பொழுது ஒரு ரூபா நாணகத்திலுள்ள வெள்ளியின் மதிப்புக்கு அந்நாணகம் அறிகுறியாவதில்லை. மேலும், கணக்குவைக்கும் முறையைப்பற்றி வெகு உபயோகமான பல யோசனைகள் சொன்னார். அவ்யோசனைகள் அரசிறை மந்திரியால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அரசிறை விஷயத்தில் கோகலே பெற்றிருந்த நிபுணத்துவத்தைப் பார்க்கப்போனால், இன்னும நல்ல பாக்கியமுள்ள ஸ்திதியில், அவர் பிரிடன் தேசத்து இராஜ போக்கிஷாதிகாரியாகி மிகுந்த கீர்த்தி பெற்றிருக்கலாம்.

UNIVERSITIES BILL ; VALIDATION BILL.
சர்வகலாசங்க மசோதா ; நிர்ப்பந்த மசோதா.

இராஜப் பிரதிநிதியின் சபையில் இவர் மிகவும் தலையிட்டு வாதித்த பில்களில் ஒன்றுவது: சர்வகலாசங்க மசோதாவும் அதைச் சார்ந்துண்டான நிர்ப்பந்த மசோதாவுமாம். லார்ட் கர்ஸன் ஒரு சர்வ கலாசங்க கமிஷன் (ஆராய்ச்சிச்சபை) ஏற்படுத்தினர். அக்கமிஷனுடைய அறிக்கையின் மேல் இம்மசோதா ஏற்படுத்தினதாய் எண்ணப்பட்டது. சர்வகலா சங்க அதிகார சபையின் அங்கத்தினர்களுடைய தொகையைக் குறைக்கவேண்டும் என்பது அம்மசோதாவின் நோக்கம். சர்வகலா சங்கங்களை அரசாங்கத்தார் முற்றிலும் அடக்கியாளுவதற்கு அது ஒருவாறுக இடங்கொடுத்தது. வித்தியா விஷயங்களைக் கோகலே செவ்வையாய் அறிந்திருந்ததனுல் அவர் அம்மசோதாவை அதிக பிடிவாதத்துடன் பயன்படும்படி ஆக்ஷேபித்தார். அளவைக் குறைத்தாயினும் கல்வியைச் சீர்ப்படுத்தவேண்டும் என்பது அப்பில்லின் கருத்து. இதைக் குறித்து கோகலே பேசின வார்த்தைகள் ஆழ்ந்து ஆலோசிக்கத்தக்கன. "இக்காலத்தில் கற்பிக்கப்படும் கல்வியில் கலாசாலைக் கல்வியானது சிரேஷ்டமானதாய் இருந்தாலன்றி அது நிஷ்பிரயோசனமாகி தீமையைக்கூட விளைவிக்கும் என்று அரசாங்கத்தார் நினைக்கக்கூடாது ; இரண்டாவது, இக்கல்வியாலுண்டாகும் பயனை நிச்சயித்தற்கு, மனுேசக்தியை உபயோகித்துச் செய்ய வேண்டிய காரியங்களில் நமது வித்தியா பட்டதாரிகள் சாதித்திருக்கும் அரிய செயல்களையே முழு அளவு கோலாகாவாவது, வெகு முக்கிய அளவு கோலாகவாவது கொள்ளுதல் கூடாது. பிரபு அவர்களே,

இந்தியாவின் தற்கால நிலைமையில் மேல்நாட்டுக் கல்வி எதுவும் சிரேஷ்டமானதாகவும், பிரயோசன முள்ளதாகவும் இருக்கிறதென்று நினைக்கிறேன். இது என்னுடைய துணிபு. அக்கல்வி யிந்நிலைமையில் கற்பிக்கப்படும் கல்வியில் சிரேஷ்டமானதாய் இருந்தால் அது அவ்வளவுக்கவ்வளவு சிலாக்கியமே. சிரேஷ்டமான தல்லாவிட்டாலும் அதன்பொருட்டு அது தள்ளத்தக்கது ஆகாது. இராசாங்க காரியங்களிலாயினும், ஜனசார காரியங்களிலாயினும், கைத்தொழிற் காரியங்களிலாயினும், புத்தியை உபயோகித்துச் செய்யுங் காரியங்களிலாயினும் ஒரு ஜனத்தினுடைய வாழ்க்கை ஒன்றோடொன்று சம்பந்தபட்ட பல அங்கங்களையுடைய தொன்றாகும். எல்லாத்துறைகளிலும ஜனங்களினுடைய ஊக்கம் கட்டுப்பாடில்லாமல் தாராளமாய் இயங்குவதற்கு இடமிருந்தாலன்றி, எத்துறையிலும் விசேஷமான விருத்தியை எதிர்பாாக்கக் கூடாது. இந்தியாவில் தற்கால நிலைமையில் மேல்நாட்டுக் கல்வி செய்யக்கூடிய மகத்தான வேலையானது அவ்வளவாக படிப்பை விருத்தி செய்வதன்று; பண்டைக்காலத்துக் கருத்துகளுக்கு அடிமையாய் இருப்பதினின்று இந்தியர்களுடைய மனத்தை விடுவித்து, மேல் நாட்டாருடைய வாழ்க்கையிலும, எண்ணங்களிலும் ஒழுக்கத்திலும் சிரேஷ்டமானவைகளைத் தெரிந்து அனுசரிப்பதாகும் என்று எனக்குத் தோன்றுகிறது. இதன்பொருட்டு மேலான படிப்புமாத்திரம் அன்று, மேல்நாட்டுப் படிப்புயாவும் உபயோகமானவையே. ஆங்கிலேயர்கள் தங்கள் சரித்திரத்தினுடைய செல்வாக்கிலும், கிரந்தங்களினுடைய செல்வாக்கிலும் இன்னம் அதிக நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். பி. ஏ. பட்டம்பெற்ற ஒருவர் அதிருப்தியடைந்து சொல்லும் வார்த்தைகளால் அவர்கள் வருத்தப்படுவதற்கு

எண்ணங்கொள்ளுகிறபோதெல்லாம், இந்தியாவில் மாறுபாடு அடைகிற இக்காலத்தில் அவ்வித்தியா பட்டதாரியைப் போன்றவர்களைக் காண்பது அரிது என்பதை அவர்கள் அறிவார்களாக. இந்தியாவிற்கு வருகிற ஒவ்வொரு ஆங்கிலேயனும் இத்தேசத்திற்கு ஆங்கிலேயர்கள் அனுப்பப்பட்டிருப்பதின் உண்மையான நோக்கத்தை உணர்ந்து கொள்ளாததை முன்னிட்டு இந்தியாவில் பிரிடிஷ் ஆளுகையின் முடிவான நோக்கத்தை எனது தேசத்தார் சந்தேகிப்பது பொருந்தாமை போல, ஆங்கிலேயர்கள் இதனாலேயே மேல்நாட்டுப் படிப்பின் பயனில் நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது என்பதை உணர்வாராக.'' பின்பு அம்மசோதா கொண்டுவந்த படியே சட்டமாய்விட்டது. படிப்பு விருத்தியாவதற்குச் சட்டமுண்டாக்குவதிலும் திரவியசகாயஞ் செய்வது சிறந்தது என்னும் உண்மையை அவா வற்புறுத்திப் பேசினதினால் வெகு பிரயோசனம் உண்டாயிருக்கிறது. கல்வியின் பொருட்டு அதிகபணம் கிடைக்கும்படி அரசாங்கத்தார் செய்திருக்கிறார்கள். கல்வியின் தன்மையில் ஏற்றம் உண்டாயிருக்கிறதோ என்று இன்னும் அநேகர் சந்தேகிக்கிறார்கள். ஏற்றம் ஏதேனும் உண்டாயிருக்குமாயின் அது மேற்சொன்ன திரவிய சகாயத்தால் ஆனதே அன்றி சர்வகலாசங்க சட்டத்தால் ஆனதன்று. ஆரம்பத்தில் அச்சட்டம் ஒருவாறு நன்றாய் வேலைசெய்தது. திருத்தியமைக்கப்பட்ட சர்வகலாசங்க அதிகார சபை இயன்றவரையிலும் சிறந்ததாய் இருந்தது. ஆயினும் அச்சபையின் அதிகாரிகளை ஐந்து வருஷத்தில் விசேஷமாய் மாற்றுவதற்குரிய அதிகாரம அபபடியே இருக்கிறது. அவ்வதிகாரததால் அச்சபையின் சுதந்திரம படிப்படியாய்க் குறைவது நிச்சயம. சிற்சில சமயத்தில் அவசரமும் முக்கியமுமான விஷயம வாதிக்கப் படுமபொழுது

அச்சபையின் ஓர் அங்கத்தினர் அரசாங்கத்தார் கட்சிக்கு மாறாக அபிப்பிராயம் கொடுத்தமைக்காக அவர் மறுமுறை நியமிக்கப்படவில்லை என்னும் இரகசியப் பேச்சுகள் சிலசமயங்களில் வெளியாகின்றன. அரசாங்கத்தார் தமது பக்கம் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயம் பெறும் பொருட்டுச் சில அங்கத்தினருக்கு முன்பே முறையாக சமாசாரம் அறிவித்துச் சித்தப்படுத்த முயன்றதை முன்பே சொல்லியிருக்கிறோம். அச்சபையின் சுதந்திரத்தைத் திடப்படுத்துவதற்குரிய வழியாவது: தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுடைய தொகையைச் சரியான பாதுகாப்புடன் அதிகப்படுத்துவதாகும் என்பது அவர் கருத்து. ஆயினும் அங்கத்தினரை இவ்வாறு தெரிந்தெடுத்ததனால் சில குறைகள் உண்டாயிருக்கின்றன என்பதை நாம் நியாயமாய் ஏற்றுக் கொள்ளவேண்டும் இச்சர்வகலாசங்க சட்டம் உண்டாகி ஒருவருஷத்துக்குப் பிறகு ஸ்தல ஆட்சிக்காரர்கள் (லோகல் கவர்ன்மெண்டஸ்) அச்சட்டத்தை உபயோகித்து வந்த வழியில் சில கஷ்டங்கள் உண்டாயின. பம்பாய் ஹைகோர்ட்டில் அதைக்குறித்து ஒரு பிராதுகூடச் செய்யப்பட்டது. அதன்மேல் அரசாங்கத்தார் 1904-ம் வருஷத்தில் சாவ கலாசங்க நிர்ப்பந்தயில் கொண்டுவந்தார்கள். அதைக் கோகலே தம்மால் இயன்ற வரையிலும் ஆட்சேபித்தார். சில விளம்பரங்களில் முக்கியமாய் பம்பாயிலும கல்கத்தாவிலும் வெளிப்படையாயிருந்த சில ஒழுங்கீனங்களை அவர் அரசாங்க நிர்வாகிகளுடைய குற்றம என்று அவர்களுக்குப் படும்படி சொன்னது மன்றி, இப்படிப்பட்ட நிர்ப்பந்த சட்டஞ் செய்வது உசிதமா என்பதைக் குறித்து இத்தேசத்தில் ஜனங்கள் எல்லோரும் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை வாசாலமாகத் தெரிவித்தார் கோகலே சொன்ன

தாவது: " பிரபுவே, இத்தேசத்தில் இதுவரையிலும் பிரிடிஷ் ஆளுகையைச் செங்கோல் ஆட்சி என்று வருணிப்பது வழக்கம். பொதுவாய் இப்படிச் சொல்லுவதற்கு நல்ல காரணம் உண்டு. ஆயினும் இதைப்போன்ற இன்னுஞ் சில சட்டங்களைச் செய்வதானால் அப்பெயரை மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக நிர்வாகப் போறுப்பற்ற நிர்ப்பந்த சட்டஞ்செய்யும் ஆளுகை என்னும் வேறு பெயரைக் கொடுக்கவேண்டுவதாய் இருக்கும். பிரபுவே அரசாங்கத்தார் உள்ளபடியே தங்களுடைய உத்தியோகஸ்தர்களுடைய கீர்த்தியைப் பாதுகாக்க முயன்று, அதனால் அளவுக்கு மீறிய நஷ்டத்தை அடைகிறார்கள். எப்போதாயினும் கீர்த்தி யிப்படிப் பாதுகாக்கப்படுவது உண்டா? மேலும் இத்தேசத்தில் பொது ஜன அபிப்பிராயம் வலி அற்றதாய் இருக்கிறதினால் இராசாங்க நிர்வாகிகள் செலுத்தும் வரம்பற்ற அதிகாரத்தை அடக்குவதற்கு சட்டநிரூபண சபையும், ஹைகோர்ட்டுகளும் ஆகிய இவை இரண்டு மாத்திரம் இருக்கின்றன. சட்டநிரூபண சபையால் சட்டம் உண்டாக்கப்படுகிறது. ஹைகோர்ட்டுகளால் சட்டம் செலுத்தப்படுகிறது. இப்பொழுது அரசாங்கத்தார் நிர்ப்பந்த சட்டம் உண்டாக்கி அதனால் ஹைகோர்ட்டுகள் உதவுகின்ற பாதுகாவலை அழிப்பதாயினும், இப்படிப்பட்ட சட்டம் செய்வதற்கு உதவியாயிருக்குமபடி அரசாங்க நிருவாகம் பண்ணுகிறவர்கள் சட்டநிரூபண சபையைச் சொன்னபடி கேட்கும் நிலைமைக்குத் தாழ்த்துவதாயினும், மனம் போனபடி நடக்கும் நிர்வாகிகளுக்கும், ஜனங்களுக்கும் இடையில் நிற்பதற்கு வேறு என்ன இருக்கிறது.

RETIREMENT FROM THE DECCAN EDUCATION SOCIETY.

தக்காணத்துக் கல்விச் சங்கத்தினின்று நீங்குதல்.

1904-ம் வருஷக் கடைசியில் தக்காணத்துக் கல்விச் சங்கத்தில் ஆயுட்கால அங்கத்தினராக கோகலே பெற்றிருந்த சம்பந்தம் முறைப்படி முடிவு பெற்றது. கடைசி இரண்டு வருஷங்களில் அவர் ரஜா (Furlough) பெற்றிருந்தார். 1902-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் அவர் கலாசாலையில் உபாத்தியாயராகக் கடைசிப் பிரசங்கம் செய்தார். அவர் பிரிந்து போவதற்காக வாழ்த்துப் பத்திரம் படித்துக் கொடுக்கும் பொருட்டு மாணுக்கர்கள் எல்லோரும் ஒன்று கூடினுர்கள். அச்சமயத்தில் கோகலே அதிகமான உருக்கம் அடைந்தார். அவ்வாழ்த்துரைக்கு அவர்சொன்ன பதில் முழுவதும் படிக்கத்தகுந்தது. அவர் கடைசியாகச் சொன்னதாவது ; "நான் இப்பொழுது உங்களைவிட்டுப் பிரிந்து போகையில் என்வாழ்வில் நான் செய்த சிறந்த வேலையை எனக்குப்பின் விட்டுப்போவதாய் எண்ணுகிறேன். இனிமேல் வேறு துறைகளில் என்னேடு உழைப்பவர்களாக நான் உங்களிற் சிலரைச் சந்திக்கக் கூடும் என்றும் ; இக்கலாசாலையில் சிலசமயங்களில் நாம் சந்திக்கக் கூடும் என்றும் நம்புகிறேன். கடவுள் இக்கலாசாலையை ஆசீர்வதிப்பாராக ; உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக." அவர் தமது உறுதி மொழியை நிறைவேற்றச் சக்தியுள்ளவராய் இருந்ததற்காக உண்மையாக நன்றிபாராட்டினுர். ஆதியில் அவருக்குத் துணைவர்களாயிருந்த ஆகரகரவும், ஆபடேயும், கெல்காரும் இவ்விருபது வருஷங்கள் கழிவதற்கு முன்பே யௌவன பருவத்திலேயே இறந்துபோனுர்கள். வேறு சிலர் வேலையைவிட்டு விட்டார்கள். தாங்கள் கூறிய

உறுதிமொழியை நிறைவேற்றியபின் வேலையைவிட்டு நீங்கினமுதல் ஆயுட்கால அங்கத்தினர் கோகலேயும், கோலும் ஆவர். கலாசாலையைவிட்டு நீங்கின பிற்பாடு எக்கஷ்டகாலத்திலும் அவர் எங்களுக்கு ஆலோசனைசொல்லி உதவிசெய்துவந்தார். ஆயுட்கால அங்கத்தினரில் அனேகர் ஒருகாலத்தில் அவருடைய மாணாக்கர்களாயிருந்து பின்பு அவருடைய நண்பர்கள் ஆனவர்கள். பொதுவிவகாரங்களில் அவர்கள் எல்லோரும் வெகுவாய் அவருடைய கருத்தையே கொண்டிருந்தார்கள். பொது ஜனங்களுடைய எண்ணத்தில், கோகலேயின் இராஜாங்க விவகார முறை (School of polities) யோடு சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களில் ஒரு வாற்றால் இக்கலாசாலையும் ஒன்றாக இருந்தது.

EDUCATIONAL METHODS AND IDEALS OF THE D. E. SOCIETY.

த க. சங்கத்தின் கல்வி முறையும், நோக்கங்களும்.

கோகலேசெய்த வேலையில இப்பாகத்தைச்சொல்லி முடிப்பதன் முன், முக்கியமாக ஸ்ரீமான் திலகரும் அவரைச் சார்ந்தவர்களும் சொன்ன போதனையை ஏற்றுக்கொண்டு, தக்காணத்துக் கல்விச்சங்கமானது தனது பிற்காலத்தில் அதை ஸ்தாபித்தவர்களுடைய நோக்கத்துக்கு மாறுபாடாக நடந்தது என்று சொல்லும் ஒரு சாராரிடம் கோகலே வெறுப்புக்கொண்டிருந்தார் என்று சொல்ல வேண்டும். இவ்வாறு அக்கிரமமாகச் சொல்லுவதற்குக் காரணமாக இரண்டு விஷயங்கள் குறிப்பாகச் சொல்லப்படுகின்றன. அதில் ஒன்று அரசாங்கத்தார் கல்விக்காக உத

கும் பணத்தைக் குறித்ததாகும். முதலாவதாக இராஜப் பிரதிநிதியின் சபையிலிருந்துகொண்டு, கல்வியின் பொருட்டு மேன்மேலும் அதிக பணம் செலவுசெய்ய வேண்டும் என்று தமது வாழ்நாள் முழுவதும் கேட்டுக் கொண்டிருந்த கோகலேயானவர், இவ்வாறு வித்தியாபிவிருத்திக்காகக் கொடுக்கும் பணம் வெறுக்கத்தக்கது என்று அக்காலமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தார் என்பது சாத்தியமன்று. மேலும் இப்படிக்கொடுக்கும் பணம் ஜனங்களுடையது தானே; ஏற்றுக்கொள்ளத் தகாத நிபந்தனைகளுக்கு உட்படாமல் அது கிடைக்குமாயின், அதனால் கல்வி தானே இன்னும் விருத்தி அடையும். அன்றியும் ஸ்ரீமான். திலகர் பிரிந்து போக எண்ணுவதற்கு முன்பே அச்சங்கத்தாருடைய ஸ்தாபனங்கள் பணஉதவி பெற்று வந்தன. கலாசாலைக்குச் செய்துவந்த பண உதவி வேறொரு காரணத்தினால் கொஞ்சகாலம் நின்று போய்விட்டது; அதாவது: லார்ட் ரீ என்பவருடைய ஆட்சிக்காலத்தில், அச்சங்கத்தார் ஒரு ஐரோப்பியனைத் தலைவராய் வைத்துக்கொள்ளச் சம்மதித்தால், அரசாங்கத்தார் தக்காணத்துக் கலாசாலை (டெக்கான் காலெஜ்) யை அவர்களுக்கு ஒப்புவித்துவிட விரும்பினார்கள். ஆயினும் அச்சங்கத்தார் கிரமப்படியே இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையினால் ஒரே இடத்தில் இரண்டு கலாசாலைகளைத் தாங்கக் கூடாது என்னும் காரணத்தை முன்னிட்டு அரசாங்கத்தார் பண உதவி செய்வதை நிறுத்தி விட்டார்கள். 1894-ம் வருஷத்தில் லார்ட்டு ஹாரிஸ் என்பவரின் ஆளுகைக்காலத்தில் மறுபடியும் இப்பண உதவி செய்யப்பட்டது. இப்பண உதவிகளைப் பெற்றுக் கொண்டதற்காகக் குற்றஞ் சாட்டுவதாயின் அப்போலிக் குற்றம் சமமாக அச்சங்கத்தை ஸ்தாபித்தவர்கள்

எல்லோரையுஞ்சேரும். அவர்களிற் சிலர் சங்கத்தை விட்டு நீங்கிக் கொண்டபின், இதனோடு சம்பந்தப்படாத வேறு சங்கங்களை விருத்திசெய்ய முயன்றார்கள். ஆயினும் அவற்றின் சரித்திரம் மிகவும் நீண்டதன்று. அச்சங்கஸ்தாபனங்களுக்கு மாறாகச்சொல்லும் மற்றொரு முக்கிய விஷயமாவது : மதப்படிப்பு இல்லாமை. மேலும், இப்பொழுது சுதேச மதப்படிப்பை இப்பக்கங்களில் ஆதரிக்கின்றவர்களுக்கும் இக்குற்றத்தில் சமபாகம் உண்டு. ஸ்பென்சர் என்பவரை உறுதியாகப் பின்பற்றும் ஸ்ரீமான். ஆகரகர போன்ற ஒருவர் அறிவு பரவுதலைத்தடுக்க முயற்சி செய்யும் எந்த யோசனைக்கும் இணங்கமாட்டார் என்பது திண்ணம். நாம் கேள்விப்படுவது உண்மையாயின், ஒருகாலத்தில் ஸ்ரீமான். திலகர் இப்போது ஹிந்து மதோத்தாரணராய் இருப்பது போல் இருக்கவில்லை என்று தெரிகிறது. தக்காணத்துக் கலாசாலையினது ஒரு வருஷாந்தக் கூட்டத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான். ரானடேக்கும் ஸ்ரீமான். திலகருக்கும் ஒரு வேடிக்கையான வாக்கு வாதம் உண்டாயிற்றென்றும், ஸ்ரீமான் திலகர். மதவிஷயங்களைக் குறித்து வெகு வலாற்காரமான நோக்கங்களை வெளியிட்டார் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இப்பொழுது அவர் தமது நோக்கங்களை மாற்றிக் கொண்டார் போலும். இலௌகிகப்படிப்பாலேயே தேசம் ஈடேறும் என்று எண்ணி, அப்படிப்பே இசசங்கங்களுக்கும் உடன்பாடாகும என்ற தெளிவான பரஸ்பர உணர்ச்சியினால் இச்சங்கங்களிற் சேர்ந்த ஜனங்கள், திலகர் தமது நோக்கங்களை மாற்ற விரும்பினவுடனே, தங்கள் நோக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அவர் எதிர் பார்க்கமாட்டார் என்றே நம்புகிறேன்.

PRESIDENT OF THE BENARES CONGRESS
காசிக்காங்கிரஸின் சபாநாயகர்.

சுமார் 1905-ம் வருஷத்தில் கோகலே இந்தியாவில் முதன்மையான இராஜதந்திரி என்று சொல்லும் நிலைமையை அடைந்தார். இயற்கையாகவே இந்திய சுதேச மகாஜனசபை(Indian National Congress)க்குத் தலைமை வகிப்பதற்காக அவர் தெரிந்தெடுக்கப்பட்டார். உத்தியோகஸ்தன் அல்லாத ஒரு இந்தியன் அடையக்கூடிய மேலான கௌரவம் அதுவென்றே சொல்லலாம். காங்கிரஸின் இலட்சியங்களைப் பற்றியும் நோக்கங்களைப்பற்றியும் உண்டான அபிப்பிராய பேதங்கள் அப்பொழுதே பலம் பெற்று வந்தன. இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவ்வபிப்பிராய பேதங்கள் சூரத்தில் உச்சம்பெற்றன. காசியிற் கூடின காங்கிரஸிற்கு கோகலேயைச் சபாநாயகராகத் தெரிந்தெடுப்பதில் வெளிப்படையான ஆட்சேபம் ஒன்றும் இருக்கவில்லை. லார்ட் கர்ஸன் அப்பொழுதுதான் வேலையைவிட்டு நீங்கி இருந்தார். அவருடைய ஆட்சி சுறுசுறுப்பாய் நடைபெற்றதாயினும் விருத்திக்கு விரோதமானது. அவ்வாளுகை முடிந்தபொழுது துக்கந் தணிந்ததென்று தேசம் பெருமூச்செறிந்தது. மிஸ்டர் (இப்பொழுது லார்ட்) ஜான்மார்லி இந்தியாமந்திரியாகவும்,லார்ட்மிண்டோ புது இராஜப் பிரதிநிதியாகவும் அமைந்து அப்பொழுதுதான் அதிகாரத்துக்குவந்த பலமான அரசாங்கமானது விருத்திக்கு அனுகூலமாயிருந்தது. அவ்வரசாங்கத்தில் நிஜமான அபிவிருத்தி யுண்டாகும் என்று ஜனங்கள் கருதியிருந்தார்கள். பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தில் சுய அரசாட்சி பெற்றிருக்கும் குடியேற்ற நாடுகளில் வழங்கிவரும் அரசாங்கத்தைப்போன்ற ஒருவகை அரசாங்கத்தை இந்நாட்டில் பெறு

வதே காங்கிரஸின் இலட்சியம் என்று கோகலே இப்பிரசங்கத்தில் வெளிப்படையாகச் சொன்னார். இவ்வழியில் அபிவிருத்தி மெதுவாய்த்தான் உண்டாகும் என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். அவர் சொன்னதின் சாரமாவது: இந்த இலட்சியத்தை நாம் மறந்து விடக்கூடாது; இத்தேசத்தின் அரசாட்சியில் படிப்படியாய் ஜனங்களுக்கு அதிகமான பங்கு கொடுத்து அவர்களுடைய பொறுப்பு இன்னதென்னும் உணர்ச்சியை வளர்க்கவேண்டும் என்பதே. இவ்வாறாக, இந்திய இராஜ விவகாரங்களில் மிதவாதக் கட்சியா (Moderate party) ருடைய கொள்கைகளை அவர் பூர்த்தியாக வெளியிட்டார். அபிவிருத்தி மெதுவாய் உண்டாகிறதே என்று ஆதிரப்படுவதைக் கண்டித்து அவர் பிரிடிஷாருடைய தொடர்புக்குத் துரோகம் செய்வதைக் கடுமையாய் எதிர்த்து நின்றார். ஆயினும் பலஅங்கங்களைக் கொண்டு அரசாளும் முறையை (Bureaucratic system of Government) ஆட்சேபிப்பதற்கு அவர் எப்பொழுதும் சித்தமாயிருப்பர் இப்படிப்பட்ட நடுத்தரமான அபிப்பிராயமானது இரண்டு கோடியிலும் உள்ள எதிர் கட்சிக்காரர்களில் ஒருவரையும் திருப்தி செய்யாதென்பது நிச்சயம்; ஆகையினால் ஒரு பக்கத்தில் அமிதவாதக் கட்சியாரும் (extremists), மற்றொருபக்கத்தில் உத்தியோகஸ்தர்களும் தாக்குவதை அவர் தாங்கவேண்டியவரானார். அவர் உடனே ஆரம்பஞ்செய்வதற்காகச் சில வேலைகளை ஒழுங்காகக் குறித்துக்கொண்டார். அவற்றில் ஒரு பாகம் அவருடைய ஏற்பாட்டினாலேயே அனுகூலமாக முடிந்ததை அவர் உயிரோடிருக்கும் போதே பார்த்தார். காங்கிரஸுக் கூட்டத்திலெல்லாம் அதிகசித்தியடைந்தது காசிக் காங்கிரஸே. அப்பெருமைக்கு முக்கியகாரணர் அக்கிராசனம் வகித்த கோகலேயே ஆவர்.

GOKHALE'S VISIT TO ENGLAND MORLEY MINTO REFORMS.

கோகலே இங்கிலந்துக்குப் போதல் மார்லி-மிண்டோ திருத்தங்கள்.

காசிக் காங்கிரஸ் முடிந்து கொஞ்சகாலத்தில் இந்திய திருத்தத்தின் பொருட்டுத் தனியாய் வேலைசெய்வதற்கு கோகலே இங்கிலந்திற்குப் போனார். அவர் இந்தியா மந்திரியையும் மற்ற உத்தியோகஸ்தர்களையும் பலமுறை சந்தித்து மிதமான பாஷையில் ஜனங்களுடைய அபிப்பிராயங்களை அவர்கள் முன்னிலையில் தெளிவாகச் சொன்னார். இவ்வாறு சந்தித்துப் பேசினபோது என்ன என்ன நடந்தனவோ தெரியாது. ஆயினும் அவர்கள் ஆலோசித்த விஷயங்களில் வங்காளப் பிரிவினையும் (Partition of Bengal) ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதை நாம் யூகித்தாவது அறியலாம. அக்காலத்தில் வங்காளப் பிரிவினையைப்பற்றி மறுமுறை விசாரிப்பதற்குத் தக்கசமயம் வாய்த்திருக்கலாம் என்றும், ஆயினும் இந்தியாவின் நன்மையைக்கோரி ஆத்திரப்பட்ட சிலர் மிஸ்டர் மார்லியைத்தங்கள் அபிப்பிராயத்துக் கிணங்கும்படி வற்புறுத்த முயன்றார்கள் என்றும், அதனால் அவர் வங்காளப் பிரிவினையை நிச்சயபபடுத்தலானார் என்றும், அதனால் ஏறக்குறைய ஆறுவருஷங்கள் கழிந்தபின், மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியவர்கள் இந்தியாவிற்கு விஜயம் செய்யுங்காலத்தில், லார்ட் மார்லி இந்தியாமந்திரி வேலையை விட்டுவிட்ட பிற்பாடு, அப்பிரிவினை ரத்து செய்யப்பட வேண்டுவதாயிற்று என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். என்ன ஆதாரத்தைக் கொண்டு இப்படிச் சொல்லுகிறார்களோ நாம் அறியோம். பிற்காலத்தில் இந்திய திருத்

தங்கள் செய்வதற்குரிய வழியைப் பற்றியும் அப்பொழுது ஆலோசனை நடந்திருக்கும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. இந்தியா மந்திரியினிடமிருந்து இராஜப் பிரதிநிதிக்குவந்த முதல் இராஜாங்க பத்திரத்திலேயே அதன்பயன் தெரிந்தது. முடிவான தீர்மானம் வந்து சேருவதற்குக் கொஞ்ச காலம் ஆயிற்று என்பது வாஸ்தவந்தான். ஆயினும் சமீப காலத்தில் நடந்த திருத்தங்களின் மூலகாரணங்களில் கோகலே இங்கிலந்திலிருந்தது ஒன்றுவது ஆகும் என்பதை மறுக்கமுடியாது. இந்தியா மந்திரியின்சபையில் இரண்டு இந்தியர்களையும், இராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபையிலும், மாகாண கவர்னர்கள் என்னும் அதிபதிகளின் நிர்வாக சபை ஒவ்வொன்றிலும்ஒவ்வொரு இந்தியமெம்பரையும்ஏற்படுத்தினது; சட்டசபைகளின் விரிவு, வரவுசெலவுக் கணக்கை வாதிப்பதற்குக் கொடுத்திருக்கும் வெகுவாய் விரிந்த சுதந்தரங்கள், பொது நன்மைக்குரிய விஷயங்களைக் குறித்துத் தீர்மானங்கள் செய்தல், ஒட்டுக் கேள்விகள் கேட்பது; அதிகாரப் பிரிவினை கமிஷன் (Decentralization Commission) நியமித்தது உட்பட அதிகாரப் பிரிவினை செய்வதற்குச்சார்பு; எல்லாவற்றிலுமேலாக, உத்தியோகஸ்தர்கள் ஜனங்களிடத்தில் நடந்துகொள்ளும விதத்தில் சூட்சுமமாய் அறியலாகும் ஒரு மாறுதல்; (அம்மாறுதலின் ஆரம்ப நிலையை லார்ட் கர்ஸனும் கடைசி நிலைமையை லார்ட் ஹார்டிஞ்சும காட்டுவதாகச் சொல்லலாம்). ஆகிய இவை கோகலே பல சமயங்களில் இரகசியமாய் இங்கிலந்துக்குத் தூதுபோனதால் உண்டான பலன்களில் சிலவாகும். அவர் நபமைவிட்டுப் பிரிந்து போய்விட்டபடியால், இந்தியா மந்திரியின் சபையில் முதல் இந்திய மெம்பராய் இருக்கும் கௌரவம் அவர்க்குக் கொடுக்கப்பட்டது என்பதை இங்கே நாம

சொல்லலாம். தமது சுயேச்சையான நிலைமையைக் காப்பாற்ற வேண்டுமென்னும் உறுதிப்பாட்டினின்று அவர் மாறிப்போகவே இல்லை. தெரிந்தெடுக்கப்படுபவர்களில் தாம் ஒருவர் ஆவதற்கு இசைந்து செய்யும் நன்மையைக் காட்டிலும் அந்நிலைமையி லிருந்தே தாம் அதிக நன்மை செய்யக் கூடும் என்று அவர் நினைத்தது சரியே. கடைசிவரையிலும அவர் ஜனங்களுடைய சுதந்தர ரக்ஷக (Tribune) ராகவே இருந்தார். பண்டைக் காலத்து ரோமர்கள் காலத்திலும, இன்னும் சமீபகாலத்திலும் ஜனசுதந்தர ரக்ஷகாகள் தங்கள் அகந்தையினுல் தொழில் இழநது, சீரழிநது போனூர்கள்; ஆயினும் அப்படிப்பட்டவர்களை வெகுவாய்த் தொடரும் பாவமாகிய தற்பெருமைக்குக் கோகலே ஒருக்காலும் இரையாகவில்லை.

FREE AND COMPULSORY EDUCATION
சம்பளமில்லாத கட்டாயப் படிப்பு

இந்தியாவில் சமபள மில்லாத கட்டாயப் படிப்பு வேண்டும் என்னுட் விஷயத்தில் கோகலே மிகவும் உழைத்தார். இத்தேசத்து ஜனங்கள் உண்மையாக மறுபடியும் சீர்ப்படுவதற்கு இக்கல்வியே சிரேஷ்டமான இரட்சாபந தனம் என்று கருதி அவர்சமயம் வாய்தத பொழுதெல்லாம் அதன் ஆவசியகத்தைப் பற்றி அடிக்கடி பேசிக்கொண்டிருந்தார். மேலும் இது அவருடைய கருத்துகளை பிரிடிஷ் ஜனங்கள் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கான ஒரு விஷயமாய் இருநதது. அவர் இங்கிலந்திற் செய்த பொதுப் பிரசங்கங்களில் நாலு குழநதைகளில் ஒன்றே பள்ளிக்கூடம் போவதாகவும, ஐந்து கிராமங்களில் ஒரு கிரா

மத்தில் மாத்திரம் பள்ளிக்கூடம இருப்பதாகவும உண்மையைச் சொன்னபோது பிரசங்கம் கேட்டவர்கள் இவர் பட்சம் சரியென்று நினைக்கத் தவறினதில்லை யென்று என்னோடு சொன்னார். அந்த முனிசிபாலிடியும அதன் எல்லைக்குள் துரைத்தனத்தாருடைய அனுமதியின்மேல் ஆண் பிள்ளைகளுக்குக் கட்டாயப்படிப்பு ஏற்படுத்துவது சாத்தியமாகும்படி இராஜப் பிரதிநிதியின் சபையில் அவர் ஒரு பில் (மசோதா) கொண்டுவந்தார். அது அனேக பாதுகாப்புகளாலே எல்லையிடப் பட்டிருந்தமையினால், நியாயமாகச சொல்லுமிடத்து அது முற்றிலும் நிர்த்தோஷமான ஒரு பில்லாக இருந்தது. ஆயினும மதராஸைச் சேர்ந்த ஸ்தல அரசாங்கத்தார் (Local Governments)சிலர் தவிர மற்றெல்லா ஸ்தல ஆட்சிக் காரர்களும் அதற்கு விரோதமாய் அபிப்பிராயம் தெரிவித்ததினால் அது சட்டமாவதற்குத தவறிவிட்டது. எப்படியும் இது சட்டமாவதில்லை என்பது உறுதியாயின் இதனினும் அதிக துணிவோடு முழு மனத்துடன் ஒரு பில்லைக் கொண்டுவந்திருப்பது இன்னும் நல்ல தந்திரமாக இருக்கலாம என்றும் இங்கிலந்தில் இட் பில்லை ஊக்கத்துடன் தாங்கிப்பேசின சிலர் எண்ணினார்கள். ஆயினும் அவர் சட்டஞ்செய்வதற்கு நிஜமாக முயன்று தவறிப்போனதினால் நாம் நம்பிக்கை யிழக்க வேண்டுவதில்லை. ஏனெனில் அதைப்பற்றிய ஆட்சேபங்கள் எல்லாம பெரும்பாலும் அதைக்கொண்டு எவ்வாறு என்னசெய்வது என்பதைப் பற்றினவையாகும் என்று இப்பொழுது ஒவ்வொருவரும ஒதுக்கொள்கிறார்கள். மிகுந்த உறுதியுள்ள "வெய்யிலிற் காய்ந்த உத்தியோகஸ்தர்" களும இந்தியாவில் சமபளமில்லாத கட்டாயபபடிபபு ஏற்படுத்துவது காலக்கிரமத்தில் கட்டாயமாய் நடககப்போகிற ஒரு காரியமே

என்று நினைக்கிறார்கள். இங்ஙனமாக கோகலேயின் பலமான ஆதரிப்பானது இவ்வெண்ணத்தை இன்னும் பக்கத்தில் கொண்டுவந்து விட்டது என்பது வெளிப்படை. இன்னும சில வருஷங்களுக்குப்பின் இது நிறைவேறி விடும்பொழுது இவ்வெண்ணத்தை முதலில் தூண்டிவிட்ட பெருமை கோகலேக்கு அளிக்கப்படும். ஜனங்களைப் படிப்பித்தவர் என்று பிற்சந்ததியில் அவருக்குப் பெயர் வழங்கும.

VISIT TO SOUTH AFRICA.

தென்னுபிரிகாவுக்குப் போதல்.

தென்னுபிரிகாவில் இந்தியர்பட்ட கொடுமைகள் நாளுக்கு நாள் முதிர்ந்துவந்தன. நேடாலிலும் வேறிடங்களிலும் முதலில் உடன்படிக்கைக் கூலிகளாய் அழைக்கப்பட்டு அவர்கள் தங்களுடைய நற்குணங்களினுலேயே வெள்ளைக்காரர்கள் வெறுக்கத்தக்க குடிகளாய் விட்டார்கள். அவர்களில் அனேகர் தங்களுடைய உடன்படிக்கை கழிந்தபின் அங்கேயே தங்கி சிறு கிருஷிகர்களாய்ச் செழிப்படைந்தார்கள். மற்றவர்கள் சிறிய வியாபாரிகளாய்த் தங்களது முயற்சியாலும, சிக்கனத்தாலும், வெள்ளை வியாபாரிகளினும் குறைந்த விலைக்குப் பண்டங்கள் விற்கக்கூடியவர்களானார்கள். குடியேற்ற நாடுகளில் வெகு பலமாயிருக்கிற நிறத்தைப்பற்றிய துரபிமானமும் அவர்களுக்கு இடையூருயிருந்தது. இவ்விதமாய் நாளுக்கு நாள் பெரிய பெரிய சுதந்தரக் குறைவுகள் அவர்கள்மேற் சுமத்தப்பட்டன. சில சமயங்களில், வியாபாரஞ் செய்வதற்காக உத்தரவுசசீட்டுக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். பொதுவாயிருக்கிற சாதாரண

போக்கு வரவுச் சாதனங்களாகிய காலடிப் பாதைகளையாயினும், மின்சார வண்டியையாயினும் இருப்புப்பாதையில் உயர்ந்த வகுப்புகளையாயினும் அவர்கள் உபயோகித்தல் கூடாது. அநேக பக்கங்களில் அவர்கள் குறித்த இடங்களில் வசிக்கவேண்டும். ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் சொத்தைக் கொண்டுபோவதற்குப் பல நிபந்தனைகள் தடுதலையாய் இருந்தன. சில இடங்களில் அவர்கள் அனுமதிச்சீட்டு (ticket of leave) ப் பெற்ற ஒரு கைதிபோலத் தங்களது பெருவிரல் அடையாளத்துடன் ஒரு உத்தரவுச் சீட்டுக் கொண்டுபோகவேண்டும். அவர்களுடைய விவாகங்கள் ஏகதார விவாகங்கள் அல்லாமையினால் அவற்றையும் செல்லாத விவாகங்களாகச் செய்து விடுவோம் என்று வெள்ளையர்கள் பயமுறுத்தினார்கள். எவ்வளவு படித்தவனாயிருந்த போதிலும் ஒவ்வொரு இந்தியனும் ' கூலி ' என்று அழைக்கப்பட்டான். உண்மையாகவே குடிகளுடைய சாதாரண உரிமைகளையும் அவனுக்குக் கொடுக்க வில்லை. இந்தியனுடைய குழந்தையின் படிப்புக்காக எந்த ஏற்பாடும் செய்யவில்லை. ஏனெனில்; வெள்ளைக்குழந்தைகளுடைய பள்ளிக்கூடத்தில் இந்தியக்குழந்தைகளைச் சேர்த்துக் கொள்வதில்லை. வெகுவாய் அவனுடைய உழைப்பினாலே இப்பொழுது செழிப்படைந்திருக்கும் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் ஒரு பாகத்திலேயே, ஓர் அன்னிய தேசத்தானைக் காட்டிலும் தாழ்வாக அவன் நடத்தப்பட்டான். இந்தியர்கள் பிரிடிஷ் இராச்சியத்தால் தங்களுக்கு ஏதாயினும் பிரயோசனம் உண்டா என்று நியாயமாகக்கேட்கக்கூடும். போயர் சண்டைக்காலத்தில் செய்த கம்பீரமான வாக்குத்தத்தங்கள் உபேட்சை செய்யப்பட்டன. போயர் ஆளுகையைவிட பிரிடிஷ் ஆளுகையில இந்நிலைமை இன்னும் பத்து மடங்கு

கெட்டுப்போயிற்று. கூலி வேலைக்காரர்கள் அடிக்கடி வேலை செய்ய மறுத்துவிட்டார்கள். நிஜமாகச் சண்டை செய்யாமல் வருங்கஷ்ட நஷ்டங்களைத் தாங்கி எதிர்த்தல் (passive resistance) என்னும் போரிலே ஆண்களும் பெண்களுமான பேர்போன பல இந்தியர்கள் ஜெயிலுக்குப் போகவேண்டிய வர்களானார்கள். அவர்கள் பட்டகஷ்டங்களைப் பற்றின சமாசாரங்கள் இந்தியாவிற்கு வந்துசேர்ந்து அங்கு முன்பே தலையெடுத்துக்கொண்டிருந்த அதிருப்தியை விருத்திசெய்தன. குடியேற்ற நாடுகளில் இந்தியர்களை நடத்தும் விஷயத்தில் வெகுகாலமாக கோகலே அதிக சிரத்தையுடையவராயிருந்தார். சமீபகாலத்தில் ஸ்ரீமான். எம். கே காந்தியினும் தன்னலங்கருதாத இந்திய தேசாபிமானி வேறொருவரும் இருந்ததில்லை. அவர் கோகலேயை வெகுவாய் மெச்சுகிறவர். தென்னாபிரிகாவிற்கு வந்து அங்குள்ள நிலைமையை நேரேபார்க்கும்படி அவர் கோகலேயைக் கேட்டுக்கொண்டார். சுகக்கேடான தேகஸ்திதியிலிருந்தும், 1912-ம் வருஷத்தில், இக்காரியத்தை மேற்கொண்டு, இராஜீய காரியத்துக்காக இங்கிலாந்திற்குப் போயிருந்த கோகலே, அங்கிருந்தே தென் ஆபிரிகாவுக்குக் கப்பலேறிப் போனார். அவர் தென்னாபிரிகாவில் செய்த பிரயாணமானது தொடர்ச்சியாய் அவரடைந்த ஒரு வெற்றியாகும். அவர் ஒவ்வோர் இடத்திலும் அவ்வவ்விடத்து நகராதிகாரி (மேயர்) யால் வரவேற்கப்பட்டார்; இந்திய ஜன சமூகத்தார் வரவேற்புப பத்திரம் படித்துக் கொடுத்தார்கள். இம்மரியாதைகள் இப்படியிருக்க, அவர் விடாமுயற்சியுடன் காரியங்களின் உண்மையான நிலைமையைத் தாமே பார்த்து, மந்திரிகளின் ஆலோசனைச் சபையாரையும் முக்கியமாய் ஜெனரல் போதாவையும், மிஸ்டர் ஸ்மட்ஸ் என்பவரையும் சந்தித்துப பேசவேண்டியவராய் இருந்தார். இந்திய துரைத்தனத்தாரும் குடியேற்ற நாட்டு

ஆபீசும் (Colonial Office) கோகலே இந்த விவகாரத்தை நன்றாய் உணர்ந்துகொள்வதற்காக அவருக்கு எல்லாசௌகரியங்களையும் செய்யவேண்டும் என்று கட்டளை பிறப்பித்து அவர்போன காரியத்தை ஆதரித்தார்கள் என்று சொல்வது சரியே. தென்னாபிரிகாவிலுள்ள ஜனங்கள் கோகலேயைப் பார்த்துப் பிரமைகொண்டார்கள். தொப்பிக்குப் பதிலாய் தலைப்பாகை தரித்திருந்தாரே யன்றி, அவர் தங்களுக்குள் அறிவிற் சிறந்தவர்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவரல்லர் என்றும், அவரைப்போன்ற ஒருவரைப் பிறப்பித்த தேசத்தின் குடிகளைத் தங்கள் அடிமைகளைப்போல நடத்தினது பிசகல்லவா என்றும் அத்தேசத்தார் இயற்கையாகவே எண்ணலானார்கள். இந்தியர்களைக் கிரமமாய் நடத்துவதாக அதிகாரிகள் கோகலேக்கு வாக்களித்தார்கள். கஷ்டப்பட்டு மத்தியஸ்தம் செய்யவேண்டிய விவகாரங்களையும் சாதுரியமாகவும் சாமர்த்தியமாகவும் கோகலே நடத்தக்கூடும் என்பதை அவர் அததேசத்துக்குப் போயிருந்தது காட்டுகிறது. கணக்கற்ற நல்வரவுகூறிப் புகழும் பத்திரிகைகளையும் சம்புடங்களையும் அவருக்களித்துத் தென்னாபிரிகா இந்தியர்கள் அவரிடம் தாங்கள்கொண்ட மதிப்பைக் காட்டிக்கொண்டார்கள். கோகலே, தம்முடைய தேசத்தார் தமது ஊழியத்தை ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாக அவற்றைப் பாவித்து விசேஷித்த திருப்தியடைந்தார். தென்னாபிரிகாவிலிருந்து அவர் திரும்பிவந்ததற்குப் பின் அவருக்குச் செய்த வாக்குத்தத்தங்கள் எப்படிப்பட்டவை என்பதைப்பற்றி ஒருசிறிய வழக்குக்கிளம்பிற்று. மறுபடியும் கஷ்டம் விளைவதாகத் தோன்றிற்று. ஆயினும் லார்ட் ஹார்டிஞ்சு உரியகாலத்திற் செய்த ஒரு பிரசங்கத்தாலும், இந்திய அரசாங்கத்தார் ஸர். பெஞ்சமின் ராபேர்ட்ஸன்

6

என்பவரைச் சேர்த்து இதை விசாரிப்பதற்கு ஒரு கமிஷன் நியமித்ததினாலும் அக்கஷ்டம் ஒழிந்தது. தென்னாபிரிகா துரைத்தனத்தார் செய்த சில பரிகாரசட்டங்களால் அங்கே இந்தியர்கள் பட்டு அலறும் கொடுமைகளைப்பற்றிய விவகாரம் முடிந்து விட்டது. ஆயினும் இவ்விவகாரம முற்றிலும் ஒழிந்து போய் விட்டதென்பது இதன் கருத்தன்று. இராஜீய சுதந்தரக் குறைவுகள் இன்னும் அப்படியே இருக்கின்றன. இவ்விவகாரம் மறுபடியும் தலை யெடுக்கலாம. இதன் சம்பந்தமாய் கோகலே செய்த வேலையைத் தாழ்த்தி இழித்தும் பேசுவது வழக்கமாய் இருந்தது. பம்பாயில் சில இடங்களில் இது முக்கியம். நீடித்து நிற்காத சுதந்தரக் குறைவுகளை நிவர்த்திக்கும் அற்ப காரியத்துக்காக பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தில் பூரண சமத்துவம் பெறுவதற்கு இந்தியர்க்குரிய சுதந்தரத்தை அவர் விட்டு விட்டார் என்று சிலர் வாதாடுகிறார்கள். ஆயினும் முதலில், பல வருஷங்களாக வீட்டுக்கூரைமேலிருந்து அவர் பிரசித்தஞ் செய்து கொண்டிருந்த முடிவான இலட்சியத்தை அவர் விட்டு விடவே இல்லை. மேலும் ஒவ்வொருவருக்கும் அடுத்திருக்கிற சுதந்தரக் குறைவுகளைப் பற்றின விவகாரம் வேறு; இராஜாங்க சுதந்தரங்கள் இல்லையென்கிற விவகாரம் வேறு.

ஆயினும் இவற்றில் முதல் விஷயத்தில் கஷ்ட நஷ்டங்களைப் பொருத்துக்கொண்டு சண்டைசெய்யாமல் எதிர்ப்பதும் கொடுமைமிகுந்த சில சந்தர்ப்பங்களில் சண்டைசெய்து எதிர்ப்பதும் நியாயமாகும்; இரண்டாவதான விஷயமோ நியாய வழிகளாலேயே குழப்ப முண்டாக்குவதற்குத் தகுந்த காரியமாய் இருக்கிறது. உலகத்தில் விருத்தியடைவதற்குப் பல தருணங்களை யுடையவர்களாய் அமைதியாகவும் க்ஷேமமாகவும் முற்றிலும் சுகமாக பம்பாயில் வாழும் இந்

தியர்கள், ஏகாதிபத்தியத்தின் எல்லாப் பாகங்களிலும் இந்தியர்களுக்குச் சமமான உரிமைகள் வேண்டுமென்று ஏகாதிபத்திய முழுவதிலும் பரவும் ஒரு பிரயத்தினம் செய்கிறவரையில் தென்னுபிரிகாவில் விவாகஞ்செய்துகொண்ட தங்கள் மனைவிகள் சட்டப்படி வைப்பாட்டிகள் என்று சொல்லப்படும் அபாயத்தோடு ஜெயிலில் இருக்கும் ஏழை இந்தியர்களை இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்படிச் சொல்வது இரக்கமற்ற கொடுஞ்செயலே ஆகும். இவ்வியாதி சடுதியானது; பிடிவாதமுள்ளது. அச்சமயத்தில் வேண்டுவது உபசாந்தமே. பூரண சொஸ்தம் செய்யும் வழிகளை நீங்கள் யோசித்துக் கொண்டிருக்கையில் வியாதியஸ்தன் வலியினுல் இறந்துபோய் விட்டால் நன்மை என்ன? இவ்விஷயத்தில் கோகலே கொண்ட நோக்கமானது ஓர் உண்மையான இராஜதந்திரிக்கு உரியது. பிரமாதமாய்க் குற்றங்காணப்புகும் சிலரைத்தவிர மற்றவர்கள் எல்லோரும் அவர் நோக்கத்தை மனப்பூர்வமாய் இப்படிப்பட்டதாகவே ஏற்றுக்கொண்டார்கள். பாங்கிப்பூர் காங்கிரஸில் இவ்விவகாரம விவாதத்துக்கு வந்து, கோகலே விசேஷமான ஒரு பிரசங்கம் செய்தபிறபாடு அவர் செய்த வேலையைத் தாழ்த்திப் பேசுவதால் அவர்க்குப் பிழைசெய்ததை, அவரைக் குறைகூறினவர்களிற் சிலராயினும் மனப்பூர்த்தியாய் ஏற்றுக்கொண்டு, அவர்செய்த வேலையை அக்காங்கிரஸ் அங்கீகாரம் பண்ணி, உற்சாகத்துடன் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது என்று சொல்வது நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. தமது நாட்டின் உத்தியோகஸ்தனல்லாத பிரதிநிதியாய் வேலைசெய்யும் அதிர்ஷ்டம் வெகு சிலர்க்கே வாய்க்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் கோகலே மேன்மையாக நடந்துகொண்டது அவருக்கு மேலான பெருமையாகும்.

PUBLIC SERVICE COMMISSION.

பொது உத்தியோக ஆராய்ச்சி சபை.

அவர் தென்னுபிரிகாவில் இருந்தபொழுது இந்தியாவில் பொது உத்தியோகங்களைக் குறித்த விவகாரத்தை ஆலோசிக்கும் பொருட்டும், தங்கள் தேசத்திலேயே பொறுப்பும் நம்பிக்கையுமுள்ள ஸ்தானங்களை வகிப்பதற்கு இந்தியர்களுக்கு இன்னும் எவ்வளவுதூரம் சமயங்கள் கொடுக்கலாம் என்று பார்க்கும்பொருட்டும் பிரிடிஷ் அரசாங்கத்தார் ஒரு கமிஷன் (ஆராய்ச்சி சபை) நியமிப்பதற்குத் தீர்மானித்தார்கள். இக்கூட்டத்தில், எல்லாப் பட்சங்களையும் எடுத்துப் பேசவேண்டுபவர்கள் இருக்கிறார்களாயினும் இந்தியாவின்பாகம் சொற்பமாகவே இருக்கிறது. 1913-ம வருஷ ஆரம்பத்தில் சென்னையில் அது சாட்சியங் கேட்கத் தொடங்கி, இராச்சிய விவகார சேவையையும் மாகாண சேவையையும் (Civil and Provincial Services) பற்றின விவகாரத்தை ஆலோசித்த பிற்பாடு, கோடைகாலத்தில் இங்கிலந்திற்குத் திரும்பிப் போயிற்று. அதனிடத்தில் உத்தியோகஸ்தர்கள் கொடுத்த சாட்சியமானது இந்தியர்கள் தகுதியற்றவர்கள் என்னும் ஒரே முறைப்பாடாயிருக்கும் என்று ஆரம்பத்தில் தோன்றிற்று. அக்காலத்தில் தாம்பட்ட மனப்பிரயாசையைப் போல எக்காலத்தும் அடைந்ததில்லை என்று கோகலே எங்களுடன் சொன்னார். ஆறுமணி நேரம் அவர்கள் பகிரங்கமாய் சாட்சியங் கேட்கவேண்டும்; வீட்டில் முன்பே கொடுத்திருந்த எழுத்து வாக்குமூலங்களைப் படித்து அவை சம்பந்தமான சாட்சியைப் பகிரங்கமாய் விசாரிப்பதற்குத் தயாராய் இருக்கவேண்டும். இந்திய உத்தியோக விவகாரத்தை வெகு விரிவாய்

கோகலே வெகுநாளாகக் கற்றுணர்ந்திருந்தார். அவர் தமது குறுக்குக் கேள்விகளால் சாட்சிகளிடமிருந்து அவர்கள் ஒப்புக் கொள்ளும்படி அனேக விஷயங்களைக் கிரகித்து விடு வார். அவர் செப்டம்பர் மாதத்தில் இந்தியாவிற்குத் திரும்பி வந்து, மற்ற உத்தியோகங்களைக்குறித்துச் சாட்சி யம் வாங்குவதற்காக அக்கமிஷன் திரும்பி வநதபின் மீளவும் அதிற் சேர்ந்து கொண்டார். அக்கமிஷன் கடைசியாக 1914-ம் வருஷத்தில் ஏப்ரல் மாதத்தில் இங்கிலந்திற்குத் திரும்பிப்போய்க் கடந்த வருஷத்துக் கோடை காலத்தில் தனது முடிவான அறிக்கை (ரிபோர்ட்) யை ஆலோசித்துக் கொண்டிருந்தது. கோகலேயின் தேக சுகம் வெகு விரை வாகச் சீர்கெட்டு வந்தது. மாரிகாலத்தை இந்தியாவில் கழிக்கும்படி அவரைச் செய்வதற்காக அவருடன் உழைத்த வர்கள் தமது ஆராய்ச்சியைத் தள்ளிவைததார்கள். கடைசி அறிக்கையைச் சித்தப்படுத்துவதற்கு உதவி செய்யுமாறு அவர் இவ்வருஷத்தில் சுமார் ஏப்ரல் மாதத்தில் திரும்பிப் போக எண்ணியிருநதார். ஆயினும் அது அப்படி நடக்க வில்லை. அவருடைய கடைசி விசாரங்களில் ஒன்றாவது இவ் வேலையை அவர் முடிக்கக் கூடாமற் போனதேயாம். அவர் இதிலிருந்து தமது தேசத்துக்கு எவ்வளவோ நன்மை யை எதிர்பார்த்திருந்தார். அவருடைய ஊக்க நோக்கம் நிலைதரித்து, அக்கமிஷனர்களுடைய ஆலோசனைகளுக் குத் தலைமைவகித்து, அவருடைய தேசவாசிகளின் கோரி க்கைகளுக்கு இணங்கத் தாராளமாய் நடந்துகொள்ளும்படி அவர்களைத் தூண்டும் என்று நாம் நம்புவோமாக.

SERVANTS OF INDIA SOCIETY.

இந்திய ஊழியர் சங்கம்.

கோகலே தம்முடைய வாழ்வில் கடைசிப் பத்து வருஷங்களாக தக்காணத்துக் கல்விச்சங்கத்தைவிட்டுப் பிரிந்த பிற்பாடு, அச்சங்கத்தின் நெறியை அநுசரித்து ஒரு சங்கம் ஏற்பாடு செய்துகொண்டு இருந்தார்; ஆயினும், அச்சங்கத்தின் வேலையாவது: எல்லாவிதத்திலும், அதாவது இராச்சிய சம்பந்தமான காரியங்களிலும், கைத்தொழில் சம்பந்தமான காரியங்களிலும், ஜனசமூக சம்பந்தமான காரியங்களிலும், கல்வியிலும் முன்னேற்றம் அடைவதாகும். 1905-ம் வருஷத்தில் இந்திய ஊழியர் சங்கம் நிஜமாக ஸ்தாபிக்கப் படுவதற்குமுன் வெகுகாலமாக இக்கருத்து அவர் மனதில் குடிகொண்டிருந்ததாகத் தெரிகிறது 1897-ம் வருஷத்தில் இங்கிலந்தில் இக்கருத்தை அவர் என்னிடம் வெளியிட்டார். அவர் 'ஜேஸுட்ஸ்' என்னும் ஒருசாராரான கிறிஸ்தவர்களைப் பார்த்துக் கொஞ்சம் அநுசரித்ததாகத் தெரிகிறது. அவர்களுக்குக் கிறிஸ்துவின் சங்கம் இருப்பது போல, தமது தேசத்தை மாத்திரம் கருதி யுழைக்கும் ஒரு கூட்டத்தாரை உண்டாக்க விரும்பினார். கலாசாலைவேலை ஒழிந்தபின் அவர் இதைக் குறித்து அக்கரையுடன் சிந்திக்கத் தொடங்கினார். 1905-ம் வருஷத்தில் ஜுன் மீ 20-ம் உ யில், கோகலேயின் பெரிய நண்பராயும், அவருடன் சர்வஜன சபையின் காரியதரிசியாயுமிருந்த சிவராம் ஹரி சாடே என்பவரால் அச்சங்கத்தின் கட்டடங்களுக்கு அஸ்திவாரக்கல் இடப்பட்டது. எதிர்காலத்தில் இந்தியாவிற்கு அதிகநன்மை செய்யக் கூடியவற்றுள் இச்சங்கமும் ஒன்று. இத்தேசத்தின் எல்லாப் பக்க

ங்களிருந்தும் ஜனங்கள் இதன் வேலையை வெகு ஆவலுடன் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இச்சங்கம் ஒருவாறு ஏகாதிபதிக்குக் கீழ்ப்பட்ட (Autocratic) அமைப்பை உடையது. அதற்கு கோகலே முதல் மெம்பராக இருந்தார். மற்றவர்கள் எல்லோரும் தடையில்லாமல் அவரது அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள். அவருக்குப்பின்பு மெம்பர்கள் மூன்றுபேர் சேர்ந்த ஒரு கூட்டத்தைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். அதில் பழைய முதல் மெம்பருக்குப் பதிலாய் ஒரு தலைவரும் ஒரு காரியதரிசியும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மெம்பர்களைச் சேர்த்துக் கொள்வது முதல் மெம்பரையும் ஆலோசனை சபையையும சேர்ந்தது. சங்கத்தில் சேர்ந்து கொள்ள விருமபுவோர் நல்ல படிப்புள்ளவர்களாய் இருத்தல் வேண்டும. எல்லாவற்றிலும் முக்கியமாய் அவர்கள ஊக்கமுள்ளவர்களாகவும், நல்லொழுக்க முள்ளவர்களாகவும், உற்சாகம் நிறைந்தவர்களாகவும் இருத்தல்வேண்டும். சாதாரணமாக ஒரு மெம்பர் ஐந்து வருஷம் பயிற்சிபெறுவார். முதல் இரண்டு மூன்று வருஷங்களில் அம்மெம்பர் சரித்திரம், அர்த்த சாஸ்திரம், ஜனசங்கசாஸ்திரம் (Socialogy), உட்பட அவர் செய்யப்போகும் வேலைக்கு விசேஷ சம்பந்தமுள்ள வேறு பாடங்களையும ஒழுங்காகப் படித்து வரல் வேண்டும். ஏனெனில்; எத்தனை விதமான தொழில்கள் இருக்கின்றனவோ அத்தனை விதமான கல்வித் துறைகளும் இருக்கின்றன. பிறகு அவர் பல முக்கிய ஸ்தலங்களில் ஏதாயினும் ஒன்றிற்குப் போய் அங்கே செய்யும் வேலையை உள்ளபடி பார்க்கும் பொருட்டு அனுப்பப்படுவார். சில சமயங்களில் இவ்வைந்து வருஷக்கால எல்லை குறைக்கப்படும்; அது முடிவதற்கு முன்பே ஒருவர் முழு மெம்பர் ஆகலாம். பயிற்சியடையுங் காலத்தில் அவருக்கு

மாதம் ஒன்றுக்கு 30 ரூபாவும் பிறகு 50 ரூபாவும் செலவுக்காகக் கொடுக்கப்படும். மெம்பர்கள் தனியாக ஒன்றும் சம்பாதித்தல் கூடாது. அவர்கள் தங்கள் வேலையைச் செய்யும் போதாவது, முதல் மெம்பருடைய அனுமதியின் மேலாவது ஏதாயினும் சம்பாதித்தால், அது இச்சங்கத்தின் பணப்பெட்டிக்குப் போகும். ஒரு மெம்பர் கொஞ்சம் கொஞ்சம் பணம் செலுத்திப் பிற்காலத்துக்கு ஆதரவாகப் பண உதவி பெறும்படி ஏற்பாடு (Life Assurance Policy) செய்யப்பட்டிருக்கிறது. படிப்பதற்குக் குழந்தைகள் உள்ள மெம்பர்களுக்கு வேறுசில பண உதவிகளும் செய்வதுண்டு. இப்பொழுது இச்சங்கத்திற்கு ஐந்து மத்தியஸ்தானங்கள் உண்டு. அவை யாவன: பூனாவிலுள்ள தலைமைஸ்தானமும், பம்பாயிலும், மத்தியமாகாணங்களிலும், ஐக்கியமாகாணங்களிலும், சென்னையிலுமுள்ள கிளைகளுமாகும். மெம்பர்களிற் பெரும்பாலார் ஒன்றுகூடி ஏறக்குறைய மூன்று மாதம் பூனாவில் வசிப்பார்கள். பூனாவிலுள்ள தலைமைஸ்தானத்தில் மெம்பர்களுக்கு நல்ல விடுதிகளும், முதல் மெம்பருக்கு ஒருவீடும், வேறு பல சிறு கட்டடங்களும் இருக்கின்றன. அதன் விசேஷமாவது இராஜாங்க காரியங்களுக்கு உபயோகமான ஒரு நல்ல புத்தகசாலை இருப்பதே. அதில் பல விஷயங்களைக் குறித்த புத்தகங்களும், முதலிலிருந்தே அரசாங்கத்தார் வெளியிட்ட வெகு பிரயோசனமான அறிக்கைகளும், இந்தியாவைப் பற்றிய மற்ற உத்தியோகப் பிரசுரங்களும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. இச்சங்கத்தின் பண விஷயங்களைக்குறித்து ஒன்றும் தெரியக்கூடவில்லை. பலரிடமிருந்து கோகலே கொஞ்சம் பணம் சேகரித்ததாய்த் தெரிகிறது. பல நண்பர்கள் ஒவ்வொரு வருஷமும் பெருந்தொகைகள் உதவுகிறார்கள். இவ்விதக் கணக்குகளையும் வெளி

யிடுவதில்லை. கோகலேயும் அவருடைய துணைவர்களும் சரியான வழியில் செலவு செய்வார்கள் என்னும் நம்பிக்கையின் மேலேயே பணம் கொடுக்கப்படுகிறது. இச்சங்கம் விடாமல் வேலைசெய்வதன் பொருட்டுப் பணம் சேகரிப்பது அதன் மெம்பர்களுடைய வேலைகளில் ஒன்றாகும். இச்சங்கத்திற்கு உதவிபுரிவதற்கான ஒரு நிதியே கோகலேக்குப் பெரிதும் தகுதியான ஞாபகசின்னமாகும என்னும் உணர்ச்சி வெகுதூரம் பரவியிருக்கிறது. இப்பொழுது இச்சங்கத்தில் சுமார் இருபது மெம்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் செய்யும் பரோபகாரமானவேலை இப்பொழுதே ஜாஸ்தியாயிருக்கிறது. ஒரு வருஷம் சில மெம்பர்கள் பஞ்சநிவர்த்திசெய்வதில் உதவிபுரிவதற்காக ஐக்கியமாகாணங்களுக்குப்போனார்கள். மற்றொருவருஷம இப்படிப்பட்ட காரியத்துக்காக ஆமதநகரத்துக்கும் அடுத்துள்ள ஜில்லாக்களுக்கும் போய் வந்தார்கள். ஐக்கிய நாணயசங்கங்களை ஏற்படுத்துவது அனேக மெம்பர்கள செய்துகொண்டுவரும் மற்றொரு முக்கியமான வேலையாகும. பமபாயில் தாழ்நத வகுப்பாருக்குள் கடனை மீட்கும்பொருட்டு, வெகு நன்மை செய்யக் கூடியதாய்த்தெரிகிற ஒரு பிரயத்தனமும் தொடங்கப்பட்டிருக்கிறது. கொஞ்சநாட்களுக்கு முன்புதான் சில மெம்பர்கள ஹரித்துவாரத்தில் உதவிவேண்டும் யாத்திரிகர்களுக்குத் துணைபுரியுமபடி கும்பமேளகாலத்தில் அவ்விடத்திற்குப் போயிருந்தார்கள். ஜனசமூகத்தின் க்ஷேமத்தையும் குடிவாழ்க்கையின் க்ஷேமத்தையும் கருதிச்செய்யும் இவ்வேலையெல்லாம் உத்தியோகஸ்தர்களுடைய முழுக்கூட்டுறவுடனேயே செய்யப்படுகிறது. அவர்கள் செய்யும் வேலையின் மற்றொருபாகம் முற்றிலும் இராஜாங்க சம்பந்தமானது. இச்சங்கத்தின் ஆதரவில் ஒன்றிரண்டு சமாசா

ரப்பத்திரிகைகள் நடைபெறுகின்றன. ஒரு மெம்பர் சென்னைச் சட்ட நிரூபண சபையில் மெம்பராயிருக்கிறார். அவர் 1908, 1914-ம் வருஷத்துக் காங்கிரஸ்களை நடத்துவதில் பெரிதும் உதவிபுரிந்தார் எல்லாவழிகளிலும் இத்தேசத்தின் முன்னேற்றத்தை விருத்திசெய்யும் விஷயத்தில் இச்சங்கத்தின் நோக்கம் படிப்படியாய் நிறைவேற்றப்படுகிறது. மேலும் சுயநலத்தைமறுத்துத் தங்களது நாட்டின் நன்மையைக் கருதினவர்களாயிருக்கும் மனிதர்களைவேண்டி, திடீரென்று உண்டாகும் எந்தவேலையிலும் சேர்ந்து உழைக்கச் சித்தமாயிருக்கிற ஒரு கூட்டத்தாரை இச்சங்கம் உண்டாக்கும். மெம்பர்கள் இனிமேல சங்கஸ்தாபகருடைய முன்மாதிரியைத் தளராமல் ஞாபகத்தில் வைத்து, அவர் குறித்துவைத்தபடி அமைதியான வழிகளையும எல்லாத்துறைகளிலும் செய்திருந்த திருத்தங்களையும் பின்பற்றுவார்கள் ; தங்களுக்குள் உண்டாகும் எவ்வித அற்ப கலகமாவது, அபிப்பிராய பேதமாவது தேசத்தைச் சீர்ப்படுத்துதற்குரியதென்று எதிர்பார்க்கும் இச்சங்கத்தைக் கெடுத்துவிட விடமாட்டார்கள் என்பதே நம்முடைய விருப்பமும் நம்பிக்கையும் ஆம். ஆரம்பத்தில் பெரிய நன்மை செய்வதாகத் தோன்றுகிற இந்தியர்களுடைய பிரயத்தனங்களில் அனேகம் இப்பாறையின் மேலேயே மோதியுடைந்து முழ்கிப்போயின ; ஆகையால் இது விசேஷமாய வேண்டப்படுவதான ஒரு எச்சரிக்கையாகும்.

RANADE ECONOMIC INSTITUTE.

ரானடே பொருளாதார சங்கம்.

பெர்குஸன் கலாசாலைக்கும், இந்திய ஊழியர் சங்கத்திற்கும் பக்கத்தில் ரானடே பொருளாதார சங்கம் என்னும் மற்றொரு ஸ்தாபனம் இருக்கிறது. கோகலேயின் பெயர் இதனோடும் சமமாகவே சம்பந்தப்பட்டிருக்கிறது. 1901-ம் வருஷத்தில் ஸ்ரீமான். ரானடே இறந்தபின் அவருடைய பெயரை ஞாபகமூட்டும்படி இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் பல பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. பம்பாய் ஒரு சிலைசெய்து நிறுத்திற்று. மதராஸ் அவருடைய ஞாபகார்த்தமாய் ஒரு புத்தகசாலைக்காக மண்டபம் ஒன்று கட்டிற்று. அதை ரானடேயின் பெரிய சிஷ்யரான கோகலே திறந்துவைத்து, அவர் செய்த வேலையைப்பற்றி அப்பொழுது ஒரு பெரிய பிரசங்கம் செய்தார். ரானடே உண்மையாகப் பூனாவைச் சேர்ந்தவர். அங்கே அவர் வெகு காலம் வசித்தார். அவ்விடத்தில் ஒரு ஞாபகசின்னம் ஏற்படுத்துங் காரியத்தைக் கோகலேயே மேற்கொண்டு, ரானடேயின் பெயரால் ஒரு சங்கம் ஏற்படுத்துவதற்கு வெகு சுறுசுறுப்பாய்ப் பணம் சேர்க்கத் தொடங்கினார். அவர் சுமார் இலட்சம் ரூபா சேகரித்து இச்சங்கத்துக்கு முனிசிபாலிடிகளிடமிருந்தும், அரசாங்கத்தாரிடமிருந்தும உதவி பெறலாமென நம்பியிருநதார். அசசங்கத்தின் உட்கருத்துகள் இரண்டுவகை. முதலாவது, முதற்றரமான கிரந்தங்களையுடைய ஒரு புத்தக சாலையையும், இந்திய செல்வநூலைப் பற்றின இக்காலத்துக்கிரந்தங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, இந்திய பொருளாதார சம்பந்தமான கடின விஷயங்களை ஆராய்வதற்காக ஒரு மத்தியஸ்தானத்தை

உண்டாக்குவது ; இரண்டாவது, கைத்தொழில்களை அதிகமாக ஆரம்பிக்குமுன் அவசியமாயிருக்கிற ஆரம்ப சாஸ்திர ஆராய்ச்சி(Preliminary Scientific Research)வேலை செய்வதற்கு ஒரு இரசாயன ஆராய்ச்சி சாலை வைப்பது. அங்கே இவ்விரண்டு துறைகளிலும் ஏதோ சிறிது வேலைநடந்து வருகிறது. ஆயினும் தம்மிடமிருந்த பணத்தை உத்தேசித்து, அவர் இவ்விரண்டு கருத்துக்களில் முதலானதைமாத்திரம் தொடங்கியிருப்பாராயின், அது நலமாயிருக்கும். கோகலே சாஸ்திரவல்லவர் (Scientist) அல்லர். ஆகையினால் ஒரு ஆராய்ச்சிச் சாலைக்கு எவ்வளவோ திரவியமும் வேறு சாதனங்களும் வேண்டுமென்பதை அவர் அறிந்து கொள்ளவில்லை போலும். வெகு அற்பமான கருவிகளைக்கொண்டே அனேக முக்கியமான விஷயங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாய் சாஸ்திரத்தின் சரித்திரம் நமக்குச் சொல்லுகிறது வாஸ்தவந்தான். ஆயினும் அப்படிப்பட்ட சமயங்களில் குறை நிறப்புவதற்குத் தீவிரபுத்தி (Genius) பின்னால் இருந்தது. மனுஷ இயற்கைப்படி பேசுமிடத்து, ஒருவர் முன்பாகவே வேண்டுமான முக்கிய கருவிகளையெல்லாம் உதவினாலும், தீவிர புத்தி என்பது நல்லதிர்ஷ்டமாக வாய்ப்பதொன்றல்லது வேறன்று. அசாதாரண மதிநுட்பமுடைய ஒருவரை அடையப் பெறாமலே இப்படிப்பட்ட சங்கத்தை ஒரு நூறு வருஷம் நடத்தலாம். ஆயினும் அவசியமான எல்லாக் கருவிகளையும் உதவினால் நடுத்தரமான திறமையுடையவர்கள் கூடப் பெரும் பிரயத்தனத்துக்கு ஆரம்பமாக ஏதேனும் ஒருவித கஷ்டமான வேலை செய்யலாம். ஆகையினால் இச்சங்கம் செய்ய வேண்டுவதாக முன்பே குறித்து வைத்த வேலைகளானவை அளவுக்கு மீறின பேராசையுடன் கூடியவை என்பது ஒருக்கால் உண்மையே. ஆயினும் சிறந்த

நன்மை யுண்டாகும் என்று நாம் எதிர்பார்ப்போமாக. முடிவில் எல்லாம் நன்மையாகவே முடியும் என்னும் கோகலேயின் கொள்கை சரியான தென்றும், அவர் தமது குருவின் ஞாபகத்துக்காக அவ்வளவு விருப்பத்துடன் ஸ்தாபித்த இச்சங்கமானது குடிவாழ்க்கை சம்பந்தமாகவும், தொழிற்றுறையிலும் நமது தேசத்திற்குப் பிரயோசனமுள்ள வேலை எதாவது சீக்கிரம் செய்யுமென்றும நாம நம்புவோமாக. இச்சங்கம 1910-ம் வருஷத்தில் பம்பாய் கவர்னரால் திறக்கப்பட்டது. இப்பொழுது அதில் சாஸ்திரபட்டம் பெற்ற ஒன்றிரண்டு பேர் இருக்கிறார்கள். அவர்கள் கைத்தொழிலாராய்ச்சியில், அதாவது, பசை (Cement) கொடுக்கக்கூடிய பொருள்களின் இரசாயன அமைப்பையாவது தோல் பதனிடுவதற்காக சில மரப்பட்டைகளிலிருந்து எடுக்கும் துவரின் சில சாரங்களையாவது ஆராய்தல்போன்ற சில தலைமையான வேலைகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். இசசங்கததின் சாஸ்திர சம்பந்தமான காரியங்களுக்குத் தலைவர் பேர்குஸன் கலாசாலையைச் சேர்ந்த பண்டிதர் கனிட்கார் என்பவர். பூனைக் கலாசாலைகளில் சிலவற்றிலுள்ள வேறு சாஸ்திர நிபுணர்கள் அவருக்கு உதவி புரிகிறார்கள்.

CONGRESS COMPROMISE

காங்கிரஸ் சமாதானம்.

கோகலே சிரத்தை யெடுத்துக்கொண்ட கடைசி விவாதமாவது காங்கிரஸ் சமாதானம் என்று சொல்லப்படும் வழக்கே. இதனாலுண்டான கவலையே அவர் மரணத்தைத் துரிதப்படுத்திற்று. 1907-ம் வருஷத்தில்

சூரத் பட்டணத்தில் நடந்த சமபவத்திற்குப் பிற்பாடு காங்கிரஸ் பிரதிநிதிகளிற் பெரும்பாலார் ஒரு சபைகூடி ஒழுங்கான காங்கிரஸ் விதிகளை ஏற்படுத்தினார்கள். அவற்றின் பிரகாரமே அதுமுதல் காங்கிரஸ் கூட்டங்கள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. பிரிடிஷ் ஆளுகையின் கீழ், குடியேற்ற நாட்டுக்குரிய சுவராஜ்யமே இக்காங்கிரஸின் இலட்சியம் என்று சொல்லும் ஒரு கோட்பாட்டுக் கிணங்கி அப்பிரதிநிதிகள் கையெழுத்துச் செய்யவேண்டும். ஒழுங்காய் அமைக்கப்பட்ட சங்கங்களான மாகாண, ஜில்லா, தாலூகா காங்கிரஸ் கமிட்டி (சபை) களாலேயே அப்பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப் படவேண்டுமேயன்றி எவ்விதமான பொது ஜனக்கூட்டமும் அவர்களைத் தெரிந்தெடுத்தல் கூடாது. பொதுஜனக்கூட்டம் சிலசமயத்தில பிரதிநிதியின் டிக்கெட் (பிரயாணச் சீட்டு) விலையைமாத்திரம் கொடுக்கும் தாழ்ந்த நிலையை அடைந்து விடுகிறது. ஒரு பொதுவான சபைக்கு மெம்பராவதற்கு ஒழுங்கான விதிகள் இல்லாமையினால், மெம்பராக விருமபுவோர் எவ்விதத்திலாயினும் பெரும்பாலாருடைய சம்மதத்தைப் பெற்று, அதனால் பிற்பாடு அச்சபை முழுவதையும் கெடுத்து விடுவார்கள் என்று காங்கிரஸின் அபிவிருத்தியைக் கோரினவர்கள் திருஷ்டாந்த மூலமாக அறிந்தமையினால் இப்படிப்பட்ட கண்டிப்பான விதியைக் கட்டாயப் படுத்துவது அவசியமாயிற்று. இந்திய ராஜாங்க விஷயங்களில் அமித வாத பட்சத்தார் (Extremist side) க்கு இவ்விதிகள் வெறுப்பைத் தந்தன என்பது உண்மையே. வேறொரு சங்கத்தின் மூலமாய்த் தங்களுடைய கருத்துகளை செய்கையிற்காட்ட அவர்களுக்குச சக்தியில்லை; ஆயினும் முன்பே இருநத சங்கமாகிய காங்கிரஸைக் கைப்பற்ற விரும்பினார்கள். எல்லோருக்கும் பகிரங்க

மான வழியில் அவர்கள் இச்சபைக்கு வர விரும்பவில்லை; அதாவது முன்பே யிருக்கிற ஒரு காங்கிரஸ் கமிட்டியில் சேருதலையாவது, அக்கமிட்டிகள் இல்லாத மத்தியஸ்தான ங்களில் புதுக்கமிட்டிகளை ஸ்தாபித்துத் தாய்ச்சங்கத்துடன் அவற்றைச்சரியானபடி சேர்த்தலையாவது விரும்பினார்கள் அல்லர். அப்படிச்செய்வது வெகு இழிவானதென்று அவர் கள் எண்ணினார்கள். ஆகையினால் சமாதானஞ் செய்வதற்கு ஏதோ இருப்பது போல, மருட்டுகின்ற இச்சமாதானக் கூச்சலைக் கிளப்பிவிட்டார்கள். அந்தரங்கக் கருத்தைச் செவ் வையாய் அறியாத அனேகர் கொஞ்ச காலம் இக்கூச்சலு க்கு உட்பட்டிருந்தார்கள். 1908-ம் வருஷமுதல் இக்கூச்சல் இடையே யிடையே கேட்டது. ஆயினும் சென்ற வருஷம ஸ்ரீமான். திலகர் ஆறுவருஷம் சிறையிலிருந்து திரும்பிவந்த வுடனே இக்கூச்சல் வெகுபலமாயிற்று. யுத்தத்தைப் பற் றியும் அதன் சம்பந்தமாய் இந்தியர்கள் எப்படி நடந்துகொ ள்ளல் வேண்டும் என்பதைப்பற்றியும் அவர் செய்த ஒரு பிரசங்கத்தால் அவர் தமது நோக்கத்தை மாற்றிவிட்டதாக வும், இராஜாங்க காரியங்களில் மிதவாதிகளோடு சேர்ந்து ழைக்க அவர் நிஜமாக விருப்பங் கொண்டிருந்த தாகவும், பொதுஜன அபிப்பிராயத்தில் சாதாரணமாய் அவர்சம்பந் தப் பட்டிருக்கிற சில அமிதவாதக் கொள்கைகளை அவர் நீக்கி விட்டதாகவும் நாம் பெரிதும் நம்பியிருந்தோம். சென்ற வருஷத்துச் சென்னைக் காங்கிரஸுக்கு முன்பு அன்னி பெஸண்ட் அம்மையாரும் ஸ்ரீமான். சுப்பராவும் இவ்விஷய த்தை அவருடன் கலந்து பேசுவதற்காகப் பூனாவுக்கு வந்தா ர்கள். கொஞ்சகாலம் மறைந்திருக்க அவர் விரும்பினாலும் முக்கியாம்சங்களில் அவர் மாறுதல் அடையவில்லை யென்று அவர்கள் விரைவில் உணர்ந்து கொண்டார்கள் என்று தெரி

கிறது. சமாதானஞ் செய்வதற்குக் கொஞ்சகாலம் விருப்பங்கொண்டிருந்த கோகலேயும் ஸ்ரீமான். திலகருடைய அந்தரங்கக் கருத்து இன்னதென்று மறுபடி முற்றிலும் உணர்ந்து கொண்டார். தமது பட்சத்தில் பெரும் பாலாரைப் பெற்று மிதவாதிகளின் போக்குக்கு மாறுபாடாக, அவர் சொல்லுகிறபடி, தமது போக்கை (செய் முறையை) அநுசரித்துக் காங்கிரஸ் வேலையைச் செய்வதே திலகரின் அந்தரங்கக் கருத்து. சந்தர்ப்பத்துக் கேற்றபடி பலமாக வாயினும் மெதுவாக வாயினும் அரசாங்கத்தாரை இடைவிடாது எதிர்க்கும முறையென்று அவருடைய போக்குகளைச் சுருங்க வரையறுத்துச் சொல்லலாம். அரசாங்கத்தாரோடு சேர்ந்து உழைத்து வேண்டும்போது எதிர்ப்பதே மிதவாதிகளின் போக்கு என்று அறுதியிட்டுச் சொல்லலாம். காங்கிரஸ் கூட்டத்துக்குப் போகக் கூடாதபடி அவ்வளவு நோயாய் இருந்த கோகலே, தமது கருத்துகளை விளக்கித் தனியாக ஒரு குறிப்பு எழுதி அனுப்பினார். ஸ்ரீமான். திலகர் ஏதாயினும் வழக்கில் சம்பந்தப் பட்டிருக்கும்போது செய்யும் வழக்கம் போலவே, இக்கடிதத்தைப் பற்றிச் சம்பந்தமற்ற அனேக கேள்விகளை நுழைவித்து தமது போக்குகளின் முக்கியாமிசத்தைத் தந்திரமாய் நழுவவிட்டு, இவ்விதமாய்த் தமது எதிரிகளின்மேற் குற்றஞ்சுமத்த முயன்றார். எந்தவிவகாரத்திலும் மனச்சாட்சிக்குச் சரியாய் நடக்கிற **கோகலே** அதிக கவலை அடைந்தார். வெகுகாலமாகப் பழுதுற்றுவந்த அவருடைய தேகசுகம் திடீரெனக் கெட்டுப்போய் விட்டது. அவர் சம்பந்தித்த வரையிலும் இச்சமாதானப் பேச்சு பெப்ருவரி மாதம் 19-ம் தேதி இரவு 11 மணியோடு முடிவடைந்து விட்டது.

LAST ILLNESS.

கடைசி வியாதி.

இளம் பிராயத்தில் கோகலே ஒருவாறு நல்ல தேகதிடமுடையவராய் இருந்தார். அந்நாட்களில் க்ரிக்கெட், டென்னிஸ் போன்ற விளையாட்டுகளில் அவர் மிகுந்த விருப்பமும் சுறுசுறுப்பும் உடையவராய் இருந்தார். ஆயினும் அவைகளில் அவர் அதிக சமர்த்தர் ஆகவில்லை. மனத்தால் செய்யும் வேலை எவ்வளவாயினும் அவர் செய்தல்கூடும். சில சமயங்களில் வெகு சொற்பத்தூக்கமே அவருக்குப் போதும். தொடர்ச்சியாய் இராத்திரி முழுதும் விழித்திருந்து காலை நேரத்திற்குள் தமது பத்திரிகையையோ உபந்நியாசத்தையோ சித்தப்படுத்திவிடுவார். தக்காணத்துக் கல்விச் சங்கத்தின் ' சந்தா ' வேலை செய்வதில் அவர் தமது உடம்பிற்கு அதிக சிரமங் கொடுக்கவேண்டுபவரானர். இராஜீயவேலை அதிகரிக்கத் தொடங்கவே, வழக்கமான தேகப் பயிற்சி அடிக்கடி அசட்டை செய்யப்பட்டது. அசட்டை செய்ததின் பயன் விரைவில் வெளியாயிற்று. மேலும் 1897-ம் வருஷத்தில் இங்கிலந்துக்குப் போகும்பொழுது அவருக்கு ஒரு சம்பவம் நேரிட்டது. அதன் பயன் கடைசி வரையிலும் அவருடைய மனத்தில் தங்கியிருந்தது. இக்காலத்துக் கற்ற இந்தியர்களுக்குப் பெரிய உபத்திரவமாயிருக்கிற நீரிழிவு வியாதியால் அவர் வருந்துதலானர். அவர் பல சிகிச்சைகளைச் செய்து பார்த்தாராயினும் அவ்வியாதி முற்றிலும் நீங்கவில்லை. ஒழுங்கான பழக்கவழக்கங்களை அவர் ஒருக்காலும் அடைந்தவரல்லர். அவர் தமது கடிதமாற்றை (Correspondence) க் கடைசி நிமிஷம் வரையிலும் தாமதப்படுத்திப் பின்பு தபாலிற் கடிதம் சேர்ப்பதற்காக மீந்தி

ருக்கும் கொஞ்சநேரத்தில் கஷ்டப்பட்டு எழுதுவார். அவருடைய உறுதியான சித்த சக்தியால் தாம் செய்த வேலையெல்லாம் அவர் சாதிக்கக் கூடியனவே. ஆயினும் அது நீடித்திருப்பதில்லை. மேலும் அவர் அதிக நுண்ணுணர்ச்சியுடையவர். எப்பொழுதும் கொடிய விவாதத்துக்கு இலக்கானவராய்ப் பொது நலத்துக் குழைப்பவரான ஒருவரிடத்தில் இது ஒரு பெரிய குறைவாகும். முற்றிலும் தகுதியற்றவர்கள் என்று தாமே கண்டறிந்தவர்கள்கூட ஏதேனும் பொய்யாகவாவது அநியாயமாகவாவது சொல்லிவிட்டால் அது அவரை அதிக கவலைக்குட்படுத்தும். அற்பகாரியங்களைக் குறித்துக் கவலைப்படுவதை விட்டுவிடும்படி அவருடைய நண்பர்கள் அடிக்கடி புத்தி சொன்னார்கள். ஆயினும் தமது ஜீவியபரியந்தம் இருந்த இக்குணத்தை அவர் நிவர்த்தி செய்துகொள்ள முடியவில்லை. தமது உறுதியான சுபாவத்தினலன்றித் தமதுவேலையைச் சாதித்திருக்க முடியாதென்றும், நம்முடைய பெரிய மனிதர்களை நாம் காணுகிறபடியே நிதானிக்க வேண்டுமேயல்லாது அவர்கள் வேறொரு விதமாய் இருக்கவில்லையே என்று நாம் முறையிடக்கூடாதென்றும் சொல்லலாம். தமது தேகசுகத்தைப் பற்றி இன்னும் அதிக கவலை எடுத்துக் கொள்ளல் வேண்டும் என்பதை அவர் அடிக்கடி திடீரென சிறிது காலம் உணர்ந்திருப்பதுண்டு. சில சமயங்களில் ஒழுங்காய்ப் பலவாரங்களாக அவர் டென்னிஸ் விளையாடுகிற இடத்திலாவது, குன்றுகளின் மேல் நெடுந்தூரம் உலாவிச் சென்றுகொண்டாவது இருக்கக் காணலாம். ஆயினும் இவ்வுணர்ச்சி சீக்கிரம் போய்விடும். அவருடைய சீரிழிவு வியாதி சில சமயங்களில் பலப்படும். ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் அவர் வெகு புத்திக்கூர்மை உள்ளவராய் இருந்ததினால் எந்த சிகி

ச்சையைக் குறித்தாவது அவர் முற்றிலும் திருப்தி யடைந்தாலன்றி அதைச் செய்து கொள்ளமாட்டார். இதன் பொருட்டு அவ்வியாதியைப் பற்றின சாஸ்திரங்களைப் படித்தார். அவருடைய வைத்தியர்களுக்கு அவர் சுலபமான வியாதியஸ்தராகத் தோன்றவில்லை. ஏனெனில்; அவர் சோதிப்பதற்காகப்போடும் குறுக்குக்கேள்வி என்னும் அபாயத்துக்கு அவர்கள் எப்பொழுதும் உட்படவேண்டும். அவர்நித்திரை இன்மையினால் வருந்துவாராயினார். சென்ற வருஷம் இங்கிலந்தில் அவர் வியாதிப்பட்டு வெகு அபாயகரமான ஸ்திதியில் இருநதார். ஆயினும் அன்புள்ள சிநேகிதர்களது உபசாரத்தினால் இந்தியாவுக்குத் திரும்பிப்போய் ராயல் கமிஷ (Royal Commission) னிலாவது தமமுடைய வேலையை முடிக்கக்கூடும என்று எதிர்பார்க்கும்படியாய்ப் போதுமான அளவு அவர் சொஸ்தமடைந்தார். ஆயினும் காங்கிரஸ் சமாதான வழக்கானது தனது முழுத்தொந்தரவுடன் இதற்குப்பின்னால் வந்து சேர்ந்தது. அவரது நெஞ்சு நோய் அதிகரித்து, பெப்ருவரி மாதம் 12-ம்தேதி வெள்ளிக்கிழமை, ஸ்ரீமான். காந்தியைப் பூனாவில் வரவேற்றுப் பிறகு இந்திய ஊழியர் சங்கத்தில் அவருக்கு ஒரு பழ விருந்துசெய்த அன்றே, கோகலேக்கு அபாயமான ஒரு பெருமூர்ச்சை உண்டாயிற்று. அவர் சொஸ்தம் அடைநதாராயினும் அவருடைய வைத்தியர்கள், முன்பு பலமுறைகளில் நடந்தபடி இக்கஷ்டகாலத்திலும் அவர் பிழைத்துக் கொள்வார் என்று நம்பிக்கைக்கு மாறுபாடாய் நம்பியிருந்தாலும் மிகவும் பயந்துபோனார்கள். அவர் செய்துகொண்டிருந்த வேலை வழக்கப்படியே நடந்துகொண்டிருந்தது. புதன்கிழமை இராத்திரி அவர் எழுதிக்கொண்டிருந்த ஒரு முக்கியமான குறிப்பை அதிகசிரமப்பட்டு முடித்தார். வியா

மூக்கிழமை வழக்கம்போலக் கடிதங்களைச் சொல்லி எழுது வித்தார். வெள்ளிக்கிழமை காலையில் மீளவும் கொஞ்சம் வியாதிவந்தடுத்தது. தமக்கு மரணம் அடுத்துக்கொண்ட தென்று அன்று காலையில் அவர் உணர்ந்துகொண்டார். தம் முடைய நண்பர்கள் எல்லாரிடத்திலும், சகோதரிகளிடத் திலும், தமது இரண்டு குமாரத்திகளிடத்திலும் விடை பெற்றுக் கொண்டார். தம்முடைய பத்திரிகைகளையும், வேறு சொந்தக்காரியங்களையும் இன்னின்னபடி செய்ய வேண்டும் என்று சொன்னார். இராத்திரி சுமார் ஒன்பது மணிக்கு, "இவ்வளவுகாலம் நான் இப்பக்கத்து வேடிக்கை யைப் பார்த்துக்கொண்டிருந்தேன். இனி அப்பக்கத்து வே டிக்கையைப்போய்ப் பார்ப்பேனாக" என்று தம்மைச் சூழ்ந் திருப்பவர்களைப் பார்த்துச்சொன்னார். 19-ம் தேதி வெள் ளிக்கிழமை இராத்திரி 11-10 மணிக்கு அவர் சாந்தமாக இறந்துபோனார். தாம் ஸ்தாபித்த சங்கத்தில் அவருடைய கடைசி எண்ணங்கள் பொருந்தியிருக்கும். அச்சங்கத்தை அவர், தகப்பன் தனதுகுழந்தையிடத்துக் கொண்டுள்ள அன்பினும் அதிகமாய்ப் பாராட்டிவந்தார்.

PRIVATE LIFE AND OPINION.

தனிவாழ்க்கையும் கருத்தும்.

பொது ஜனங்களுக்குள்ளும், பொது ஜனங் களுக்காகவும் கோகலே அதிகமாக உயிர் வாழ்ந்ததமையினால் அவருடைய தனிவாழ்க்கையைக் குறி த்து அதிகமாக ஒன்றும் சொல்லமுடியாது அதைப்பற்றி எப்பொழுதும் அவர் மௌனமாய் இருந்தார்; அதைக்குறி

த்து அதிகமாகப் பேசுதல் கூடாதென்று விரும்பினார். அவர் தமக்குப் பின்னால் இரண்டு புத்திரிகளை விட்டுப் போயிருக்கிறார். அவர்களில் மூத்தவர் பெர்குஸன் கலாசாலையில் பி. ஏ. வகுப்பில் மாணாக்கராய் இருக்கிறார். இளையவர் எப்பொழுதும் பலவீனமா யிருக்கின்றமையினால் வீட்டிலேயே இருக்கிறார். மேலும் அவரது சகோதரரும் சகோதரிகளும் பெற்ற அனேக புத்திரர்களையும் புத்திரிகளையும் அவர் விட்டுப் போயிருக்கிறார். அவர்களைப் பாதுகாப்பதில் அவரும் ஒருபொழுதும் தவறினதில்லை. அவர்களுக்குப் பிற்காலத்தில் உதவும்படி ஏதோ கொஞ்சம ஆதரவு வைத்துப்போயிருக்கிறார். அவருடைய நடத்தைகள் (Manners) சில சமயங்களில் கடுமையாய் இருந்ததோடு அந்த க்ஷணத்தில் வெறுப்பைக் கொடுக்கத்தக்கன. அவர் ஏதேனும் ஒரு எண்ணத்தில் ஆழ்ந்திருப்பதும் அவரைப் பார்க்கவருபவர்கள் அதைத் தடுப்பதும இதற்குப் பொதுவான காரணங்கள் ஆகும. முற்றிலும் இனிதான நடத்தையினின்று சில சமயங்களில் வழுவுவதற்காக ஈடுசெய்து கொள்வதற்கு அவர் எப்பொழுதும சித்தமாயிருப்பார். அவர் அவ்வித நடத்தையினால் ஒன்றும எண்ணவில்லை என்பது வெகு வெளிப்படையா யிருந்தமையினால் ஒவ்வொருவரும் அவருடைய தவறுதல்களை விரைவில் மறந்து விடுவார்கள். கொஞ்சநேரம் நிஷ்டூரமா யிருந்ததற்காகத் தமது வேலைக்காரர்களிடத்திலும் தம்மைச் சேர்ந்தவர்களிடத்திலும் சில சமயங்களில் அவர் முறையாக மன்னிப்புக் கேட்டுக்கொள்வதும் உண்டு. தமது தொழிலின் ஆரம்பத்திலிருந்தே அவர் செய்த பரித்தியாகத்தினால் பணவிஷயங்களில் அவர் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுபவரானார். அவர் தமது வருவாய்க்கேற்பக் கொடுப்பதில் தாராளமுள்ளவர். அவர்

தமது நடை உடைகளில் சிக்கனமாய் இருந்தார். ஒவ்வொரு சமயத்தில் இவ்விஷயங்களில் பெரிய மனிதர்கள் போனாற் போகிறதென்று கொள்ளுங் கோலத்தை (Don't care-attitude) அவர் அடையவில்லை. சில சமயங்களில் அவருக்குக் கேவலமுண்டாகும்படிச் செய்கிற பரிகாசங்களையும் அவர் அறிந்து சந்தோஷிப்பார். முன்பே சொன்னபடி, வீட்டில் விளையாடும் எல்லா விதமான விளையாட்டுகளிலும் அவர் பிரியப்பட்டார் எந்த கூட்டுறவுச்சங்க (Socialcircle) த்திலும் அவர் மதிப்புப்பெற வல்லவர்; ஆயினும் அவர் ஜனசங்கத்தின் பாதியைதக்கு அதிக நேரத்தைக் கழிக்க முடியவில்லை. அவர் தமது மத அபிப்பிராயங்களை முழுவதையும் மனத்திலேயே வைத்துக்கொண்டார். அவற்றைக் குறித்து அவர் அடிக்கடி பேசுவது இல்லை. ஆரம்பத்தில் அவர் ஒருவாறு கடவுள் உண்டென்றும் இல்லையென்றும் நம்பாதவராய் இருந்தார். பிற்காலத்தில் கொஞ்சம் மாறுபாடு அடைந்திருப்பார் போலிருக்கிறது. ஆயினும் எந்த மதநியமத்தையும் அவர் பிரமாணமாகக் கொள்ளவில்லை. சில வருஷங்களுக்குமுன் அவர் பிரமஞானக் கொள்கை (Theoshopical position) யை அணுகிவந்து கொண்டிருந்தார். ஆயினும் அவர் பிரமஞான சபையில் கிரமமாகச் சேரவேஇல்லையென்று நான் நம்பும் வண்ணம் கேள்விப்படுகிறேன். அவர் மிக்க ஆத்மார்த்தமான சுபாவமுள்ளவர். அவர் பூஜித்து வந்தது தமது தேசத்தையே. இந்நோக்கத்தாலும் மற்றை நோக்கங்களாலும், ஜபபானியரிடத்திலும் ஜப்பானுக்குச் சேர்ந்தவைகளிடத்திலும் அவர் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். ஜப்பானுக்குப்போய், ஒரு தலைமுறையில் அத்தேசம் எப்படி அவ்வளவு அபிவிருத்தி யடைந்ததென்பதை அங்கேயே நேராகப் பார்ப்பதைக் குறித்து அவர் பலமுறை

சொல்லிக் கொண்டிருந்தார். ஆயினும் அவர் தமது இஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொள்ளும் வரையில் உயிரோடிராதது துர்ப்பாக்கியமே.

GENERAL REMARKS.

பொதுக்குறிப்புகள்.

அவர் இறந்தபொழுது தேசமுழுதும் கொண்ட ஈடுசெய்யமுடியாத நஷ்டஉணர்ச்சியானது இன்னும் நமது ஞாபகத்தில் புதிதாய் இருக்கிறது. உலகத்தார் என்றும் கண்டிராத இந்த மகாயுத்தத்தின் மத்தியில், இத்தேசத்தினது உண்மையான நிலைமையில், நமது தேசத்தின் இராஜீய அபிவிருத்தி என்னும் தோணியைச் சாவதானமாக நடத்துவதில் அவர் மதித்தற்கரிய துணையாய் இருந்திருப்பார். எல்லோருங்கொண்ட துக்கத்தை முன்னிட்டே, நமது அருமையான தேசம் தான் உயிரோடிருப்பதாய் உணர்வதற்கும், தன்னை ஒரே அங்கக்கட்டு (Organism)ப்போல எண்ணுவதற்குச் சக்தியுடையதென்று உணர்வதற்கும் ஆரம்பிக்கிறது என்பதை அவருடைய மரணம் வெளியாக்குகிறது. இந்த விசனங்கள் இப்பொழுது பயனற்றவை. கோகலேயின் ஜீவியத்தையும் வேலையையும் குறித்து, கூடுமாயினும், முடிவான தீர்ப்புச் செய்வதற்கு இது இடமன்று. அவருடைய ஸ்தானத்தை முற்றிலும் பூர்த்தி செய்வதற்காவது, அவர் முடிக்காமல் விட்டவேலையைத் தொடருவதற்காவது இப்பொழுது ஒருவரும் இல்லையென்று சொல்வதே போதும். அவரைக்காட்டிலும் பெரிய பிரசங்கிகளும் (நாவலர்களும்) முற்றிலும் கற்பிப்பதிலேயே

வல்லவர்களும், நிர்மாணஞ் செய்பவர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்செய்த பலவிதமான வேலைகளை யெல்லாம் தம்மில் ஒன்று சேர்த்தவர்கள் பெரும்பாலும் இல்லை. ஸ்ரீமான். ரானடே இறந்துபோன காலத்தில் ஜனங்கள் இப்படியே சொல்லிக்கொண்டார்கள். ஆயினும் அவருடைய முயற்சிகளில் பலவற்றில் கோகலேயானவர் போதுமான அளவுக்கு மீறியே அவருடைய ஸ்தானத்தை வகித்து, ரானடேயும் அடையவில்லையென்று ஜனங்களுக்குத் தோன்றுகிற ஒரு நிலைமையை அடைந்தார். தமது உத்தியோகஸ்தானத்தாலும் பொதுஜன கைங்கரியத்துக்குப் போதுமான அவகாசம் இன்மையாலும் ஸ்ரீமான். ரானடேயின் வேலை ஒருக்கால் தடைப்பட்டிருக்கக்கூடும். ரானடே-கோகலே என்பவர்களைப் போன்று இனிமேல் வரக்கூடிய பொது ஜனோபகாரிகள் இந்தியாவின் இராஜீய அடிவானத்தில் இப்பொழுது தோன்றவில்லை என்பது நிச்சயம். நமது கருத்து தவறுதலாய் இருத்தல்வேண்டும் என்று நாம் பெரிதும் விரும்புகிறோம்.

HONOURS AND TITLES.

கௌரவங்களும் பட்டங்களும்.

கோகலேயின் வாழ்க்கையைப் பொதுவாய் நோக்குமிடத்து இத்தேசம் இப்பொழுது இருக்கும் நிலைமையில் எவ்வளவு சித்தி பெறக்கூடுமோ அவ்வளவு சித்திபெற்ற வாழ்க்கை யென்றே அதைச் சொல்லலாம். இந்தியா சுவராஜ்யமுள்ள தேசமாயிருந்து தனது அரசர்களைத் தெரிந்தெடுக்கும் சுதந்தரம் பெற்றதாய் இருந்தால் என்ன சம்பவித்திருக்கும் என்று யோசிக்கவேண்டுவதே

இல்லை. இப்பொழுதுள்ள நிலைமையை அப்படியே பார்த்தால் அவரால் எவ்வளவு வேலை செய்யக்கூடுமோ ஏறக்குறைய அவ்வளவு வேலையையும் அவர் செய்தார். அன்றியும் அவர் தன்னலமறுத்து விசுவாசத்தோடு செய்த வேலையைப்பற்றித் தேசமுழுதும் தனது மதிப்பைக்காட்டிற்று. வேண்டுமென்றே அவரிடம் குற்றங்காணப்புகும் சிலர் இருப்பின் அவர்களுடைய சொற்கள் சூரியன் மீதுள்ள மாசுகள் போன்றவையே. அவருடைய வேலையைப் பொது ஜனங்கள் ஏற்றுக்கொண்டதனுல் அவருக்குக் களங்கமற்ற திருப்தியுண்டாயிற்று. அன்றியும் இத்தேசத்தின் பொது நல வாழ்க்கையில் அவர் செய்த முக்கியமான வேலையை இந்நாட்டை ஆளுவோரும் மதித்து ஏற்ருர்கள். பொது ஜன கைங்கரியத்துக்கு இடந்தராத கௌரவங்களிலும் பட்டங்களிலும் அவர்க்குப் பிரியம் இல்லை. இராஜப் பிரதிநிதியின் சபையில் அவர் எப்பொழுதும் எதிர்த்துப் பேசிக்கொண்டிருந்த லார்ட் கர்ஸனுடைய அரசாங்கத்தார் இவருக்கு சி. ஐ. இ. என்னும் பட்டம் கொடுத்தல் வேண்டுமென்று மேன்மைதங்கிய சக்கரவர்த்தியவர்களிடம் சிபார்சு செய்தார்கள். லார்ட் கர்ஸன் கோகலேக்கு அனுப்பின ஒரு சொந்தக் கடிதத்தில் எழுதினதாவது. "தங்களுடைய தேசத்தார்க்கு ஊழியஞ் செய்வதில் மனப்பூர்வமாய்ச் செலுத்துகிற தங்களது திறமைகளை மதித்து இக்கௌரவம் தங்களுக்கு அளிக்கப்படுகிறது. அத்திறமைகளை யிவ்வண்ணமே உபயோகிக்கவேண்டும் என்பதை அன்றி அவைகளைப்பற்றி நான் வேறொன்றும் விரும்புவதில்லை. தங்களைப் போன்ற பொது ஜனோபகாரிகள் இன்னும் பலரை இந்தியா பிறப்பித்தல் வேண்டுமென்பதே எனது கோரிக்கை." 1914-ம் வருஷம் ஜுன் மாதத்தில், இராஜப் பிரதிநிதி

இவருக்கு கே. சி ஐ. இ. என்னும் பட்டமளித்தல் வேண்டு மென்று சிபார்சு செய்ததாகவும், மேன்மை தங்கிய சக்கரவர்த்தியவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் திருவுள்ளமு வந்ததாகவும், அக்கௌரவம் இவருக்குச் சம்மதமானதென்றே தாம் நம்புவதாகவும் லார்ட் க்ரூ இவருக்குக் கடிதம் எழுதினர். லார்ட் க்ரூவின் சொந்தகாரியதரிசி (ப்ரைவேட் செக்ரடரி) க்குப்பின் வருமாறு கோகலே எழுதினர். "கே. சி. ஐ. இ. என்னும் உயர்ந்த கௌரவத்துக்கு என்னை சிபார்சு செய்ததற்காக, கனந்தங்கிய இராஜப்பிரதிநிதி அவர்களுக்கும், லார்ட் க்ரூ அவர்களுக்கும் நான் பெரிதும் நன்றியறிதலுள்ளவனுய் இருக்கிறேன் என்று நான் சொல்ல வேண்டுவது அவசியம். அவர்கள் வெகு உதாரகுணத்துடன் காட்டிய இம்மதிப்பை எனது பொது ஜனோபகார வாழ்க்கையில் கிடைக்கும் சிரேஷ்டமான வெகுமதிகளில் ஒன்ருக எப்பொழுதும் நான் போற்றுவேன். இந்த சிபார்சுக்குத தமது சம்மதத்தைக் கிருபையுடன் குறிப்பித்ததற்காகப் பெருமைதங்கிய சக்கரவர்த்தியவர்களுக்கு இராஜபக்யுடன்கூடிய, மனபூர்வமான எனது நன்றியறிதலைத் தாழ்மையாய் வெளியிட நான் துணியலாம் என்றும் நம்புகிறேன். இவ்வுயர்ந்த கௌரவத்தை எனக்களிப்பதற்கு முன் இதை எனக்கறிவித்ததால் லார்ட் க்ரூ அதிக உபகாரம் செய்தவராவர். ஏனெனில், இவ்விஷயத்தில் என்னுடைய எண்ணங்களைச் சுருக்கமாய் அப்பெருமானுக்குமுன் வினயமாய் வெளியிட்டுக் கொள்வதற்கு வாய்ப்பான ஒரு சமயத்தை இது எனக்குக் கொடுத்தது. அந்த எண்ணமாவது என்னுடைய விருப்பத்தைத் திரிபாக உணர்ந்து கொள்ளாத பட்சத்தில், இந்த கௌரவத்தை நான் வெகுவாக மதித்த போதிலும் இப்பொழுது நான் கொண்டிருக்கும் சாதாரண

பெயரோடேயே இருக்கப் பெரிதும் விரும்புவேன். முற்றிலும் அல்லாவிடினும் பெரும்பாலும் சொந்தக் காரணங்களேயே ஆதாரமாகக் கொண்டுள்ள இவ்விருப்பத்தை லார்ட்க்ரூ உணர்ந்துகொள்வார் என்று நான் நம்பலாமா? பெருமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுக்கு நான் சொல்வது எவ்விதத்திலும் தகுதியற்றதாயும், உரிய மரியாதையிலாவது, இராஜ வணக்கத்திலாவது குறைவாயும் இராத பட்சத்தில் சக்கரவர்த்தியவர்களது கிருபா நோக்கத்துக்காக இத்தாழ்மையான வேண்டுகோளை அவருக்குத் தெரிவிக்கத் தயைபுரியும்படி அப்பெருமானை நான் கேட்கலாமா?" இச்சம்பவம் இருபக்கத்தாருக்கும் சமமாகப் பெருமைதரக்கூடியது. நமது நண்பரும் தலைவருமான அவரை ஸா. கோபால கிருஷ்ண கோகலே என்னும் டாம்பீகமான பேரைக் காட்டிலும் ஸ்ரீமான் (மிஸ்டர்) கோபால் ராவ் கோகலே என்கிற சாமானிய பெயராலேயே அறிந்திருக்க நாம் அளவுகடந்த விருப்பங்கொண்டிருந்தோம் என்று சொல்லலாம். அவர் அப்பட்டத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் தாம் மாறுபாடாக அறியப்படுவது மாத்திரமன்றி, ஜனங்களுக்குச் செய்த உபகாரம் அவர்களுடைய அன்பாலும் பூஜியதையாலுமே மதிக்கப்படவேண்டும் என்றும், அவைகள் கிடைத்தபின் பட்டங்கள் வெறும்பெயர்களேயாம் என்றும், அவைகள் இல்லாத பொழுது பட்டங்கள் இன்னும் அதிக கிலேசத்தைத் தரத்தக்கவை என்றும் அவர் எண்ணினது சரியே. கோகலேயின் பொதுவாழ்க்கை முழுவதும ஒரேவிதமான தன்னலமறுப்பால் விசேடித்திருக்கிறது. மற்றசமயங்களிற் போலவே இதிலும் தாம் இன்னபடி நடந்து கொள்ளல்வேண்டும் என்பதை அவர் தீர்மானித்துக்கொண்டார். தேடாமலே வந்த கௌரதையை மறுத்ததால் கோகலே அனுவசிய

மாய் விபரீதம் செய்துவிட்டார் என்று பெரிய பட்டப் பெயர்களைப் பெறுவதற்காகப் பிரமாதம் விளைக்கிற ஜனங் கள் சொல்லலாம். ஆயினும் அவருடைய தேசத்தார்கள் பெரிய பட்டப் பெயர்களைப் பெற்றவர்களுடைய நாமங்களை யெல்லாம் பிற்காலத்தில் மறந்துபோய் வெகுகாலமானபின், தற்கால இந்தியாவைச் செய்தவர்களில் ஒருவராக கோக லேயின் பெயரை நினைத்துக் கொள்வார்கள்.

CONCLUSION.

முடிவு.

கோகலேயின் வேலையில் அவர் நிஜமாகச் சாதித்த காரியத்தைக் காட்டுவதற்கு என்ன இருக்கி றது என்று கேட்பாரும் உளர். முன்போன பக்கங்களே இக்கேள்விக்கு ஒரு சுருக்கமான விடை கூறுவதற்காகச் செய்த முயற்சியாகும். அவர் உண்மையாகச் சாதித்ததின் அளவு சிறிதென்றெண்ணினும் அப்படிப்பட்ட புரு ஷத்துவ (individuality) மே அவருடைய பெருமைக்கு எவ்வளவோ பெரிய அரிய செயலாகும். எப்பொழுதாயி னும் மனவாட்டமுறும் பொழுது அவரே க்லபு (Clough) என்பவரின் வலிய செய்யுளடிகளைக்கொண்டு தமக்கு ஆறு தல் செய்து கொள்வார்!

கடுமுயற்சியு முழைப்புங் காயங்களும்
பயனற்றவையே ; பகைவனும் ஒழியான் :
மூர்ச்சியான் : பலவு முன்போலின்றும்
நடைபெறுவன என நவிலாதொழிக.

பகலொளி வருங்கால் கிழக்குப் பலகணி
வழியான்மட்டு முள்வருவதன் றவ்வொளி
எதிரில் ஒளி வெகு மெதுவாய் எழும்புறுன்!
மேற்கே நோக்குக ; நிலமிளிர்கின்றது.

அவர் அவ்வளவு நன்றாக நேசித்த இந்நாட்டிற்கு நல்ல நாட்கள் உண்மையாகவே வருகின்றன. என்பதை அடுத்து வரும் எதிர்காலம் காட்டும். அவற்றின் வருகைக்காக உழைத்ததில் கோகலேக்குரிய பங்கு சிறியதன்று என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்.

PRINTED AT THE INDIA PRINTING WORKS, MADRAS.